KALKI
5.3.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

# கல்கி

குடும்பத்துடன் படிக்க...



"என் கோபம் தமிழ் சினிமா மீது!"



## சதம் காணும் செல்வக் களஞ்சியம்

+32 இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்

# வைரமுத்து சொன்னது சரியா?

- கடுகடுக்கும் கவிஞர்கள்

**Team Health Shoppe**
**For Wellness**

# உப்பில்லா உப்பு

### டீம் 'சோடியம் அல்லாத' உப்பு

உடலுக்கு தேவையான கால்சியம், மக்னீசியம் & பொட்டாசியம் உள்ளது.

### டீம் அரை உப்பு

சராசரி உப்பில் காணப்படும் அளவை விட குறைவான சோடியம்.

## டீம் உப்புகள்




நாள் ஒன்றுக்கு 2.4 கிராம் சோடியம், அதாவது 6 கிராம் வரை மட்டுமே உப்பை உணவில் சேர்க்க வேண்டும் என்பது டாக்டர்களின் பரிந்துரை. சமீபத்தில் நடத்திய ஆய்வின்படி, சோடியம் 1500 மில்லி கிராமுக்கு மிகாமல் உள்ள உப்பினாலான உணவை உண்ணும் மக்களுக்கு சீரான இரத்த அழுத்தத்தின் பலன்கள் அதிகமாகின்றது.

---


Source : www.nhlbi.nih.gov/hbp/prevent/sodium/sodium.htm

**TEAM EUBIO CARE**
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)
www.teamhealthshoppe.com
teamhealthshoppe@drraoholdings.com

**வண்டலூர் :**
டீம் ஹவுஸ்,
ஜி.எஸ்.டி. ரோடு,
சென்னை-48.
போன்: 2275 0502

**அண்ணாநகர் :**
பிளாட் 1200, Z பிளாக்,
6வது அவென்யு, சென்னை-40.
(கோகிலோ கராத்தே ஸ்கூல்
எதிர்புறம்) போன்: 4269 3332

**அடையார் :**
எண்.26, தரைதளம்,
கார்ப்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்,
3வது அவென்யு, இந்திரா நகர்,
சென்னை-20. போன்: 4269 5115


கல்கி
குடும்பத்துடன் படிக்க...
தேங்க்யூ மம்மி!
1.4.2007
இதழ்...
+16
இளம் தாய்க்கும் குழந்தைக்குமான அரிய தகவல்களைத்
தாங்கி வரும் அற்புதமான பெட்டகம்!
மிஸ் பண்ணிடாதீங்க!
கல்கி
இணைந்து வழங்குவோர்:
Born Babies
NEW BORN

# கை நிறைய வேலை!

சாலையில் நீங்கள் கடந்து செல்லும் ஒரு அரை மணி நேரத்தில் குறைந்த பட்சம் பத்து சேல்ஸ், மார்க்கெட்டிங் எக்ஸிகியூட்டிவ்களைப் பார்த்திருப்பீர்கள். அசத்தலான, அயர்ன் கலையாத சட்டை, கழுத்தில் அழகான டை, கையில் வெயிட்டாக ஒரு பை என்று எல்லாருடைய கவனத்தையும் ஒரு நொடியேனும் கவர்ந்திருப்பார்கள்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! எண்பதுகளின் இறுதியிலோ, தொண்ணூறுகளின் ஆரம்பத்திலோ உளுந்தம் பருப்புக்கு விளம்பரம் செய்தார்களா? அட, குடிக்கும் பச்சைத் தண்ணீருக்கு விளம்பரம் இருந்ததா? ஆனால், இன்று சாமிக்குக்கூட விளம்பரம் தேவைப்படுகிறது. 'மார்க்கெட்டிங்' என்கிற வியாபார முதுகெலும்பு இன்று ஆல்போல் தழைத்து அருகுபோல் வளர்ந்து கொண்டிருக்கிறது. மார்க்கெட்டிங் துறையில் சிறந்த அனுபவமுள்ள அருள்வேலை அவரது 'ஆட்மார்க் கம்யூனிகேச'னில் சந்தித்து, இந்தத் துறை யில் இருக்கும் வேலை வாய்ப்புகள் குறித்துக் கேட்டோம்.




"இன்று மார்க்கெட்டிங் துறை அசுர வளர்ச்சி அடைந்து வருகிறது. அதனால்தான் பல கல்லூரிகளில் மார்க்கெட்டிங் என்பதைத் தனி கோர்ஸாக வைத்துள்ளார்கள்.

இந்த நிறுவனத்தில்தான் மார்க்கெட்டிங் வேலைவாய்ப்பு இருக்கும் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எல்லா நிறுவனங்களிலும், எல்லாத் துறைகளிலும் மார்க்கெட்டிங் வேலைவாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. சம்பாதிப்பவர்களை வாங்கும் சம்பளத்தின் அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். Drawing Salaried, Earned Salaried. Drawing Salaried க்ரூப்பில் வருபவர்களுக்கு இந்த வருடம் இவ்வளவுதான் இன்க்ரிமெண்ட், ஹெச்.ஆர்.ஏ. சி.சி.ஏ. என்று தெரியும். ஆனால் earned salaried க்ரூப்பில் வருகிற மார்க்கெட்டிங் எக்ஸிகியூட்டிவ்களுக்கு அவர்கள் திறமை, உழைப்பின் பயன் உடனே பெருந்தொகையாகக் கைக்கு வந்துவிடும்.

அதேபோல் பதவி உயர்வும் இந்தத் துறையில் உடனே கிடைக்கும். ஏனென்றால் 'என் நிறுவனம் என்னால் இத்தனை தூரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது; என்னால் இத்தனை ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது' என்று ஒரு மார்க்கெட்டிங் எக்ஸிகியூட்டிவால் மார் தட்டிச் சொல்ல முடியும்.

அதனால்தான் இன்று



பெட்டிகோட், நைட்டி போன்ற ஆடை நிறுவனங்கள்கூட தங்களுக்கென்று ஒரு பிராண்ட், மார்க்கெட்டிங் டீமை வைத்திருக்கின்றன.

ஒரு நல்ல மார்க்கெட்டிங் எக்ஸிகியூட்டிவுக்கு, தான் சொல்ல வருகின்ற விஷயத்தை முழுமையாகவும் சரியாகவும் விரைவாகவும் சொல்லத் தெரிகிற 'கம்யூனிகேஷன் ஸ்கில்' வேண்டும்.

'ஐயோ அலைகிறேனே' என்று எண்ணாமல் 'என் தொழில் மார்க்கெட்டிங்' என்ற பெருமிதம் வேண்டும். இது எல்லாத் துறையினருக்கும் பொருந்தும். அப்போதுதான் உற்சாகத்தோடு வேலை செய்ய முடியும்.


எல்லா நிறுவனங்களிலும், எப்போதும் இவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பில் 'வேகன்ஸி' இருந்து கொண்டே இருக்கும்.

'கஸ்டமர் இஸ் கிங்' என்கிற சிந்தனையை விட அந்த கஸ்டமரிடம் சிறந்த பொருட்களைக் கொண்டு சேர்க்கிற எங்களை 'கிங்' என்று சொன்னால் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

இன்றைய தேதியில் இந்தியாவில் இருக்குற அத்தனை சேல்ஸ் எக்ஸிகியூட்டிவ்களும் ஒரே ஒரு நாள் ஸ்ட்ரைக் செய்தால் இந்தியாவின் பொருளாதாரம் நிச்சயமாகப் பாதிக்கப்படும். அந்த அளவுக்கு இந்தத் துறை பலம் வாய்ந்தது. உழைக்கத் தயங்காதவர்கள், நல்ல பேச்சுத் திறமை உள்ளவர்கள், மற்றவர்களோடு அட்ஜஸ்ட் செய்துகொள்ளக்கூடிய மனப் பக்குவம் உள்ளவர்களை கை நிறைய வேலையோடு வரவேற்றுக் கொண்டே இருக்கும்."

**-சுகந்தி ஜி.பாரதி**

படம் : பொள்ளாச்சி சுந்தரம்



அருள்வேல் ●


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
**லக்ஷ்மி நடராஜன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
**சீதா ரவி**

தலைமை உதவி ஆசிரியர் :
**மு.மாறன்**

வடிவமைப்பு :
**எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்**
**எம். மோகன், ச. கார்த்திகேயன்**

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
**ஒரு வருடம் : ரூ.440/-**
**ஆறு மாதம் : ரூ.220/-**
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 **யு.எஸ். டாலர்**

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



**இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.**

* விவேகா



# வைரமுத்து

**அது ஒரு விழா மேடை. 'இன்றைய இளம் பாடலாசிரியர்கள் பாட்டிலுடன் கவிதை எழுதுகிறார்கள். எனவே அந்தப் பாடல் அவர்களுக்குச் சொந்தமானதல்ல' என்கிற ரீதியில் பேசுகிறார் பாடலாசிரியரும் கவிஞருமான வைரமுத்து. இது மறுநாள் தினசரிகளில் வந்துவிட, அங்கே இங்கே என்று சலசலப்புகள் ஆரம்பித்துவிட்டன. வைரமுத்து சொன்னது சரியா? இளம் பாடலாசிரியர்களிடம் கேட்டோம்.**

**விவேகா:** ஒட்டுமொத்த கவிஞர்களையும் குறை கூறுவது ஏற்க முடியாத செயல். மது பக்கமே போகாத என்னைப் போன்றவர்களை இப் பேச்சு அவமானப் படுத்துவதாக உள்ளது. யார், யார் மது அருந்துகிறார்கள் என்கிற ஆய்வு தேவையற்றது. இளம் கவிஞர்களின் வளர்ச்சியில் உண்மையிலேயே அக்கறை இருந்தால், தனிப்பட்ட முறையில் அறிவுரை வழங்கியிருக்கலாம். இப்படிக் குற்றம் சாட்டுவது சரியான அணுகுமுறையாக எனக்குப் படவில்லை.

**சிநேகன்:** சென்ற தலைமுறை கவிஞர்களைவிட, இன்றைய தலைமுறை கவிஞர்கள் திறமையானவர்கள்; உழைக்கத் தெரிந்தவர்கள்; பிழைக்கத் தெரிந்தவர்கள். எல்லாக் கவிஞர்களையும் குற்றம் சாட்டியிருப்பது கண்டிக்கத்தக்கது.

**குகை மா. புகழேந்தி:** சரக்குள்ள பாடல்கள் பலவற்றை எழுதுகிற இன்றைய இளங்கவிஞர்களை, சரக்குப் பாட்டில் இருந்தால்தான் எழுதவே ஆரம்பிக்கிறார்கள் என்று வைரமுத்து பேசியிருப்பது மிகவும் துரதிருஷ்டமானது.

வேறு ஏதோ ஒரு கோபம் அவர் பேச்சு மூலம் வெளிப்படுவதாகவே நான் நினைக்கிறேன். எந்த இளைய தலைமுறைக் கவிஞனும் அவரை விமர்சிக்க, குற்றஞ்சாட்டத் தயாராக இல்லாதபோது, விஷம் தெளிக்கும் விதமாக அவர் பேசியுள்ளார். புத்திமதி என்றுகூட எங்களால் இதை எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், தன் மகன் மீது குறையிருந்தால், அதைத் திருத்த எந்தத் தகப்பனும் மேடை போட்டுச் சொல்ல மாட்டான். வைரமுத்து யாரையும் பாராட்ட மாட்டார். இந்த ஆராவாரத் தூற்றல் எங்களை எரிச்சல் படவே வைக்கிறது!

* ஆண்டாள் பிரியதர்ஷினி



**கபிலன்:** எப்போதாவது சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது இவற்றால், எந்தக் கவிஞனும் கெட்டுப் போகப் போவதில்லை. தண்ணியடித்தால் என்ன...

பாடல்கள் தள்ளாடாமல் இருந்தால் சரி!

**யுகபாரதி:** அவர் மது அருந்துகிறவர்களைப் பற்றித்தான் பேசியிருக்கிறார். நான் மது அருந்துவதில்லை. எனவே, அந்தச் செய்திக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

**அறிவுமதி:** கவிஞர்களிடையே ஒற்றுமை இருக்கவேண்டும் என விரும்புபவன் நான். அந்த ஒற்றுமை குலைய வேண்டாம் என்று நினைக்கிறேன். எனவே மேற்கொண்டு பேச விரும்பவில்லை.

**ஆண்டாள் பிரியதர்ஷினி:** இளைய தலைமுறை மீது அக்கறை இருக்கும்



# சொன்னது சரியா?

## –கடுகடுக்கும் கவிஞர்கள்

பட்சத்தில், சம்பந்தப்பட்ட கவிஞரை தனிப்பட்ட முறையில் கனிவாகக் கண்டிக்க வைரமுத்துவுக்கு உரிமை உண்டு. ஆனால், விழா மேடையில் ஒருவரின் தனிப்பட்ட விஷயத்தைப் பொதுமையாக்கிப் பேசுவது தேவையில்லாதது.

இப்படிப் பொதுவாகப் பேசுவது தொழில்போட்டியில் வரும் பொறாமையுணர்வுப்பேச்சோ என்ற யூகத்துக்கு வழி வகுத்துவிடும்.

**எம்.ஜி.கன்னியப்பன்:** 'இன்றைய கவிஞர்கள் குடித்துவிட்டுப் பாடல் எழுதுகிறார்கள், குடிக்காமல் எழுதுகிறார்கள்' என்பது வைரமுத்துவுக்கு ஒரு பிரச்



* நா.முத்துக்குமார்
* தாமரை
* சிநேகன்

னையே இல்லை. 'ஒரு படத்துக்கான ஒட்டுமொத்த பாடல்களையும் எனக்கே கொடுங்கள்' என்று கேட்கும் உரிமை தனக்கு மட்டுமே உண்டு என அவர் எண்ணிக் கொண்டிருக்கையில், இன்னொரு கவிஞரும் அப்படிக் கேட்பதை அவரால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? அந்தக் கோபத்தை நேரடியாகப் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லாமல், ஒட்டுமொத்த இளம் கவிஞர்களைச் சாடினால், போய்ச் சேர வேண்டிய கவிஞனைச் சேருமே என்பதற்காகத்தான் அப்படிப் பேசியிருக்கிறார்.

தனக்கென ஓர் எல்லையை நிர்ணயித்துக்கொண்டு, 'எல்லை தாண்டி வந்தாயென்றால் பார்' என்று எச்சரிக்கை விடுவது என்பது நாடுகளிடையே வேண்டுமானால் இருக்கலாம், பாடலாசிரியர்

"யாரோ ஒருவரை மனத்தில் வைத்துக் கொண்டு எல்லோரையும் பொத்தாம் பொதுவாக இழிவாகப் பேசுவதென்பது தவறான காரியம். வளர்ந்து வருகிற இளங் கவிஞர்களை வாழ்த்தும் ஸ்தானத்தில், தங்களை வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, அவர்களை வைரிகளாகக் கருதுகிற மனோபாவம் குரூரமானது!"

**க**விஞர் வைரமுத்துவின் கருத்தறிய அவரைத் தொடர்பு கொண்டபோது அவருடைய உதவியாளர், "நீங்கள் கேட்பதற்கு, கவிஞர் ஈரோட்டு லயன்ஸ் கிளப்பில் பேசிய அந்த ஆடியோ கேசட்தான் பதில். அதையே பதிலாகப் போட்டுக் கொள்ளுங்கள். திரித்து வெளியிடும் பத்திரிகைகளின் செய்தியினை வைத்துக் கொண்டு கேட்காதீர்கள். இது குறித்து



• மு.மேத்தா



• எம்.ஜி.கன்னியப்பன்



• குகை மா.புகழேந்தி

களிடையே இருக்கக்கூடாது.

**நா.முத்துக்குமார்:** இதைப் பற்றி நான் கருத்துக் கூற விரும்பவில்லை.

**தாமரை:** படைப்பாளியாக இருந்தால் மட்டும் என்ன? யாராக இருப்பினும் வாழ்நாளில் தவிர்க்க வேண்டிய, எதிர்க்க வேண்டிய, ஒழிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம் மது.

**இதைப் பற்றி மூத்த தலைமுறைக் கவிஞரான மு.மேத்தா என்ன சொல்கிறார்?**

கவிஞர் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமோ தருவதற்கு ஒன்றுமில்லை" என்றவர், ஈரோட்டு தொலைபேசி எண்ணைத் தந்தார். நமது தொடர்ந்த அழைப்புக்கு ஈரோட்டிலிருந்து பதிலில்லை என்ற விஷயத்தை மறுபடியும் கவிஞரின் உதவியாளரிடம் கூறினோம். ஆனால் அவர் மூலம் ஆடியோ கேசட்டோ, கவிஞரின் மறுப்போ இந்த இதழ் அச்சாகும்வரை கிடைக்கவில்லை.

**- சுமதி, அருணாஸ்**

*அட்டை, படங்கள்:* **ஸ்ரீஹரி**

# தன்னார்வத் தொண்டர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு...

உதவும் கரங்கள் என்ற தொண்டு நிறுவனம் ஆதரவற்ற குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் அடைக்கலம் கொடுத்துக் காப்பாற்றிவருவது குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். பொதுமக்களின் நன்கொடையைக் கொண்டு இயங்கிவரும் இந்த அமைப்பு, பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பெண்கள், முதியவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டோர், மூளை வளர்ச்சி குறைந்த குழந்தைகள், ஆகிய 1800 பேர் கொண்ட மாபெரும் குடும்பத்தைப் பல ஆண்டுகளாக ஆதரவளித்துக் காப்பாற்றி வருகிறது. இந்த அன்புப் பணியில் ஆர்வத் தொண்டர்களாகச் சேர்ந்து பணியாற்ற உங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

35 வயது முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். உணவும் தங்குவதற்கான வசதியும் கிடைக்கும். அதோடு உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 அளிக்கப்படும். ஆதரவற்ற மக்களுக்கு அன்புடன் தொண்டாற்றும் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

பிள்ளைகளைப் பேணிக் காப்பதற்கு தாய்மார்கள், உடனிருந்து ஆதரவளிப்போர், ஆசிரியர்கள், காவலர்கள், சமையற்காரர்கள், செவிலியர்கள், தோட்டக்காரர்கள், உதவியாளர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி.

**உதவும் கரங்கள்**
460 என்.எஸ்.கே.நகர்
அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்கள் 26216321 26260818
99401 88011




உதவும் கரங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் 80 ஜியின் கீழ் வரி விலக்கு உண்டு.

### ஆரம்பம்...

# ஒரு லட்ச ரூபாய் பரிசுப் போட்டி

## கேளுங்கள்! வெல்லுங்கள்!



• தொடர்ந்து மூன்று வாரங்கள் இந்த சினிமா க்விஸ்ஸில் மிஸ் பண்ணாமல் கலந்து கொள்ளுங்கள்.

• மூன்றாவது வார கூப்பனோடு ஒரு வி.ஐ.பி.யிடம் நீங்கள் கேட்க விரும்பும் அசத்தலான கேள்வி ஒன்றைக் கேளுங்கள். அந்த வி.ஐ.பி. யார் என்று அடுத்த வாரம் சொல்கிறோமே!

பரிசுப் போட்டிகளை அள்ளிவிட ஆரம்பிச்சுட்டோம்!

துள்ளிக் குதிச்சு மகிழ்ச்சியோட கலந்துக்க ரெடியாயிட்டீங்களா?

• நீங்க செய்ய வேண்டியதெல்லாம் எதிர்ப் பக்கத்தில் சரியான விடைகளை டிக் செய்து பத்திரமாகக் கத்தரித்து வைத்துக் கொள்ளுங்கள்.

மூன்று வாரங்களிலும் சரியான விடைகளோடு, அசத்தலான கேள்வியையும் கேட்கும் 6 நபர்களை அந்த வி.ஐ.பி. தேர்ந்தெடுப்பார். அவர்களுள் அசத்தலோ அசத்தலான கேள்வியைக் கேட்ட வாசகர் ஒருவருக்கு மெகாப் பரிசாக கலர் டி.வி.யும், மற்ற ஐந்து பேருக்கு ஆறுத பரிசுகளும் வழங்கப்படும்.

# போட்டி-1 பகுதி-1

1. 'சலாம் பாம்பே' படத்தின் இயக்குநர்...

☐ தீபா மேத்தா ☐ மீரா நாயர் ☐ சுஹாசினி

2. மணிரத்னத்தின் 'அஞ்சலி' படத்தின் கேமராமேன்...

☐ பி.சி. ஸ்ரீராம் ☐ மது அம்பாட் ☐ பாலுமகேந்திரா

3. விஜய்யின் 'போக்கிரி' எந்தப் படத்தின் ரீமேக்?

☐ கன்னடம் ☐ மலையாளம் ☐ தெலுங்கு

4. 'வாஸந்தியும், லக்ஷ்மியும் பின்ன ஞானும்' மாலையாளப் படம் தமிழில்...

☐ காசி ☐ சேது ☐ பிதாமகன்

5. பாடகி சித்ராவுக்கு தேசிய விருது வாங்கித் தந்த முதல் படம்...

☐ சிந்து பைரவி ☐ நாயகன் ☐ தளபதி

• ஜெராக்ஸ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

• ஆசிரியரின் தீர்ப்பே இறுதி • கடைசி தேதி 18.4.2007

**கேளுங்கள்; வெல்லுங்கள் போட்டி - 1 பகுதி - 1**

பெயர்: ..............................................................................

முகவரி:..............................................................................

..............................................................................

தொலைபேசி:.................................... இ.மெயில்:....................................



பரிசுப் போட்டிகள் அடுத்த வாரமும் தொடரும். மிஸ் பண்ணிடாதீங்க!

❖ தேர்தல் ❖

இதற்கு முன் இல்லாத அளவுக்கு ஏழு கட்டத் தேர்தலை உ.பி.யில் அறிவித்திருக்கிறது தேர்தல் கமிஷன். அட்டவணை ஏப்ரல் ஏழாம் தேதி தொடங்கி மே மாதம் எட்டாம் தேதி வரை நீளுகிறது. மே பதினொன்றாம் தேதி வோட்டு எண்ணிக்கை. ஒரு வாரத்துக்கு முன்னால் தலைமை தேர்தல் கமிஷனர் வந்தபோது, காங்கிரஸ் தடாலடியாக தலைமைச் செயலாளரையும், மாநில டி.ஜி.பி.யையும் மாற்றுவதற்கு தேர்தல் கமிஷன் உத்தரவிட வேண்டும் என்று கோரியிருக்கிறது. பி.ஜே.பி. தன் பங்குக்குக் கடந்த நான்கு மாதங்களில் மாநில அரசு செய்த அனைத்துப் பணி மாற்றங்களும் திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டிருக்கிறது. முலாயம் அரசு செய்த பதவி மாற்றங்கள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறது தேர்தல் கமிஷன்.



* முலாயம்சிங் யாதவ்

முலாயமை எப்படியாவது டிஸ்மிஸ் செய்து விட்டு ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வர காங்கிரஸ் தலைகீழாக நின்றபோது, யாருமே எதிர் பார்க்காத சமயத்தில் தேர்தல் கமிஷன் உள்ளே நுழைந்து தேர்தல் நடவடிக்கைகளைத் தொடங்கி விட, எல்லா அரசியல் கணக்குகளும் தாறுமாறாய்ப் போனது. தமது நாற்பத்திரண்டு மாத ஆட்சிக் காலத்தில் 22ஆவது முறையாக நம்பிக்கை வாக்கெடுப்பில் 'வெற்றி பெற்று' முலாயம்சிங் இன்னமும் தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார் என்றாலும் அவருக்குச் சரியான போட்டியாக இருக்கிறார் மாயாவதி.

தேர்தல் கமிஷன் 403 சட்டமன்ற தொகுதிகளையுமே சென்ஸிடிவான தொகுதிகளாக அறிவித்திருக்கிறது. கடந்த கால தேர்தல்களை மனதில் கொண்டு தொகுதி வாரியாக விவரமான ரிப்போர்ட் தயார் செய்து, ஒரு மதிப்பீட்டு எண் வழங்கச் சொல்லியிருக்கிறது. வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வரும்போது, வேட்பாளரைச் சேர்த்து ஐந்து நபர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. அந்நாளில் நடத்தும் ஊர்வலங்கள் மனுத் தாக்கல் செய்யும் அலுவலகத்திலிருந்து நூறு அடிக்கு முன்னாலேயே நின்றுவிட வேண்டும். தேர்தல் பணியாளர்கள் புகைப் படத்துடன் கூடிய அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும். அவர்கள் வாக்குச் சாவடிக்குள் வரக்கூடாது. துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள் உள்ள எந்த அரசியல்வாதியும் வாக்குச் சாவடிக்கு வருவது குற்றம் என்றெல்லாம் தொடரும் தேர்தல் கமிஷனின் நடவடிக்கைகள் சபாஷ் போட வைக்கின்றன.

# சபாஷ் கமிஷன்!



* மாயாவதி

கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது, உ.பி.யில் இந்த முறை அரசியல் கட்சிகள் தனித்தனியாக நின்றால், தேர்தல் முடிவுகள் சிக்கலாகவே போகும்.

- எம்.ஆர்.நடராஜன்

# சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்

ஜோதிடத்தில் 50 வருட அனுபவம் கொண்ட
"ஜோதிட வாணி"

**ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்**

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து, சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம், அனைத்தும் பார்க்கப்படும்.

அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

வெளியூரில் வசிப்பவர்கள் அதிகபட்சமாக 5 கேள்விகள் வரை கேட்க ரூ.500/- கட்டணத்தை முன்னதாகவே அனுப்பவும்.

V. சரோஜா, 45/18, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மேற்கு மாம்பலம்,
அயோத்யா மண்டபம் அருகில்,
பிள்ளையார்கோவில் அருகில் உள்ள தெரு.
**Ph: 23716892, Cell: 9444230523, 9444684006, 9444506218**

---

BrahminsMatrimony **www.brahminsmatrimony.com**

பிராமண பெற்றோர்களே!
தங்கள் மகள் / மகன் சப்தபதி கண்டு சதிபதியாக வேண்டுமா?

## பிராமின்ஸ் மேட்ரிமோனி டாட் காம்
(பிராமணர்களுக்கான திருமண இணையதளம்)

**இணைய தளத்தில் பதிவு செய்து பயனடைவீர்!**

**நியாயமான கட்டணம்! நிறைவான பலன்!!**

எங்கள் இணைய தளத்தில் பதிவு செய்து 22.02.2007 அன்று மணமாலை கண்ட ஸ்ரீ ரவிச்சந்திரன் ஸ்ரீமதி சுநந்தா தம்பதியரை மனமார வாழ்த்துகிறோம்.

www.brahminsmatrimony.com அமைப்பினர்



மேலும் விபரங்களுக்கு **என்.வெங்கட்ராமன்,**
S/o ப்ரும்மஸ்ரீ. (லேட்) எஸ்.நாராயண கனபாடிகள் (எ) குஞ்சு வாத்தியார்,
42, சிதம்பர அக்ரஹாரம், காரைக்குடி - 630 001
போன் : 04565 - 234496 செல் : 944204 3570

❖ ஸ்டெம் செல் ❖

• ரவிக்குமார்



# உயிர் காக்கும்

"அக்பர் அலி இருபத்திரண்டு வயது இளைஞர். நான்கு அடுக்கு மாடியிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட, முதுகுத் தண்டில் அடி பட்டு பாதிப்பு. நரம்புகள் கடுமையாகச் சேதமாகியிருந்ததால் இடுப்புக்குக் கீழே இரண்டு கால்களும் செயலிழந்து விட்டன. இயற்கை அழைப்புகள் கூட இயற்கையாக இல்லாத நிலை. ஆபத்தான கண்டிஷனில் எங்கள் மருத்துவமனைக்கு வந்தவர், இன்றைக்கு நலமாக இருக்கிறார். எல்லாம் நவீன ஸ்டெம் செல் சிகிச்சையின் உதவியால்தான்" என்கிறார் டாக்டர் ரவிக்குமார், ஸ்டெம்செல் சிகிச்சையில் இவர் நிபுணர்.

"இதற்கு முன் முதுகுத் தண்டுவடப் பாதிப்புகளுக்குத் தகுந்த சிகிச்சை இல்லாமல் பல நோயாளிகள் தத்தளித்து வந்தனர். இனி, கவலைப்படத் தேவையில்லை. ஸ்டெம் செல் சிகிச்சை அவர்களுக்கு வரப்பிரசாதமாக வந்து விட்டது" என்றவர், அக்பர் அலிக்கு ஸ்டெம் செல் சிகிச்சை அளிக்கப்பட்டதை விவரித்தார்.

"அக்பர் அலி மருத்துவமனையில் சேர்ந்ததும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், எஸ்.எஸ்.இ.பி. எனப்படும் நரம்புப் பரிசோதனை ஆகியவற்றைக் கொண்டு அவரது தண்டுவடம் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறதென்று கண்டறிந்தோம். 'ஸ்டெம் செல்' சிகிச்சை அளிப்பதென்று தீர்மானித்தவுடன், மாலிக்குலர் பயாலஜிஸ்ட், கார்டியாலஜிஸ்ட், நுரையீரல் சிறப்பு மருத்துவர், நியூராலஜிஸ்ட்டின் உதவிகளை நாடினோம். இவர்கள் அனைவரது ஒத்துழைப்புடன் அக்பர் அலியின் எலும்பு மஜ்ஜையிலிருந்து ஸ்டெம் செல்லை எடுக்கத் தீர்மானித்தோம்.

நமது உடலில் ஏதாவது ஓர் இடத்தில் அடியோ, பாதிப்போ ஏற்பட்டால் அந்த இடத்தில் இருக்கும் செல்கள் அழிந்துவிடும். அந்த செல்களை ஈடுகட்ட உடம்பின் மற்ற பகுதியிலுள்ள செல்கள், பாதிப்படைந்த இடத்துக்குச் சென்று சமன் செய்து விடுகின்றன. இந்த செல்கள் ஒன்றோடொன்று தொடர்புகொள்ள நமது உடலில் உள்ள 'சைட்டோகைன்ஸ்' எனும் அமிலம் உதவுகிறது. பாதிப்பு பெரிய அளவில் இருக்கும்போது செல்லில் பற்றாக்குறை ஏற்பட்டு, அதனால் அந்த உறுப்பின் செயல்பாடே நின்று விடுகிறது. நோயாளியின் உடம்பில் பாதிப்படைந்த பகுதியில் ஸ்டெம் செல்களைச் செலுத்துவதன் மூலம், உறுப்பு செயலிழப்பது தவிர்க்கப்படுகிறது. இந்த அடிப்படையில்தான் அக்பர் அலிக்கு சிகிச்சை செய்தோம்.

> **"மக்கள் இந்த சிகிச்சைக்குத் தரும் ஆதரவு மகத்தானது. ஸ்டெம் செல் புரட்சி தொடரும்!"**

அவரது எலும்பிலுள்ள ஸ்டெம் செல்லை எடுத்து, பாக்டீரியா எதுவும் பாதிக்காதவாறு பிரத்யேக கண்டெய்னரில் பாதுகாப்பாக வைத்து, ஆறிலிருந்து எட்டு மணி நேரத்துக்குள், பாதிக்கப்பட்ட அவரது முதுகுத் தண்டுவடப் பகுதியில் செலுத்தினோம். நாளடைவில் அங்கு செல் வளர்ச்சி சீரடைந்து, புதிய செல்கள் தோன்ற

ஆரம்பித்தன. அதுவே அவரது பிரச்னைக்கான மிகச் சிறந்த மருந்தாக அமைந்து விட்டது.

முதுகுத் தண்டுவடப் பாதிப்பு என்றில்லை... இதய நோய், நுரையீரல் பிரச்னை, சர்க்கரை வியாதியால் உடலுறுப்புகள் பாதிப்பு நேரும் போது, இரத்தப் புற்று

# சிகிச்சை!

நோய், இரத்தம் உறைதல் போன்றவற்றுக்கு ஸ்டெம் செல் சிகிச்சை உயிர் காக்கும் மருத்துவமாக இருக்கும்."

ஸ்டெம் செல்



**சிகிச்சையில் மைனஸ் என்ன?**

"இரத்தப் புற்றுநோய், தலசீமியா போன்ற இரத்த சம்பந்தமான நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்டெம் செல்களைப் பயன்படுத்த முடியாது. ஆனால் ப்ளட் குரூப் போன்று ஒவ்வொருவருடைய செல்லுக்கும் 'HLA' எனப்படும் குறியீடு உள்ளது. இந்தக் குறியீடு ஒத்துப் போகும் வேறொருவருடைய செல்லைக் கொண்டு குணப்படுத்தலாம். அறுபது வயது மேற்பட்டவர்களுக்கு இந்த சிகிச்சை முழுப்பலனை அளிக்காது."



• ஸ்டெம் செல்

**மக்களிடம் இச்சிகிச்சைக்கு எந்த அளவுக்கு வரவேற்பு உள்ளது?**


"இந்தச் சிகிச்சை முறைக்கு மக்கள் தந்த ஆதரவு மகத்தானது. அறிவித்த சில நாட்களிலேயே பலர் எங்களை முதுகெலும்புப் பிரச்னைகளுக்காக அணுகியுள்ளனர். உடனடியாகப் பதினைந்துக்கும் மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. ஐந்து நுரையீரல் சிகிச்சைகளையும் ஐந்து இதயம் சார்ந்த சிகிச்சைகளையும்கூட அளித்துள்ளோம். இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் இச்சிகிச்சைக்காக எங்களை நாடி வருகிறார்கள். ஸ்டெம்செல் புரட்சி தொடரும்'' என்கிறார், டாக்டர் ரவிக்குமார்.

**- ப்ரியா**

படம்: **சுந்தரம்**



# கல்கி




2007 மார்ச் 25

விய பங்குனி 11

மலர் : 65

இதழ் : 34


தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிட்டி பாப்பா

\- பாரதியார்

## கிரிக்கெட் வெற்றியும் கடல்சார் பல்கலையும்!

கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் எம்.பி.க்கள் குறுகிய சிந்தனையில் சிக்குண்டது வேதனையிலும் வேதனை! பொதுவாக, கட்டுப்பாடும் சீரிய சிந்தனையும் கொண்ட கட்சியினரின் ஒழுங்கு சிதறியிருக்கிறது. நாடாளுமன்றத்தில், கடல்சார் பல்கலைக்கழகம் தொடர்பான மசோதா தாக்கல் செய்யப்படுவதையே சகிக்க முடியாமல் அக் கட்சி உறுப்பினர்கள் ரகளை செய்தது யாரும் எதிர்பாராத ஒன்று!


"கூட்டணி தர்மத்தை இப்படி விகாரமான முறையில் மாசுபடுத்தி வரலாறு படைத்துள்ளனரே!" என்று எதிர் கட்சித் தலைவர் அத்வானி இடித்துரைக்க இடமளித்து விட்டது இச் சம்பவம்.


ஆனால், இந்தத் துர்ச்சம்பவத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தது பிராந்திய நோக்கே அன்றி அரசியல் நோக்கு அல்ல.

"சி.பி.எம். எம்.பி.க்களின் நிலைப்பாடு தவறானது. 'மே. வங்கத்துக்குக் கடல்சார் பல்கலைக்கழகம் வேண்டும்' என்று உரிமையுடன் அவர்கள் கேட்கட்டும்; ஆனால், தமிழகத்துக்கு வர வேண்டியதை எவ்வாறு தடுத்து நிறுத்த முற்படலாம்!" என்று கோபப்பட்டிருக்கிறார் ராமதாஸ்!

பா.ம.க. தலைவரின் கண்ணோட்டமும் சரி, அமைச்சர்கள் உள்ளிட்ட தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் நோக்கும் சரி, ஆரோக்கியமற்ற குறுகிய பார்வையாக இருக்கின்றன.

மேற்குவங்க எம்.பி.க்களாவது தங்கள் செய்கைக்காக






வருந்தி மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள், கௌரவம் பாராமல். அதனினும் பெருந்தன்மைமிக்கது மக்களவைத் தலைவர் சோம்நாத் சாட்டர்ஜியின் வருத்தம். தமது கட்சி உறுப்பினர்களின் நடத்தைக்காக அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

கைகலப்பு, ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு மசோதா தாக்கலாகி நாடாளுமன்ற தேர்வுக் கமிட்டியிடம் எடுத்துச் செல்லப்படவிருக்கிறது. அமைச்சர்கள் உள்ளிட்ட தி.மு.க. எம்.பி.க்களும் தமிழ்நாட்டுத் தலைவர்களும் இந்த விஷயத்தில் மே. வங்கத்திடம் விட்டுக் கொடுத்திருந்தால் தமிழகம் ஏழையாகிப் போயிருக்காது. மாறாக, நமது மாநிலத்தின் கௌரவம் உயர்ந்து, நல்லெண்ணம் பெருகியிருக்கும்.

ஆனால், "தி.மு.க. ஆட்சியில் தெற்கு வளர்ந்து வடக்கு வாடுகிறது" என்று முதல்வரே பெருமையடித்துக் கொள்ளும் போக்கு இங்கே நிற்கிறபோது அதை எப்படி எதிர்பார்க்க முடியும்!

இந்தியாவின் எந்தப் பகுதியில் ஒரு கடல்சார் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டாலும் அது பெருமைக்குரியதே. அனைத்து வசதி-வாய்ப்புகளும் நமது மாநிலத்துக்கே கிடைக்க வேண்டும் என்று எண்ணுவது சரியல்ல. நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய அமைச்சர்களுமே இப்படிப்பட்ட குறுகிய மனப்பான்மையில் சிக்குண்டால் மக்கள் மனத்தில் பிராந்திய வெறிதான் வளரும்.

தமிழகத்து மாணவர்கள் மேற்கு வங்கத்துக்குப் போய்ப் பயில்வதும் மேற்கு வங்கத்து மாணவர்கள் இதர மாநிலங்களுக்குச் செல்வதும் வரவேற்கப்பட வேண்டிய விஷயம் மட்டுமல்ல; அவசியமான பரிமாற்றமும் கூட. இதுபோன்ற பரிமாற்றங்களால்தான் தேசிய உணர்வு வலுப்பட முடியும். தேசிய உணர்வு வலுவாக இருந்தாலன்றி இந்தியா முன்னேற முடியாது.

எம்.பி.க்களின் தேசிய உணர்வு இந்திய கிரிக்கெட் அணியை வாழ்த்துவதோடு நின்றுவிட்டால் என்ன பயன்! மத்திய அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடுதழுவி சிந்திக்க வேண்டும்; தங்கள் மாநிலங்களுக்காக மட்டும் அல்ல. ○

# ❖ ஜனங்களின் சாமி ❖

வேம்பாளம்பட்டியில பெரியாங்கோனார், கிளியாங்கோனார்னு அண்ணன் - தம்பிங்க இருந்தாங்க. அவங்களுக்கு ஒரு 'கிடை' ஆடு இருந்துச்சு. அவங்க ஊர்ல ரெண்டு மூணு வருசமா மழை பெய்யல. குடிக்க, குளிக்கத் தண்ணிக்குக்கூட ரொம்பக் கஸ்டமாயிட்டு. பிறகு ஆடு, மாடுகள் என்ன செய்யும்?

சரி, இனிமேலும் நம்ம காட்டுல ஆடுகளை வச்சிக் காப்பாத்த முடியாதுன்னு நினைச்ச கோனாருங்க, மூன்றடைப்பு பக்கத்துல உள்ள மலையான்குளம்ங்கிற ஊருக்கு வந்தாங்க.

மலையான்குளத்துல மாறநாடார், மாணிக்க நாடார்னு அண்ணன் - தம்பிங்க இருந்தாங்க. அவங்களுக்குச் சொந்தமா மலையான்குளத்தைச் சுத்தி ஏகப்பட்ட நஞ்சைக் காடுகளும், புஞ்சைக் காடுகளும் இருந்துச்சு. நிலத்துல ஆடுகளை கிட போட அவங்ககிட்ட அனுமதி கேட்டு, அங்க கிட போட்டாங்க கோனார்ங்க.

அந்த ஊர்ல மாடத்தி அம்மாள்னு ஒருத்தி இருந்தா. அவளுக்குக் கல்யாணமாகி புருசங்காரன் சின்ன வயசுலயே போய்ச் சேர்ந்துட்டான். பிழைப்புக்காக ஒரு செம்மறி ஆட்டுக் குட்டியைப் பிடிச்சி, தோட்டம் தொரவுகளுக்குப் பத்திக்கிட்டுப் போயி மேச்சிக்கிட்டு இருந்தா.

அந்த ஊர்ல ஒவ்வொரு வீடும் அய்யனார் கோயிலுக்கு ஒரு ஆட்டுக் கிடாயை நேர்ந்து விட்டுக் கோயில் கொடை வரைக்கும் வளர்ப்பாங்க. மாடத்தி ஒத்தைக் கிடாயை மட்டும் கை வளப்பா வளக்கிறதைப் பார்த்துட்டு, அக்கம் பக்கத்து வீடுகள்ல உள்ளவங்களும் ஆளுக்கொரு கிடாவைக் கொடுத்து 'வளர்த்துத் தாயேன்'னாங்க.

காசு, பணம் கிடைக்குமேன்னு நினைச்ச மாடத்தியம்மாள் 'சரி'ன்னாள்.

கோனார்களின் ஆடுகள், ரெண்டு வள்ளம் மூணு வள்ளம் இருக்கும். அத்தனையும் பொட்டை ஆடுகள். இனத்துக்கு ஒண்ணோ, ரெண்டோ கிடாய்கள்தான் ஆட்டு மந்தையில் கிடந்தன.

மாடத்தி தான் வளர்க்கும் கிடாய்களை கோனார் ஆட்டின் பக்கம் விடாமல் காபந்து பண்ணியே வளர்த்தாள்.

மழைக் காலம் வந்தது. கோடை மழை எல்லாப் பக்கமும் பெஞ்சுது. காடு கரையெல்லாம் புல் முளைத்தது. வேம்பாளம்பட்டியிலும் பூமி செழித்தது. அதனால மலையான்குளத்துல இருந்து ஆட்டு மந்தைகளைப் பத்திக்கிட்டு சொந்த ஊருக்குப் புறப்பட்டாங்க கோனாருங்க.

ஆட்டு மந்தையை கோனார்கள் பத்திக்கிட்டு வரும்போது, ஆட்டு மந்தையோடு சேர்ந்து மாடத்தியம்மாள் மேய்க்கும் கிடாய்களும் போயிட்டு. இதை மாடத்தியம்மாள் கவனிக்கலை.



11

**கழனியூரன்**

# மாடத்தி அம்மாளின் சாபம்!

ஆட்டு மந்தையோடு ஏழெட்டுக் கிடாய்கள் சேர்ந்து வந்ததை கோனார்கள் கவனிச்சும், கண்டுக்காதது மாதிரி உட்டுட்டாங்க.

தூக்கம் கலைஞ்சி மாடத்தியம்மாள் கண் விழிச்சிப் பார்த்தாள். கிடாய்கள் ஒண்ணையும் காணலையேன்னு அழுதுக்கிட்டு பக்கத்துப் புஞ்சைகள்ல ஜோலி பார்த்துக்கிட்டிருந்தவங்ககிட்ட போயி கேட்டாள்.

அவங்க, "நம்ம ஊர்ல ஆட்டுக்கிடை போட்டிருந்த கோனார்கள் இன்னைக்கித் தான் ஆட்டு மந்தையைப் பத்திக்கிட்டு அவங்க ஊருக்குப் போனாங்க. ஒருவேளை கிடாய்கள் ஆட்டு மந்தையோடு போனாலும் போயிருக்கும். நீ போயி அவங்ககிட்ட கேளு"ன்னாங்க.

ஆட்டு மந்தைகளின் காலடித் தடத்தைப் பார்த்து ஓட்டமும் நடையுமா போனாள் மாடத்தி. நேரம் நல்லா இருட்டிட்டு. அதுக்கு மேல அவளாலயும் நடக்க முடியலை. கோனார்களின் ஆட்டு மந்தை போன திசையும் தெரியலை. அதனால, பாதையோரமா இருக்கிற ஒரு காட்டுக் கோயில்ல, பசியோட ராவேளையில "சாமியே நீதான் துணை"ன்னு நினைச்சித் தங்கிட்டா.

கோனார்கள் ரெண்டு பேரும் ராவோட ராவா ஆடுகள் ராத்தங்கும் போதே, தப்பி வந்த கிடாய்களின் முடியை வெட்டி, கிடாய்களின் அடையாளத்தையே மாத்திட்டாங்க.

மறுநாள் காலையில எந்திரிச்சி ஒரு வழிப்போக்கனிடம், "எதுத்தாப்புல ஆட்டு மந்தை ஏதாச்சும் போச்சா?"ன்னு கேட்டாள் மாடத்தி. வழிப்போக்கன் "ஆமா"ன்னு சொல்லி ஆட்டு மந்தை போன வழியையும் காமிச்சான்.



வேகவேகமாக ஓடிய மாடத்தி அம்மாள் கோனார்களின் ஆட்டு மந்தையை மறித்து, 'ஐயா, நான் வளர்க்கும் ஏழெட்டுக் கிடாய்களும் உங்க ஆடுகளோடு வந்திச்சா"ன்னு பதபதைச்சுக் கேட்டாள்.

கோனார்கள் ரெண்டு பேரும் "இல்லையே... உனக்குச் சந்தேகம்னா ஆட்டு மந்தைக்குள்ள போயி

"பாரு"ன்னாங்க.

மாடத்தியம்மாள் ஆட்டு மந்தைக்குள் போய்ப் பார்த்தாள். அவ வளர்த்த ஆடுகள அவளுக்குத் தெரியாதா! அம்புட்டுக் கிடாய்களும் ஆட்டு மந்தைக் குள்ளதான் கிடந்தன. கோனார்கள் பொய் சொல்றாங்கன்னு தெரிஞ்சுபோச்சு.

"உங்க ஆட்டு மந்தைக்குள்ளதான் என்னோட கிடாய்கள் கிடக்கு. அதுக அத்தனையும் கோயிலுக்கு நேர்ந்து விட்டதுக. அத்தோடு அது அடுத்தவங்க கிடாய்க. இப்ப கிடாய்கள் இல்லாம நான் ஊருக்குள்ள போக முடியாது"ன்னு சொல்லி அழுதாள் மாடத்தியம்மாள்.

கோனார்களின் மனம் இரங்கலை. "நீ வளர்த்த கிடாய்கள்னா, நீ தூர நின்னு கூப்பிடு அதுக உன் பின்னாலேயே வந்திரும். அப்படி வந்தா அந்தக் கிடாய்களை நீயே பத்திக்கிட்டுப் போ"ன்னார் பெரியாங்கோனார்.

மாடத்தியம்மாளும் ஆட்டு மந்தைக் கிட்ட போய் நின்னு 'மே...மே...'ன்னு கிடாய்களைக் கூப்பிட்டுப் பார்த்தாள்.

பொட்டை ஆடுகளின் பின்னால் அலைந்த கிடாய்கள் மாடத்தியம்மாளின் குரலைக் காதில் வாங்கவேயில்லை.

பிறகு என்ன செய்ய... "படுபாவிகளா... என் கிடாய்களை அடையாளம் மாத்தி ஆட்டோட சேத்துக்கிட்டீங்க... கோயிலுக்கு நேர்ந்த கிடாய்களைத் தவித்து மத்த ஆடுகள் அம்புட்டும் நீங்க வீடுபோய்ச் சேருவதற்குள்ள சரஞ்சரமா செத்து மடியும். அதுக்குப் பிறகாவது கோயில் கிடாய்களை உடமஸ்தங்ககிட்ட ஒப்படைங்க. நான் போய் ஏதாவது ஒரு பாழுங்கிணத்துல விழுந்து சாகப் போறேன்"னு சொல்லி சாபம் கொடுத்துட்டு, ரெண்டு கை நிறைய மண்ணை அள்ளி ஆட்டு மந்தைகளைப் பார்த்து வீசிட்டு, விறு... விறுன்னு நடந்து போய், ஒரு பாழுங் கிணத்துல விழுந்து உயிரை மாய்ச்சிக் கிட்டா.




மாடத்தியம்மாளின் சாபம் பலித்தது. கோனார்கள் தம் சொந்த ஊரான வேப்பாளம்பட்டி போய்ச் சேருவதற்குள், ஆடுகள் எல்லாம் கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்தன. ஆனால், மாடத்தியம்மாள் வளர்த்த கிடாய்களுக்கு மட்டும் எந்தச் சேதாரமும் வரலை. கோனார்கள் ரெண்டுபேரும் தப்பை உணர்ந்து, மலையான் குளத்துல கொண்டு போய் அந்தக் கிடாய்களை மாற நாடார் மூலமா உடமஸ்தர்களிடம் ஒப்படைத்து மன்னிப்பும் கேட்டுட்டு வந்தாங்க. அது மட்டுமில்லாம, தன் ஆடு, குட்டிகளுக்கு காலகாலத்துக்கு எந்தச் சேதாரமும் வரக் கூடாதுன்னு நினைச்சு மாடத்தியம்மாளுக்குக் கோயில் கட்டிக் கும்பிடுறாங்க"ன்னு மாடத்தியம்மாளின் கதையைச் சொல்லி முடித்தார் பரும்படியூரைச் சேர்ந்த லெட்சுமணன் என்ற தகவலாளர்.

(தொடரும்)


THRILLERS IN தமிழ்
வந்துவிட்டார்! திகம்பர சாமியார்
ஆங்கில நாவல்களுக்கு இணையாக
1930-களில்
தமிழகத்தை கலக்கி
தமிழ் வாசகர்களை அசர வைத்த
வடுவூர் கே.துரைசாமி ஐயங்கார், பி.ஏ.,
எழுதிய நாவல்கள் - புதுப்பொலிவுடன்
ஆங்கிலத்தில் ஷெர்லாக் ஹோம்ஸ்
நவீன காலத்தில் 007 ஜேம்ஸ்பாண்டு
தமிழகத்தில் அன்றும் இன்றும் என்றும்
திகம்பர சாமியார்
என்று போற்றப்படக் கூடிய, தரமான, த்ரில்லர்கள்
விறுவிறுப்பான துப்பறியும் கதைகள்
கையில் எடுத்தால் கீழே வைக்க முடியாத அளவிற்கு கட்டிப் போடும்.
உவகையூட்டும் நாவல்கள் வெளிவந்து விட்டன.
வரம்பு மீறல்கள், நயவஞ்சகம் சூழ்ச்சி ஆகியவற்றை பிரமிப்பூட்டும் வகையில்
முறியடிக்கும் திகம்பர சாமியார் மற்றும் பிற கதாபாத்திரங்கள்.
1. பூர்ண சந்திரோதயம் (5 பாகங்கள்) ..... ரூ. 650.00
2. கும்பகோணம் வக்கீல் (2 பாகங்கள்) ..... ரூ. 200.00
3. மாயா விநோதப் பரதேசி (3 பாகங்கள்) ..... ரூ. 365.00
4. மேனகா (2 பாகங்கள்) ..... ரூ. 250.00
5. மதன கல்யாணி (3 பாகங்கள்) ..... ரூ. 355.00
6. சௌந்திர கோகிலம் (4 பாகங்கள்) ..... ரூ. 460.00
7. பாலாமணி (அ) பக்காத் திருடன் (2 பாகங்கள்) ரூ. 170.00
8. வசந்த மல்லிகா ..... ரூ. 110.00
9. வித்யாசாகரம் ..... ரூ. 100.00
10. பன்னியூர் படாடோப சர்மா ..... ரூ. 150.00
11. திவான் லொடபடசிங் பகதூர் ..... ரூ. 40.00
12. திரிபுரசுந்தரி (அ) திகம்பரசாமியார் திடும்பிரவேசம் ரூ. 130.00
13. வஸந்த கோகிலம் ..... ரூ. 90.00
14. தங்கம்மாள் (அ) தீர புருஷனின் தியாக கம்பீரம் ரூ. 75.00
(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617, மயிலாப்பூர்,
சென்னை - 600 004, தொலைபேசி : 24641314
அல்லயன்ஸ்

# 'கலகல' தலைவர்... கலங்கும் காஞ்சி!



சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னை அருகே உள்ள கொளப்பாக்கத்தில் கட்சிக்காரர்களுடன் நேர்காணல் நடத்தினார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா. அந்தச் சமயத்தில் ஒரு பிரமுகரைப் பெயர் சொல்லி அழைத்தார். அந்தப் பிரமுகரும் ஜெ. முன்னிலையில் பவ்யமாகக் கும்பிடு போட்டார். அவரைப் பார்த்து, "நீ என்ன பெரிய ரவுடியா? தொலைச்சுடுவேன் தொலைச்சு" என்று அதட்டினார் ஜெயலலிதா. அந்த நபருக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு ஜெயலலிதாவே அந்தப் பிரமுகரை அழைத்து, "கட்சியை நல்லா நடத்துங்க" என்று நகரச் செயலாளர் பொறுப்பைக் கொடுத்ததுடன், உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு அவரை காஞ்சிபுரம் நகர மன்றத் தலைவராகவும் ஆக்கிவிட்டார். அவர், ராஜேந்திரன். இந்தப் பின்னணியுடன் நாம் அவரிடம் பேசினோம்.

"எனக்குப் புரட்சித் தலைவரும் அம்மாவும்தான் தெய்வங்க. என் மேல பொறாமைப்பட்ட ஆசாமிங்க இருபத்து நாலு மணி நேரமும் நான் குடிக்கறதா போட்டுக் கொடுத்துட்டாங்க. அப்படியெல்லாம் இல்லை. கட்சிக்காக எட்டு முறை ஜெயிலுக்குப் போயிருக்கேன். என் உழைப்பு அம்மாவுக்குப் புரிஞ்சு போச்சுங்க. என்கிட்ட இருக்குற ஒரே குறை, ஓவரா பேசுவேங்க. நமக்கு இந்த

## கமலுக்கு விருது!

லிவிங் லெஜெண்ட் என்றால் என்ன?

ஒரு தனி நபர், தன் வாழ்நாள் சாதனைகளால் சரித்திரத்தில் இடம் பிடிக்கும் செயலை இப்படிக் குறிப்பிடலாம். அகில இந்திய வர்த்தக சங்கமான FICCI 'லிவிங் லெஜெண்ட்' விருதை நடிகர் கமல்ஹாசனுக்கு வழங்க உள்ளது. வரும் மார்ச் 28ஆம் தேதி, மும்பையில் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் ப்ரியரஞ்சன்தாஸ் முன்ஷி இவ்விருதை வழங்க உள்ளார். கமல்ஹாசனின் வாழ்நாள் சாதனைகளாக FICCI எதனைக் குறிப்பிடுகிறது?

● துணிச்சலான பல முதலடிகளை இந்தியத் திரைத்துறையின் சார்பில் எடுத்து வைத்த முன்னோடி கமல்ஹாசன்.

● திரைத்துறையின் முன்னேற்றத்தையே தமது மூச்சாக எண்ணிச்

உங்களுக்கு என்று தொழில் உண்டா...? வருமானமெல்லாம் எப்படி?

"மூன்று கடை கட்டி வாடகைக்கு விட்டிருக்கேன். பொதுக் கழிப்பிடம் ஏலம் எடுத்திருக்கேன். இந்த வரும்படி என் குடும்பத்துக்குப் போது முங்க.

**அதிகாரிகளை விரட்டு கிறீர்களாமே? உங்களைப் பார்த்தா காஞ்சியே கலங்கு தாமே?**

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல. இங்க எந்த வேலையையும் செய்ய முடியாதபடி மாவட்ட அமைச்சர் குடைச்சல் குடுத்திட்டிருக்காரு. கமிஷனர் கோப்புகளெல்லாம் இங்கிலீஷ்லே எழுதுறாரு. நான் படிக்காதவன்... எல்லாம் தமிழ்லேயே வரட்டும்'னு என்று சொல்றேன், அவ்வளவுதான். இப்போதைய அவசரத் தேவைகளான தெருவிளக்கு, குடி தண்ணீர், சாலைகள் ஆகியவற்றில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த ஆரம்பிச்சிருக்கேன்'' என்று சொல்லும் ராஜேந்திரனுக்கு 45 உறுப்பினர்களில் 20 அ.தி.மு.க. உறுப்பினர்களின் ஆதரவு உறுதியாக இருந்தாலும், சில காங்கிரஸ், தி.மு.க. உறுப்பினர்களும் ஆதரிப்பதால் தலைவராகத் தொடர்கிறார்.



* ராஜேந்திரன்

வாய்த் துடுக்கு மட்டும் நிக்கவே மாட்டேங்குது''

**உங்களுக்கு எப்படி ரவுடி இமேஜ் வந்தது?**

"நான் படிக்காதவன். இதே காஞ்சி புரத்திலே ரிக்ஷாதான் ஓட்டிக்கிட்டிருந் தேன். ஏதோ தெரிஞ்சவங்க வர்றாங்க... 'அண்ணே ஒரு லட்சம் கொடுத்தேன். பார்ட்டி திருப்பித் தர மாட்டேங் கிறான்'னு குறைபட்டுப்பாங்க. வசூலித் துத் தருவேன். அதுக்கு கமிஷன் கிடைக் கும். இது என்ன ரவுடித்தனமா?"

**- ப்ரியன்**

---

செயல்படக் கூடியவர்.

● சம்பாதிப்பதையெல்லாம் தன் துறையிலேயே செலவிடும் வெகு சிலரில் ஒருவர்.

● வியத்தகு திரைக்கதையாளர். நெருடலின்றி ஒரு படத்தைச் சிறப்பாகத் தரும் பேராற்றலால்,



இந்தியாவின் முக்கிய இயக்குநர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

● ரசிகர் மன்றங்களை நற்பணி மன்றங்களாக உயர்த்தி, சமுதாய மாறுதல்களை இந்தியா வெங்கும் ஏற்படுத்தியவர்.

**- ரேவதி**

# காதல்... கல்யாணம்...



நான் சிறு பையனாயிருந்தபோது எங்கள் ஊரில் ஒரு கல்யாணம் நடந்தது. கல்யாணத்தில் வழக்கமாயுள்ளதுபோல் மேளம் தடபுடல் பட்டது. எங்கள் உபாத்தியாயர் "அதோ மேளச் சத்தம் கேட்கிறதே, அது என்ன சொல்கிறது, யாருக்காவது தெரியுமா?" என்று கேட்டார். பிறகு அவரே சொன்னார்: - நன்றாய்க் கேளுங்கள். 'அகப்பட்டுக் கொண்டான், அகப்பட்டுக் கொண்டான்' என்று அது அலறுவது தெரியவில்லையா?" என்று.

அதாவது, "ஐயோ! பாவம்! ஒரு மனுஷன் அநியாயமாய்க் கல்யாண வலையில் அகப்பட்டுக் கொண்டானே!" என்று அந்த மேளம் அலறுகிறதாம். இது ரொம்ப உண்மைதான். கல்யாணத்தில் ஒருவன் தன் விடுதலையை இழந்து விடுகிறான். பெரும் பொறுப்பு அவன் தலையில் அமர்கிறது. இதெல்லாம் கண் முன்னால் பிரத்யக்ஷமாகத் தெரிந்துங்கூட மனிதர்கள் கல்யாண வலையில் தாங்களே போய் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஏன்? கல்யாணம் என்னும் ஏற்பாடு எதற்காகத்தான் ஏற்பட்டது?

புருஷர்களையும் சரி, ஸ்திரீகளையும் சரி, ஒரு பிராயத்துக்குப் பிறகு 'தனிமை' என்னும் துன்பம் பீடிக்கிறது. வாழ்க்கையில் வேறு எல்லாவித சுக சௌகரியங்களும் இருந்தாலும், ஏதோ குறை உணர்ச்சி இருந்துகொண்டிருக்கிறது. ஒரு ஜீவன் இன்னொரு ஜீவனுடைய கூட்டுறவை நாடுகிறது. புருஷனுக்கு ஸ்திரீயினுடைய சிநேகத்தினாலும், ஸ்திரீக்குப் புருஷனுடைய சிநேகத்தினாலும்தான் இந்தக் குறை தீரும். இது இயற்கை நியதி; கடவுளின் சித்தம். ஒருவனுக்கு இத்தகைய குறை தோன்றாவிட்டால், அவன் இயற்கைக்கு மாறுபட்டவன் என்றே தீர்மானிக்கலாம்.

ஜீவன்களுடைய தனிமைத் துன்பத்தைப் போக்கிக் கூட்டுறவின் மகிழ்ச்சியை அவர்களுக்கு அளிப்பதற்காகத்தான் கல்யாணம் என்பது ஏற்பட்டது. கல்யாணத்தின் இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமானால், சில நிபந்தனைகள் பூர்த்தியாக வேண்டும். அவற்றில் முக்கியமானது காதல்.

காதல் என்றால் என்ன? காலஞ்சென்ற ஸ்ரீமான் வ.வே.சு அய்யர் காதலுக்கு மிகச் சிறந்த விளக்கம் ஒன்றை அளித்திருக்கிறார்:-

"கண் எல்லோரையும் பார்க்கிறது; காது பேசுவோர் வார்த்தைகளையெல்லாம் கேட்கிறது; வாய் காரியம் இருக்கிறதோ இல்லையோ, பலரிடத்திலும் பேசுகிறது. ஆனால் கண்ணானது ஒருவரைப் பார்க்கும்போது மற்ற யாரைப் பார்க்கும் போதும் அடையாத இன்பத்தை அடைகிறது. அவர் பேசுவது சாமானிய விஷயமானாலும், அவருடைய குரலில் விசேஷமான இனிமை இராவிட்டாலும், அவருடைய வார்த்தையைக் காது தேவாமிருதத்தைப் பருகுவது போலப் பருகுகிறது. அவரிடத்தில் பேசும்போது வாய் குளறுகிறது; நாக்குக்




கெஞ்சுகிறது. இதெல்லாம் காதலின் அடையாளம். ஆனால் இக் காதல் எப்படிப் பிறக்கிறது என்றாலோ, அது தேவ ரகசியம் - மனிதரால் சொல்ல முடியாது."

இப்படிப்பட்ட காதலில் தேக தத்துவம், மனோ தத்துவம் இரண்டும் அடங்கியிருக்கின்றன. காதலி அல்லது காதலனுடைய ஸ்பரிசத்தினால் எவ்வளவு இன்பம் உண்டாகிறதோ அவ்வளவு இன்பம் அவன் அல்லது அவளைப் பற்றி நினைப்பதிலேயே உண்டாகிறது.

இத்தகைய காதலைக் காரணமாகக் கொண்டு ஏற்படும் கல்யாணம்தான் சிரேஷ்டமானதாகும். முன்னமே நான் சொன்னது போல் நம் சமூகத்தில் தற்சமயம் இத்தகைய கல்யாணங்கள் நேர்வதற்குரிய நிலைமை இல்லை. ஆகவே, கல்யாணத்துக்குப் பிறகேனும் சதிபதிகளுக்குள் அத்தகைய காதல் ஏற்பட்டால், அவர்கள் பாக்கியசாலிகள்தான்.

**- கல்கி களஞ்சியம்,**
**'வானதி வெளியீடு**



தமிழில் பல சொற்கள் காலப்போக்கில் பொருள் மாறுகின்றன. ஐயர் என்ற சொல், சங்க காலத்தில் 'தலைவர்' என்ற பொருளில்தான் பயின்று வந்தது. இன்று அது கேலி வார்த்தையாகிவிட்டது.

'அந்தணன்' என்ற சொல்லும் அப்படி காலப்போக்கில் பொருள் மாறி வந்துள்ளது. திருக்குறள் 'அறவாழி அந்தணன்' என்று கடவுளைக் குறிக்கிறது. மற்றொரு குறளில் 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால்' என்று எல்லா உயிர்களின் மேலும் அன்பு செலுத்துபவர்களை அந்தணர் என்றது.

இந்த உயர்ந்த பொருளில்தான் திருமங்கையாழ்வார் தன் திருநெடுந்தாண்டகத்தில் இந்தப் பாடலில் அந்தணனைப் பயன்படுத்தியுள்ளார்.

'இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் - தன்னை

# அந்தணன்

இருநிலம், கால், தீ, நீர், விண், பூதம்
ஐந்தாய்,
செந்திறத்த தமிழ் ஓசை வடசொல்
ஆகி,
திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறு
ஆகி,
அந்தரத்தில் தேவர்க்கும் அறியல்
ஆகா



23

## சுஜாதா

அந்தணனை, அந்தணர் மாட்டு
அந்தி வைத்த
மந்திரத்தை, மந்திரத்தால்
மறவாது என்றும்
வாழுதியேல் வாழலாம், மட
நெஞ்சமே!

(கால் - காற்று)

இந்திரனுக்கும் பிரம்மனுக்கும் முற்பட்டவன். நிலம், நீர், நெருப்பு, காற்று,

# யார்?

**'மந்திரங்கள் சொல்லி மறக்காமல் தினம் வாழ்த்தினால் நீ வாழலாம்.'**

ஆகாயம் என்று ஐம்பூதங்களாய், தமிழ் ஓசையாய், வட சொல்லாய், நான்கு திசைகளாய், சூரிய சந்திரராய் தேவ லோகத்தில் உள்ள தேவர்களாலும் அறிய முடியாத அந்தணன் (சிறந்தவன்) அவனை மந்திரங்கள் சொல்லி மறக்காமல் தினம் வாழ்த்தினால் நீ வாழலாம், என் பேதை நெஞ்சமே!

எண் சீர்விருத்தம் என்னும் விரிவான வடிவம்கொண்ட 30 பாசுரங்கள் கொண்டது திருநெடுந்தாண்டகம். திருமங்கையாழ்வாரின் புலமைக்கும் பக்திக்கும் ஒரே சமயத்தில் ஈடு கொடுக்கும் பாடல்கள் அவை.

- படிக்கலாம்






# உணர்வுகள்!

உள்ளாட்சித் தேர்தல் நேரம்...

எப்பொழுதும் போலவே தனது கட்சிக்காகப் பம்பரமாகச் சுழன்று வேலை செய்ய ஆரம்பித்தான் தயாளன். எல்லாமே அவனுக்குக் கட்சிதான்... "தலைவா...", "தலைவா..." என்று வார்த்தைக்கு வார்த்தை வாஞ்சையோடு கூப்பிடும் சங்கரலிங்கம்தான் வேட்பாளர். நல்ல பசையுள்ள நபர். வெற்றி பெற்றால் சேர்மன் ஆகக் கூடிய அளவுக்குச் செல்வாக்கு உள்ளவர்.

தேர்தல் சூடுபிடிக்க ஆரம்பித்த நேரம்... தயாளனும் அவனுடைய உயிர்த் தோழன் ராமசாமியும் கட்சிப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். நெருங்கிய நண்பர்களான அவர்கள், தங்கள் நட்பின் நெருக்கத்தை வலுப்படுத்த, தயாளனின் மகள் சுந்தரியை, ராமசாமியின் மகன் சந்திரனுக்கு மண முடிப்பதெனப் பேசி, நிச்சயமும் செய்துவிட்டனர். திருமணத்தை உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு, அவர்களது அன்புத் தலைவர், சேர்மனாக ஆகப் போகும் சங்கரலிங்கத்தின் தலைமையில் நடத்துவது என்றும் தீர்மானித்தனர்.

அந்த நேரத்தில்தான் அப்படியோர் எதிர்பாராத திருப்பம் நடந்தது.

உள்ளாட்சித் தேர்தலில் ஒவ்வொரு கட்சியிலும் குழப்பம்; கூட்டணிகளில் அதிருப்தி... சங்கரலிங்கம் போட்டியிடும் கூட்டணிக் கட்சிகளில் ஒன்று, திடீரென்று அக்கூட்டணியிலிருந்து விலகியது மல்லாமல், சங்கரலிங்கத்துக்கு எதிராக தர்மலிங்கம் என்ற வேட்பாளரை நிறுத்தியது. அதில் ராமசாமி திடீரென்று கட்சி மாறி, தர்மலிங்கத்துடன் சேர்ந்து கொண்டான். அவருக்கு ஆதரவாகத் தேர்தலில் செயல்படவும் ஆரம்பித்தான். இதைத் துளியும் எதிர்பார்க்காத தயாளன், கொதித்துப் போனான்! அவ்வளவுதான்... அதுவரை நண்பனாக இருந்த ராமசாமியைப் பகைவனாகப் பார்த்தான். 'இனி இவனுடன் நமக்கு எந்தச் சம்பந்தமும் வேண்டாம்...' என்று முடிவெடுத்தான் தயாளன்.

நிலைமை விபரீதமாகப் போவதைக் கண்ட தயாளனின் உறவினர்கள் அவனைச் சமாதானப்படுத்த முயன்றனர். "அணி மாறுவது அரசியலில் சகஜம். குடும்ப விஷயங்களில் அரசியலை நுழைக்காதே. தனிப்பட்ட முறையில் ராமசாமி உனக்கு என்ன துரோகம் செய்தான்...?" என்று அவனுக்குப் புத்திமதி சொன்னார்கள்.

"பகைவன் வீட்டுக்குச் சென்றவனுடன் பால் பாயச விருந்தா? உறவாடிக் கெடுத்தவனுடன் இனி எனக்கு எந்தப் பேச்சு மில்லை..." என்றான் தயாளன் ஆவேசமாக.



யார் சொல்லியும் அவன் கேட்பதாக இல்லை. எனவே சங்கரலிங்கத்தையே கூப்பிட்டு வந்து, அவனை எப்படியாவது சமாதானப் படுத்தி, இந்தக் கல்யாணத்தை நிறுத்தாமல் இருக்கும் முயற்சியில் அவனது உறவினர்கள் ஈடுபட்டனர்.

தலைவர் தனது கட்சித் தொண்டர்களுடன் வந்தார்...

அவரைப் பார்த்ததுமே "தலைவா... அந்த

**க. ஒப்பிலி அப்பன்**

ராமசாமி நம்ம கட்சிக்கு எவ்வளவு பெரிய துரோகம் செய்துட்டான் பார்த்தீங்களா...? பச்சைத் துரோகம் தலைவா... பச்சைத் துரோகம்...". உணர்ச்சிப் பெருக்கில் தலைவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதான் தயாளன். உணர்ச்சிப்பூர்வமான அந்த சூழ்நிலையைப் புரிந்துகொண்ட சங்கரலிங்கம், "தயாளா.. நீ எதுக்கும் கவலைப்படாதே... உன்னைப் போன்ற தொண்டர்கள் எனக்கு இருக்கும்போது அந்த ராமசாமி போனால் என்ன...? உன் மகள், எனக்கும் சொந்த மகள் போலத்தான். தேர்தல் முடியட்டும்... சுந்தரிக்கு நானே வேறு நல்ல இடமாகப் பார்த்துக் கல்யாணத்தை என் சொந்தச் செலவில் பண்ணி வைக்கிறேன்" என்றதும் தான் தாமதம்... 'தலைவர் வாழ்க' 'தலைவர் வாழ்க' என்ற கோஷம் விண் அதிர, சரவெடிகள் சப்தம் மண் அதிர, அங்கிருந்தே தனது தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கினார் சங்கரலிங்கம்...!



ஒருவழியாகத் தலைவரும் அவரது தொண்டர் படையும் அந்த இடத்தை விட்டுச் சென்றதும், தயாளன் தனது மனைவி மற்றும் உறவினர்களைப் பார்த்துச் சொன்னான்...

"இப்ப என்ன ஆச்சு பார்த்தீங்களா...? நான் என்ன நினைச்சேனோ, அதையேதான் என் தலைவரும் சொன்னார். என் மூச்சு, பேச்சு, எண்ணம் எல்லாமே என் தலைவர்தான்" என்றவன் உற்



• கௌரவிப்பு...

## கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம்!

பேசும் திரைப்படம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி, 'சினிமா டுடே' என்ற சினிமா கண்காட்சி சென்னை வர்த்தக மையத்தில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் ஜீ.வி ஃபிலிம்ஸ் நிறுவனம் வித்தியாசமானதொரு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இந்தியாவிலேயே முதன்முறையாக 3D கண்ணாடியை அணிந்து பார்க்கும் 'மாயாவி' தொடரை விழாவில் திரையிட்டதோடு, திரையுலகின் மூத்த கலைஞர்கள், பத்திரிகையாளர்கள், மக்கள் தொடர்பாளர்கள் மற்றும் பெப்சியில் அங்கம் வகித்த கலைத்துறை வித்தகர்களில் அதிகபட்ச வயது, அனுபவம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில் 75 பேரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொருவருக்கும் தலா ஒரு சவரன் தங்க நாணயத்தை வழங்கிக் கௌரவித்தது.

"இனி ஒவ்வொரு வருடமும் தங்கப் பதக்கத்துடன் பண முடிப்பும் கலைஞர்களுக்கு வழங்கப்படும்" என்று ஜீ.வி ஃபிலிம்ஸ் மகாதேவனும், வெங்கட்ரமணியும் அறிவிக்க, ஏக கரகோஷம். நல்ல முயற்சிகளுக்கு ஆதரவு கிடைப்பது இயல்புதானே!

- ப்ரியா

சாகத்துடன் தேர்தல் பணிகளைக் கவனிக்க உடனே புறப்பட்டுச் சென்று விட்டான்.

சங்கரலிங்கம் அதிக வோட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்; சேர்மன் பதவியும் கிடைத்தது. கூடவே அந்த அதிசயமும் நடந்தது. எந்த தர்மலிங்கம் அணி மாறி, சங்கரலிங்கத்தை எதிர்த்துத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தாரோ... அவரே நேரில் வந்து சங்கரலிங்கத்தை ஆரத்தழுவி, மாலை அணிவித்து மரியாதை செய்தார். அது மட்டுமல்ல, 'சங்கரலிங்கம் இனி எனக்கு நண்பர் மட்டுமல்ல, சம்பந்தி... எனது மகளை, தலைவரின் மகனுக்குத் தர முடிவு செய்துவிட்டேன்...!" என்று பலத்த கரகோஷத்துக்கிடையே சொன்னார்.

இதைச் சற்றும் எதிர்பாராத சங்கரலிங்கத்தின் மகன் சாந்தலிங்கம், "என்னப்பா நீங்க, தேர்தல் சமயத்துல நம்ம தொண்டன் ராமசாமி அணி மாறினதுக்காக, அந்தக் கல்யாண சம்பந்தமே வேண்டாம்ன்னு சொன்ன தயாளனுக்கு ஆதரவா பேசினீங்க... இப்ப நீங்களே இப்படிப் பண்ணலாமா?" என்றான்.

தனது மகனை ஒருகணம் பார்த்த சங்கரலிங்கம் "இதோ பாருடா, நம்ம அடிமட்ட தொண்டர்கள் எதற்கும், எப்பவும் உணர்ச்சிவசப்படுவார்கள். அவர்கள் அப்படியிருப்பதுதான் நமக்குப் பலம்! இந்தக் கல்யாணத்தால, நமக்கு இந்தத் தொகுதியில எதிர்ப்பு என்பதே இல்லாமப் போயிடுச்சு. என் அரசியல் வாரிசான உனக்கு, இப்பவே பலமான அஸ்திவாரம் போட்டாச்சு பார்த்தியா! தயாளன் ஒரு சாதாரண அடிமட்டத் தொண்டன். அவன் உணர்ச்சிபூர்வமாவே நம்ம கட்சிக்குப் பாடுபடட்டும்... நாளைக்கே காவிரி, முல்லைப் பெரியாறு, இடஒதுக்கீடுன்னு போராட்டம் வந்தா, கோஷம் போடவும், தேவைப்பட்டா தீக்குளிக்கவும் இந்த மாதிரியான உணர்ச்சி பூர்வமான தொண்டர்கள் நமக்கு எப்போதும் தேவை...! புரிஞ்சுதா?" என்றார்.

தனது தந்தை பேசினது 'என்ன' பூர்வமானது? புரியாமல் திகைத்தான் சாந்தலிங்கம். ○

# யாத்திரை

தனி 3 -Tier கோச் மற்றும் ரிசர்வேஷன் மூலம் முதல் தரமான சைவ உணவு, தங்கும் வசதிகளுடன் கீழ்கண்ட பயணங்கள் புறப்பட உள்ளன.

02. 04. 07 - 13 நாட்கள் குலு.மணாலி பயணம்
16. 04. 07 - 20 நாட்கள் காசி யாத்திரை (தனி கோச்)
18. 04. 07 - 12 நாட்கள் டார்ஜிலிங் பயணம்
30. 04. 07 - 13 நாட்கள் நேபாளம் - முக்திநாத் யாத்திரை
13. 05. 07 - 8 நாட்கள் ஆந்திரா பயணம்
26. 05. 07 - 6 நாட்கள் கேரளா பயணம்
09. 05. 07 - 20 நாட்கள் காசியாத்திரை (தனி கோச்)

மற்றும் அந்தமான் பயணம். -:விபரங்களுக்கு:-

Murali/slm/9362110604


®

## ஸ்ரீஸ்வர்ணாம்பிகை ஆல் இந்தியா டிராவல் கம்பெனி

( Recognized by the Ministry of Tourism, Government of India )

ஸ்ரீதர் காம்ப்ளக்ஸ், 124/1, டவுன் இரயில்வே ஸ்டேஷன் ரோடு, சேலம் - 636 001

போன்: **0427 - 2450622, 2450633, 2450644, 4051991,** வீடு: **2416387**



## காளியின் சக்தி பெற்ற தெய்வ வாக்கு ஜோதிடர்



என்னிடம் உங்கள் சுமைகளைச் சுமத்தினால் அதை நிச்சயமாகத் தாங்குவேன்.

நீங்கள் என் உபதேசங்களைக் கேட்கவும் காளியின் உதவிகளைப் பெறவும் என் மாகாளியிடம் சரணம் அடைந்தால்...

★ என் காளியின் வசிய எந்திர மூலம் கணவன் மனைவி ஒன்று சேர,

★ செய்வினைகள் நீங்க, ★ கல்வி, உத்யோகம், வதை வேதங்காண் திருமந்திரம், அமாவாசை பரிகார ஹோமங்கள் மூலம் என் காளி நிவர்த்தி செய்வாள்.

என் காளியை நாடி வந்தால் எந்தப் பிரச்னைகளில் நீங்கள் சிக்கியிருந்தாலும் ஜாதி மத பேதமின்றி என் மாகாளி இருளிலிருந்து உங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவாள் - நிச்சயமாக.

★ குபேர வசியம், ★ காதலர்கள் வசியம், ★ வியாபார வசியம், ★ தொழில் வசியம்,
★ புத்ரபேறு வசியம், ★ திருமண வசியம், ★ சர்வகாரிய வசியம்,
★ குடும்ப வசியம் ★ மேலதிகாரிகள் வசியம்,
★ கைகால் மூட்டு வலி, இடுப்பு வலிகளுக்கு மூலிகைகளின் முறைப்படி தயார் செய்யப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

**ஸ்ரீலஸ்ரீ தவத்திரு P.P. குமார்ஜீ,**

நெ.14A, தேவனேரி, ECR ரோடு,
பட்டிபுலம் போஸ்ட், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 104
போன்: 044-2744 2733, செல்:94441 35526

பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
இலவச ஆலோசனைகளுக்குத் தொடர்புகொள்ளவும்.

'மௌனம் பேசியதே' படத்தின் கேமராமேன் ராம்ஜியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அந்தப் படத்தை மிகவும் பாராட்டிச் சொன்னதுடன், அதன் இயக்குநர் அமீருக்கு என் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கும்படி சொன்னேன்.

அப்போது அவர், "நீங்கள் 'தித்திக்குதே' படத்தில் நடித்துக் கொண்டிருந்த சமயத்திலேயே, அமீர் உங்களை வைத்து ஒரு படம் எடுக்கும் திட்டத்துடன் உங்களுடன் பேச விரும்பினார். ஆனால், சரியான முறையில் தகவல் பரிமாற்றம் இல்லாது போனதால் அது சாத்தியமாகாமலேயே போய்விட்டது" என்றார். அதைக் கேட்டபோது எனக்கு சந்தோஷமும் ஏற்பட்டது; வருத்தமும் ஏற்பட்டது. காரணம் 'மௌனம் பேசியதே' மாதிரி ஒரு நல்ல படம் எடுத்த டைரக்டர், என்னை நடிக்க வைத்துப் படம் பண்ண விரும்புகிறாரே என்று சந்தோஷம்! அதே சமயம், அவர் என்னுடன் பேச முயற்சி செய்தபோது, என்னால் பேச முடியாமல் போய்விட்டதே என்பதில் வருத்தம்!

உடனே, நான் அமீரின் வீட்டுக்குப் போன் செய்தேன். அவர் வீட்டில் இல்லை என்றார்கள். மறுநாள் அவர் என்னுடன் பேச முயன்றிருக்கிறார். நான் ஒரு முக்கியமான பேட்டி ஒளிப்பதிவில் இருந்ததால் பேச முடியவில்லை.

மறுபடி நான் போன் செய்தபோது அவரே பேசினார். இரண்டு பேருமே மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் போனோம்.

"உங்களை நான் நேரில் வந்து சந்திக்க விரும்புகிறேன்; உங்க ஆபீஸ் எங்க சார் இருக்கு?" என்றேன். அடுத்த நாளே சந்தித்துவிட்டோம்.

சினிமா உலகத்தைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவருடைய இயக்கத்தில் நடிக்க நான் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறேன் என்பதை நான் சொன்னேன். அவர், "உங்களுக்கு மிகவும் பொருத்தமான ஒரு கதை நான் வைத்திருக்கிறேன். அந்தப் படம், உங்களை ஒரு புதிய உயரத்தில் கொண்டு போய் நிறுத்தும் என்று எனக்கு நூற்றுக்கு நூறு சதவிகிதம் நம்பிக்கை இருக்கிறது"

# ஈட் ட்ரிங்க் ஸ்லீப் ராம்...



என்று சஸ்பென்ஸ் கொடுத்து என் ஆர்வத்தை அதிகரித்தார்.

நான் ரொம்பவும் உணர்ச்சிவசப் பட்டு, "என்ன கதை? என் கேரக்டர் என்ன? சொல்லுங்க! சொல்லுங்க!" என்றேன்– அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு.

அமீர், படத்தின் ஒரு காட்சியை எனக்கு விவரித்தார். "சார்! கண்டிப்பாக இந்தப் படத்தை நாம பண்றோம்!" என்றேன். 'நந்தா', 'மௌனம் பேசியதே' படங்களை எடுத்த அயல்நாட்டுத் தமிழ்த் தயாரிப்பாளர்களே, அமீரின் அடுத்த படத்தையும் தயாரிக்க முன் வந்தார்கள்.



படத்தின் முதல்கட்டப் பணிகள் துவங்கிய சமயத்தில், சில காரணங்களால், அவர்கள் கைவிட்டு விட்டார்கள். வேறு தயாரிப்பாளர் தேடும் படலம் ஆரம்ப மானது. இதற்கிடையில் என் அப்பா, அமீரிடம் கதையைக் கேட்டுவிட்டு, சூப்பர் குட் பேனரிலேயே இந்தப் படத்தைத் தயாரிக்க முன்வந்தார். ஆனால் அமீர், கடைசியாக தானே தயாரிப்பாள ராக முடிவு செய்தார். அந்தப் படம் தான் 'ராம்.'

கொடைக்கானலில் படப்பிடிப்பு நடந்தது. அங்கே எங்களுக்குச் சொந்த மான நிலத்தில் படத்துக்கு வேண்டிய செட்டுகள் போடப்பட்டன. தலைமுடி யைத் தாராளமாக வளர்த்துக்கொள்ளச் சொன்னார் டைரக்டர். அந்த கேரக்ட ரைப் பற்றி என்னிடம் சொல்லிச் சொல்லி என்னைத் தயார் பண்ணினார். நானும் நிறைய ஹோம் ஒர்க் செய்தேன். நேரம் கிடைக்கிறபோதெல்லாம் ஸ்கிரிப்டை வைத்துக் கொண்டு எனக்குரிய வசனங்களைப் படித்துப் பழகினேன். வாய்ஸ் மாடுலேஷன் பழகினேன். 'எப்படியும் இந்தப் படம் ஹிட்டாக வேண்டும்!' என்கிற வெறி எனக்குள்ளே இருந்து கொண்டே இருந்தது.

ஒவ்வொரு காட்சியிலும் நான் பெஸ்ட் பெர்ஃபார்மன்ஸ் கொடுக்கும் வரை அமீர் விட மாட்டார். "தமிழ் சினிமா உலகமே உன்னைத் திரும்பிப் பார்க்கும்படி இந்தப் படம் செய்யும் பார்!" என்று சொல்லி என்னை உற்சாகப்படுத்துவார். நானும் முழுமையான ஈடுபாட்டுடன் படத்தில் நடித்தேன். என் நண்பர்கள் சிலர், "ஈட் கிரிக்கெட், ட்ரிங்க் கிரிக்கெட், ஸ்லீப் கிரிக்கெட் என்பது மாதிரி, இப்போ நம்ம ஜீவா, ஈட் ராம், டிரிங்க் ராம், ஸ்லீப் ராம்" என்று கிண்டல் செய்தார்கள்.

படம் மிகச் சிறப்பாக வளர்ந்து

கொண்டிருந்ததேயொழிய, ஷூட்டிங் ஷெட்யூல்கள் திட்டமிட்டபடி நடப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன. காரணம் நிதி நெருக்கடி. இதனால், படப்பிடிப்பு தாமதமானது மட்டுமின்றி, போட்டதை விட பட்ஜெட்டும் அதிகமாகிப் போனது.

ஒருவழியாக எல்லாப் பிரச்னைகளையும் சமாளித்து வெற்றிகரமாகப் படத்தை முடித்தார் அமீர். முதலில் என் அப்பாவுக்குப் படத்தைப் போட்டுக் காட்டினார். நான் படம் பார்க்கப் போகவில்லை. வீட்டுக்கு வந்ததும் அப்பா, என்னை அப்படியே கட்டிப் பிடித்து, "பிரமாதமா நடிச்சிருக்கே!"



• அமீருடன் (இடது)

என்றார். படம் பார்த்துவிட்டு வந்த அம்மா, என்னைப் பாராட்டிய கையோடு, சரண்யாவுக்கு போன் செய்தார். "என்னைப் போலவே (நிஜ அம்மாவைப் போலவே) நீங்க படத்துல மிகவும் யதார்த்தமா பண்ணியிருக்கீங்க. சூப்பர்!" என்று உணர்ச்சி பொங்கப் பாராட்டினார்.

முதல் நாள், முதல் காட்சியின்போது உதயம் தியேட்டரில் ரசிகர்களுடன் அமர்ந்து படம் பார்க்கச் சென்றிருந்தேன். இருக்கையில் அமர்ந்து கொண்டு நான் நார்மலாக இருக்க நினைத்தாலும், என்னையும் மீறி என் கால்கள் நடுங்கின. விளம்பரங்கள் முடிந்து, 'ராம்' படத்தின் சென்சார் சான்றிதழ் திரையில் தோன்றியது. என் நடுக்கம் உச்சத்தை அடைந்தது. ஆனால், படத்தின் துவக்கமே தியேட்டரில் பிரமாதமான வரவேற்பினைப் பெற்றது. நான் கொஞ்சம் கொஞ்சமாக நார்மலுக்கு வந்தேன். இடைவேளையின்போது, காபி சாப்பிட வந்தேன். ரசிகர்கள் சூழ்ந்து கொண்டு பாராட்டு மழையில் என்னைக் குளிப்பாட்டி விட்டார்கள். படம் முடிந்து வெளியல்வர, அங்கே கூடி நின்றிருந்த ரசிகர்களுக்குக் கைகளை என் தலைக்கு மேலே தூக்கிக் கண் கலங்க "வணக்கம்" சொன்னேன். ரசிகர்கள் ஆர்ப்பரித்தார்கள். என்னை அப்படியே தூக்கி என்னுடைய கார் வரை கொண்டு போய் விட்டார்கள்.

**சைப்ரஸ் நாட்டிலிருந்து இன்ப அதிர்ச்சி! அதுவும் ஆயிரம் வாட் ஷாக்!**

'ராம்' படம் பிரமாதமான வெற்றி பெற்றது. திரை உலகில் எனக்கும், நான் ஓர் இடத்தைப் பிடித்துக் கால் ஊன்றி விட்டதாகப்பட்டது. பத்திரிகைகள், டெலிவிஷன் சேனல்கள் எல்லாம் பாராட்டின. ஒரு வருடம் கழித்து, சைப்ரஸ் நாட்டிலிருந்து ஒரு சந்தோஷச் செய்தி வந்தது! மீண்டும் ஓர் இன்ப அதிர்ச்சி! அதுவும் ஆயிரம் வாட் இன்ப ஷாக்!

*(பேசுவேன்)*

## ❖ அருள்வாக்கு ❖

எத்தனை நாட்கள் ஈசுவரசரணாரவிந்த தியானம் செய்கிறோமோ அத்தனை நாட்களும் நம்முடைய பிறவிப் பயனை நாம் அனுபவித்தவர்களாகிறோம். இந்த ஜன்மத்தை எடுத்ததற்குப் பலன் அதுதான்!

நாம் எவ்வளவு நாழிகை தியானம் பண்ணுகிறோம் என்று அனைவரும் தங்களைத் தாங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். தினந்தோறும் பல காரியங்களைச் செய்து வருகிறோம். ஆனாலும் ஈசுவரத் தியானம் மிகவும் கொஞ்சந்தான் செய்திருப்போம். வம்பு, வீணில் செலவான காலமெல்லாம் ஈசுவரத் தியானத்தில் செலவழித்திருப்போமானால் இப்பொழுது பாவ மூட்டைக்குப் பயப்பட வேண்டாம். மூட்டை வர வர ஏறிக்கொண்டே இருக்கிறது. நாம் பூலோகத்தில் வந்துவிட்டோம். இனி, யாராக இருந்தாலும் போயாக வேண்டும்; இதுவரை இந்த லோகமானது அழுக்கை ஏற்றிக்கொள்வதற்கே இடமாக இருந்துவிட்டது. இப்படியிருந்தது போதும். இனிமேல் இது அழுக்கை அலம்புகிற இடம் என்று ஆக்கிக் கொள்வோம். தேகம், மனசு, சாஸ்திரம், க்ஷேத்திரம், தீர்த்தம் போன்ற பல சௌகரியங்கள் இந்த உலகில்தான் இருக்கின்றன. நாம் வாக்கினாலும் மனத்தினாலும் கை, கால் போன்றவற்றாலும் பாவம் செய்து இருக்கிறோம். அந்தப் பாவங்களையெல்லாம் வாக்கையும், மனசையும், அவயங்களையும் கொண்டே புண்ணியம் செய்து கரைத்து விட வேண்டும். நாம் இந்த உலகை விட்டுப் போவதற்குள் 'பாவ மூட்டை இல்லை' என்று சொல்லும்படி செய்து கொண்டால் அப்புறம் பஞ்சைப் போல் ஆனந்தமாகப் பறந்து போகலாம். எங்கிருந்து புறப்பட்டோமோ அங்கேயே அங்கேயே போய்ச் சேர்ந்து விடலாம். அப்புறம் மாறாத ஆனந்தமாகவே இருக்கலாம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



# புறப்பட்ட இடம் நோக்கி...

"சூப்பர் ஸ்டார் ரஜினி, 'எக்ஸலெண்ட்! கமர்ஷியல் படத்துலயும், கருத்துச் சொல்லியிருக்கீங்க, ரொம்ப பிரமாதமா நடிச்சிருக்கீங்க'ன்னு பாராட்டினாரு. விஜய் சார், 'படம் ரொம்ப நல்லாயிருக்குங்கண்ணா, ஜெயிச்சிட்டீங்கண்ணா'ன்னு பாராட்டு மழையில நனைய வச்சாரு.

நண்பன் சிம்பு ஃபோன் செஞ்சு 'நண்பா, உன்னோட லீ மாதிரித்தாண்டா நானும், கிரிக்கெட், கிரிக்கெட்டுனு வெறியா இருந்தேன். படம் எம்மனச ரொம்பப் பாதிச்சுருச்சுடா'ன்னு ரொம்ப சென்டிமெண்டா டச் பண்ணினான். சேரன் சார் பார்த்துட்டு, 'உங்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திட்டிருக்கு'ன்னு நம்பிக்கை கொடுத்தார்..."

இப்படிப் புகழ்ச்சிகளின் புல்லரிப்பில் பூரித்துப் போயிருக்கும் சிபி ராஜிடம் பேசினோம்.





# சூப்பர் ஸ்டார்


**'லீ'தான் உங்க முதல் படம்னு சொன்னா ஏத்துக்குவீங்களா?**

நீங்க சொன்னாலும், சொல்லாவிட்டாலும் எனக்குள்ளே இவ்வளவு நடிப்புத் தெறமையான்னு என்னை ஆச்சரியப்பட வைச்சவன் நம்ம 'லீ'தாங்க. இதுவரைக்கும் லூட்டி அடிக்கிற கேரக்டர்ஸ்தான் நெறைய பண்ணிட்டிருந்தேன். லீதான், 'டேய் தம்பி, நீ லூட்டி பார்ட்டி இல்ல, ஆக்ஷன் ஆளு'ன்னு என் கெரியரை மாத்தி

விட்டிருக்கான்.

**சரி, சத்யராஜுன்னா லொள்ளு, சிபின்னா...?**

'தில்லு'... ஆமாங்க இனிமேல் இந்த வளர்ந்தவன் ஆக்ஷன் ஹீரோதான். இத இப்படி தைரியமா சொல்ற அளவுக்கு என்னை உருவாக்கிட்டாரு இயக்குநர் பிரபு சாலமன் சார், தேங்க் யூ சார்.




**இப்ப ஹீரோக்கள் க்யூ ரொம்ப நீளம், தனியாத் தெரிய என்ன பண்ணப் போறீங்க?**


கேரக்டர் பண்றதுல நம்ம கமல் சார் மாதிரி வெரைட்டி காண்பிப்பேன், கதையை செலக்ட் பண்றதுல லீ மாதிரி, 'லீ'யவிட பெட்டர் சப்ஜெக்டாத் தேர்ந்தெடுப்பேன்.



**அடுத்து என்ன பண்ணப் போறீங்க?**

# பாராட்டினார்!

பவர்ஃபுல் ஆக்ஷன் படம்... பேச்சுவார்த்த நடந்துட்டு இருக்கு. லீ சிபி இனிமேல் சிக்ஸர், ஃபோர்னு நெறயத் தருவான்!



சந்திப்பு:
**மனோ விக்டர்**

திரிவேணி சங்கமம் - இப்படித்தான் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்கள். எம்.எஸ்.சுப்புலட்சுமி, எம்.எல்.வசந்தகுமாரி, டி.கே.பட்டம்மாள் - இந்த மூவரும் திரைப்படங்களில் பாடிய பாடல்களை நித்யஸ்ரீ மகாதேவன் பாட... கச்சேரி நடைபெற்ற காமராஜர் அரங்கமே இசையுணர்வில் மூழ்கிக் கிடந்தது. சங்கம நிகழ்வுகள் குறித்து ரசிகர்களின் பார்வை என்ன? இதோ...



பேத்தி நித்யஸ்ரீயோடு கொள்ளுப் பேத்தி லாவண்யாவும் பாடறப்ப பட்டம்மாள் வடித்த ஆனந்தக் கண்ணீர் என்னை நெகிழ வைத்தது.



• ராதா

நாங்க இதுவரை இது மாதிரி நிகழ்ச்சியெல்லாம் கேட்டதில்லை... ரொம்ப நல்லா இருந்தது. போகவே மனசில்ல!



• முகைதீன் - ரமீசா

குன்னக்குடியும், பி.பி.ஸ்ரீநிவாசும் வந்தது நிகழ்ச்சிக்குப் பாந்தமா இருந்துச்சு.



• ராஜலக்ஷ்மி

டி.கே.பட்டம்மாள் - ஈஸ்வரன் தம்பதியை திடீரென மேடைக்கு அழைத்து வந்தது சர்ப்ரைஸ்! அவங்க ரெண்டு பேரையும் பார்க்கும்போது மனசு நிறைஞ்சிடுச்சு!

• பத்மா - முகுந்தன்



— அருணா ஸ்.

படங்கள்: ஸ்ரீஹரி




# தலைமுறைகளின் சங்கமம்!



• சுந்தரி

இசையமைப்பாளர் கிருஷ்ணன், பாலு அண்ட் பாலு ஆர்க்கெஸ்ட்ரா, அப்துல் ஹமீதுன்னு எல்லோருடைய பங்கும் மகத்தானது.



• ஈசுவரி

நிகழ்ச்சி ஆரம்பிக்கறதுக்கு முன்னமே எல்லா டிக்கெட்டும் விற்றுத் தீர்ந்திட, எனக்கு ஏக எதிர் பார்ப்பு! சபாஷ், நிறை வேத்திட்டாங்க!



• ஸ்வேதா

நித்யஸ்ரீ ஆன்ட்டி சூப்பரா பாடினாங்க. நான் அவங்க ஃபேன் ஆயிட்டேன்.

'காற்றினிலே வரும் கீதத்'தில் தொடங்கி அத்தனை பாடல்களும் இதம். இந்நிகழ்வை தலைமுறைகளின் சங்கமம் என்றும் சொல்லலாம்.



• அருண்பிரகாஷ்

# நடக்குமென்பார்; நடக்கும்!

## ஜோதிட பதில்கள்

**என்** மகளுக்கு எப்போது, எப்படி வரன் அமையும்?

- லலிதா, மஹாராஷ்டிரா

உங்கள் பெண்ணுக்கு 25 வயதில் திருமணம் முடியும். படித்த, வேலையில் உள்ள பையன் அமைவான். சர்ப்ப தோஷம் உள்ள வரனைச் சேர்க்கவும்.

**என்** மகனுக்கு வெளி நாட்டு வேலை வாய்ப்பு உண்டா?

**என்** உறவினர் மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

- வி.வெங்கட்ராமன், செகந்தராபாத்

உங்கள் மகனுக்கு ஜனவரி 2008க்கு மேல் வெளிநாடு செல்ல யோகம் உள்ளது.

உறவினர் மகனுக்கு 35 வயதில் திருமணம் நடக்கும். அசலில் அமையும்.

**மேஷம்:** எண்ணங்கள் யாவும் ஈடேறும். தனம், வாக்கு, கல்விவளம் மேலோங்கும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். புதிய சொத்து வாங்க நேரிடும். புதிய தொழில் முயற்சி கைகூடும். வராத நிலுவைகள் கைக்கு வந்து சேரும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

**ரிஷபம்:** சுபகாரியம் கைகூடும். புதிய தொழில் முயற்சி நற்பலனைத் தரும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். குழந்தைகளால் மனசந்தோஷம் ஏற்படும். நீண்ட தூர அழைப்புகள் கிட்டும். கொடுக்கல், வாங்கல் நற்பயனை அளிக்கும். ராகு/கேது வழிபாடு நற்பலனைத் தரும்.

**மிதுனம்:** உங்களுக்குத் தெய்வ அனுகூலம் ஏற்படும். தடைப்பட்டு வந்த காரியங்கள் இனிது நிறைவேறும். பணக் கஷ்டம் விலகும். வேலையில் நற்பெயர் கிட்டும். வராத பணம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். குரு வழிபாடு நலம் தரும்.

**கடகம்:** திருமணத் தடை விலகும். குழந்தைகளால் மனக்கவலை தீரும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வேலைப்பளு அதிகரிக்கும். படிப்பில் கவனம் செலுத்தவும். குடும்ப வழியில் அனுசரணை தேவை. செலவுகள் சுபமானவையாக இருக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதலால் நற்பலன் கிட்டும்.

**சிம்மம்:** திடீர் தனயோகம் கிட்டும். மனக் குழப்பம் விலகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். நூதன முயற்சி பலன் அளிக்கும். வாக்கு சாதுரியம் மேலோங்கும். கல்வி வளம் மேலோங்கும். ராகு/கேது/குரு/சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனை உண்டாக்கும்.

**கன்னி:** அமோகமான வாரம். தனம், கல்வி, வாக்கு, நாணயம் மேலோங்கும். மனப் பிரமை தீரும். கொடுக்கல், வாங்கல் நற்பலனை அளிக்கும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். குரு வழிபாடு நல்லது.

**துலாம்:** வெற்றிகரமான வாரம். எண்ணிய காரியங்கள் ஈடேறும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். உத்தியோகத்தில் இடமாற்றம், ஊதிய உயர்வு கிட்டும். புதிய வேலை வாய்ப்பு வந்து சேரும். தொலைதூரப் பிரயாணம் செல்ல நேரிடும். சனி/குரு/கேது வழிபாடு நற்பலனை அளிக்கும்.

## தஞ்சை பரத்வாஜ்

### 18.3.2007 முதல் 24.3.2007 வரை

**விருச்சிகம்:** நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். ஆடை, ஆபரண அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். வீடு/மனை வாங்க நல்ல தருணம். எதிர்காலத் திட்டம் கைகொடுக்கும். வெளிநாட்டு அழைப்பு கிட்டும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனை அளிக்கும்.

**தனுசு:** தெய்வ அனுகூலம் நிறைந்த வாரம். உடல்நிலை சீராகும். சிலருக்குத் தொழில் மாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் இராது. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். தடை விலகித் திருமணம் கைகூடும். குரு/சனி வழிபாடு நற்பலனை அளிக்கும்.


**மகரம்:** இந்த வாரம் எதிலும் கவனத்துடன் செயல்படுவது நல்லது. ஊரோடு ஒத்துப்போவது நற்பயனை அளிக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் தேவை. மனக்குழப்பம் தீரும். திருமண காரியம் கைகூடும். உணவுக் கட்டுப்பாடு அவசியம். ராகு/கேது/சனி/வழிபாடு செய்துவருதல் கஷ்டங்களைக் குறைத்து நற்பலனை அளிக்கும்.




**கும்பம்:** முன்னேற்றமான வாரம். மனக்குழப்பம் தீரும். வராத நிலுவைகள் வந்து சேரும். திருமண காரியம் கைகூடும். உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். ராகு/கேது/குரு வழிபாடு உத்தமம்.

**மீனம்:** எடுக்கும் காரியம் கைகூடும். பண வரவு உண்டு. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். திருமணம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் உண்டு. வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து அணுகும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவருதல் நற்பலனை அளிக்கும். ○





கிராமியச் சூழலின் நடுவில் ஒரு பள்ளி மணி அடித்து விடுமோ என்ற அவசரத்தில், காக்கி டிரவுசரும் வெள்ளைச் சட்டையுமாகப் பரபரக்கும் ...கள். இன்னொருபுறம் பள்ளிக்கருகில் ஒரு ... கல்லுடைத்துக் கொண்டிருக்கிறான். ...க்க வேண்டும் என்பது அவனுடைய கனவு. ...ும் தமிழ் படிக்க வேண்டும் என்பது தானாத ...ச. ஓடுகிறான்; பள்ளி வாசல் கதவில் கன்னத்தைச் ...த்துக் காத்திருக்கிறான். உள்ளே சேர்த்துக் கொள் ...தான் யாருமில்லை.

இடைவேளையில் மாணவர்களோடு விளை ...ாடுகிறான். ஒரு பையனின் தமிழ்ப்புத்தகத்தை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய் இரவு முழுதும் படங்களை மட்டுமே ஆசை ஆசையாக ஏக்கத்தோடு பார்த்துவிட்டு, மறுநாள் கொண்டு வந்து தருகிறான். ஆனால் அந்த மாணவனோ முருகேசனைத் திருடன் என்கிறான்... அடிக்கிறான்.

இன்னொரு நண்பன் சீருடை தருகிறான். அழுக்குச் சட்டையைக் கழட்டி எறிந்துவிட்டு, சீருடையை அணிந்து கொண்டு மறுநாள் ஆசையோடுப் பள்ளிக்குப் போகிறான். வாட்ச்மேன் உள்ளே விட மறுத்துக் கதவை மூடுகிறார். முருகேசன் கையிலிருந்து தவறி புத்தகங்கள் விழுகின்றன. மெள்ளக் குனிந்து தமிழ்புத்தகத்தை எடுக்கிறான். எடுத்து புத்தகத்தை ஒருமுறை முத்தமிட்டபடி ந ந்து போய்க் கொண்டே இருக்கிறான்.

அந்தப் பதினெட்டு நிமி டக் குறும்படம் நம் மனத்தைக் கனக்க வைத்தபடி முடிகிறது.

அநாதைச் சிறுவனான குழந்தைத் தொழிலாளியின் ஏக்கங்களை அற்புத மாகப் பதிவு செய்துள்ளார், சென்னை கவின் கலைக் கல்லூரி நான்காமாண்டு மாணவர் ரமேஷ். வந்தவாசிக்காரரான இவர், 'பேசும் ஊமைகள்' என்ற குறும் படத்தை ஏற்கெனவே இயக்கி உள் ளார். இவரின் இரண்டாவது முயற்சிதான் 'அ முதல்...'

தம்முடைய சின்ன வயதில், குழந்தைத் தொழிலாளியாக வாழ்ந்ததை நினைவு கூரும் இவர், இன்றும் இரவில் கல் வேலைக்கும், பகலில் கல் லூரிக்கும் சென்று வரு கிறார்.

இயக்குநர் மகேந் திரனைப் போல் சிறந்த படங்களைத் தர வேண் டும் என்பதுதான் கன வாம். வெல்லட்டும்!

சந்திப்பு: சிபிகு

# ...ரின் தவிப்பு!



★ ரமேஷ்

ஓஎஸ் இல்லாவிட்டால், கம்ப்யூட்டர் இல்லை, கம்ப்யூட்டர் இல்லாவிட்டால், அதற்குச் சாஃப்ட்வேர் எழுதுகிற வாய்ப்பும் இல்லை. உள்ளதும் போச்சுடா என்று மைக்ரோசாஃப்ட் பழையபடி தெருவுக்குப் போக வேண்டியதுதான்.

இப்படிப் பல கோணங்களில் யோசித்துப் பார்த்தபிறகு, வேறு வழியே இல்லாத ஒரு முனையில் தாம் சிக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தார் பில் கேட்ஸ். ஐ.பி.எம். பர்சனல் கம்ப்யூட்டர்களுக்கு உரிய ஒஎஸ்-ஸை, மைக்ரோசாஃப்ட்தான் எழுதியாக வேண்டும் என்கிற கட்டாயம் உண்டாகிவிட்டது.

கம்ப்யூட்டருக்கு ஒஎஸ் எழுதுவது என்றால், சாதாரண வேலை இல்லை. 'அவன் அன்றி அணுவும் அசையாது' என்று பகவானைப் பற்றிச் சொல்கிறார்களே, அதுபோல, கம்ப்யூட்டரின் அத்தனைவிதமான பணிகளுக்கும் பின்னணிச் சூத்திரமாக இயங்கக் கூடிய ஒஎஸ், மிகச் சிக்கலான ஒரு சமாசாரம்.

மைக்ரோசாஃப்டால் ஒஎஸ் எழுத முடியாது என்றில்லை. அவர்களுக்கு எழுதத் தெரியாது என்பதுதான் பிரச்னை. முறைப்படி கற்றுக்கொண்டு எழுதிப் பழகவும் இப்போது நேரமில்லை.

ஐ.பி.எம். பர்சனல் கம்ப்யூட்டர்களை மார்க்கெட்டிங் செய்யும் நேரம் மெள்ள நெருங்கிக் கொண்டிருந்த ஆனால், அவர்களுடைய வன்பொருள் இன்னும் முழுமையாக வடிவமைக்கப் பட்டிருக்கவில்லை; பிழையின்றி உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

இதனால், இன்னும் சோதனை நிலையிலிருந்த கம்ப்யூட்டர்கள் அனைத்தும் பலவிதமான பிரச்னைகளோடு அழுது



**11** **என்.சொக்கன்**

# ஓஎஸ் படுத்திய பாடு!



வடிந்தன. அவற்றுக்கான சாஃப்ட் வேர்கள் எழுதும் பணியில் ஏற்கெனவே ஏகப்பட்ட தொல்லைகளைச் சந்தித்துக் கொண்டிருந்தது மைக்ரோசாஃப்ட். அதற்கு நடுவே, புதிதாக இந்த ஓஎஸ் தலைவலி.

பில் கேட்ஸ் யோசித்தார். நமக்கோ ஓஎஸ் எழுதத் தெரியாது. இதற்குமேல் எழுதப் பழகிக் கொண்டிருப்பது சரி வராது.

அப்படியானால், நாளைக்கு 'ஓஎஸ் எங்கே?' என்று கேட்கும் ஐ.பி.எம். முக்கு என்ன பதில் சொல்வது?

இங்கேதான் கேட்ஸின் மூளை கூடுதல் வேகத்தில் வேலை செய்தது. ஐ.பி.எம் அறிமுகப்படுத்தும் பர்சனல் கம்ப்யூட்டர்கள் மிகப் பெரிய வெற்றியடையும் என்பதில் அவருக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. இப்படியொரு முக்கியமான கம்ப்யூட்டரில், ஐ.பி.எம்.மின் தயாரிப்புகளை மக்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்குவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், மைக்ரோசாஃப்ட் எழுதிய ஓஎஸ்ஸைப் பயன்படுத்துவார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நம்முடைய நிறுவனத்தை உயரத்துக்கு எடுத்துச் செல்வது சுலபம்.

இப்படி யோசித்த கேட்ஸ், பி.எம்.ஐ. பர்சனல் கம்ப்யூட்டர்களுக்கு நாம் ஓர் ஓஎஸ் தயார் செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்தார்.

கவனியுங்கள், ஓஎஸ் எழுதுவது அல்ல, ஓஎஸ் தயார் செய்வது!

இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்கிறீர்களா? அந்தக் காலத்துத் 'திருவிளையாடல்' படத்தில் 'சிவாஜி'யும் 'தருமி' நாகேஷும் இடம் பெற்ற அந்தப் புகழ் பெற்ற நகைச்சுவைக் காட்சியைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள், விஷயம் புரியும்.

தருமியின் கதையில், அரசருக்கு வந்த சந்தேகம்போல், இங்கே ஐ.பி.எம்முக்கு ஓர் ஓஎஸ் தேவைப்பட்டது. அதைச் சரியானபடி எழுதித் தருகிறவர்களுக்கு, நிறைய லாபம் உறுதி!

அங்கே தருமிக்குப் பாட்டு எழுதத் தெரியவில்லை. இங்கே மைக்ரோசாஃப்டுக்கு ஓஎஸ் எழுதத் தெரியவில்லை. ஆனால், அந்த 'மெகா' பரிசு மட்டும் கண்டிப்பாக வேண்டும் என்று இருவருமே ஆசைப்பட்டார்கள்.

தருமியின்முன், சிவபெருமான் தானே தோன்றினார். ஆனால், பில் கேட்ஸ் அப்படிக் காத்துக் கொண்டிருக்கவில்லை, மூக்குக் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக் கொண்டு தனக்கு ஓர் 'ஓஎஸ் தானம்' செய்யக்கூடிய சிவபெருமானைத் தேடிக் கிளம்பிவிட்டார்...!

(தொடரும்)

மைக்ரோ சாஃப்டின் ஓஎஸ் இருக்கிறது என்றால், அது மிகப் பெரிய பெருமை. இவர்களுக்கு மிகப் பெரிய விளம்பரம்!

# வாழைப்பழம்



என் சித்தப்பா சிரித்தால் அவர் உடம்பெல்லாம் குலுங்கும். அவருக்குச் சிரிப்பு அவருடைய உடல் முழுவதுமாக விரவி இருந்தது.

சிரிப்பு போல அவருக்கு நான்கு பேரோடு உட்கார்ந்து நிறையச் சாப்பிடப் பிடிக்கும். அவருடைய அப்பா - அதாவது என்னுடைய அப்பாவின் அப்பா இறந்த போது அவருடைய எட்டுக் குழந்தைகளில் ஐந்து, பத்து வயதைத் தாண்டவில்லை. தாத்தா அற்பாயுளில் இறந்ததாக யாரும் குறிப்பிடவில்லை. அவரைப் போலவே என் அப்பா, என் இரு சித்தப் பாக்களும் ஐம்பத்தைந்து வயது தாண்டு வதற்கு முன்பு இறந்து விட்டார்கள். அவர்களும் அற்பாயுளில் இறந்ததாக யாரும் அந்த நாளில் குறிப்பிடவில்லை.

என் அப்பா, இரு சித்தப்பாக்கள் ஆகிய மூவரில் என் பெரிய சித்தப்பா தான் ஏகப்பட்ட நாட்கள் ஆஸ் பத்திரியில் இருந்தார். அவர்தான் உடல் குலுங்கச் சிரிப்பவர்.

நான் சிறுவனாக இருந்தபோது பிரமிப்பு ஏற்படுத்திய இடங் களில் ஆஸ்பத்திரியும் ஒன்று. நான் வசித்த ஊரில் இரண்டு ஆஸ்பத்திரிகள் இருந்தன. ஒன்று ரயில்வே நடத்திய ஆஸ்பத்திரி; இரண்டாவது அந்த ஊராட்சி நடத்திய ஆஸ்பத்திரி. இரண்டாவது ஆஸ்பத்திரி ரயில்வே நிலை யத்துக்குப் பக்கத்தில் இருக்கும். அதன் வெளிச்சுவர்கள் இலேசான நீல வர்ணம் பூசப்பட்டிருக்கும். ரயில்வே ஆஸ்பத்திரி ஊருக்கு வெளியே இருந் தது.

முதல் உலக யுத்தம் முடிந்த கையோடு என் அப்பா ஓர் இருபது வயது இளை ஞனாக அந்த ஊருக்கு வேலை தேடி வந்தார். யுத்தத்துக்காக ஆரம்பித்த சில அமைப்புகளைக் கலைத்துவிடும் அமைப் பில் அவருக்கு வேலை கிடைத்தது.

என் இரு சித்தப்பாக்களும் அப்பா விடம் வந்துவிட்டார்கள். என் சித்தப் பாக்களுடைய உணவுக் கொள்முதல், உணவுப் பழக்க வழக்கங்கள் என் அப்பாவைவிட என் அம்மாவுக்குத்தான் நன்றாகத் தெரியும். இருபது ரூபாய் சம்பளத்தில் வீட்டு வாடகையும் கொடுத்துவிட்டு நான்கு பேர் சாப்பிட வேண்டுமென்றால் கணக்கு பெரிய பிரச்சனையாகிவிடும்.

ஒரு வருட காலத்துக்குள் இரண்டு சித்தப்பாக்களுக்கும் அப்பா வேலை வாங்கிக் கொடுத்து விட்டார். அப்பா மாதிரி அலுவலக வேலையில்லை. ஆனால், வேறு சௌகரியங்கள் உண்டு. சின்னஞ் சிறு ஊர்களில் வேலை என்பதால் வீடு உண்டு. கிராமம் என்பதால் உதவி யாளர்கள் கிடைப்பதில் சிரமமிருக் காது. மின்சார விளக்கு இருக்காது, குழாய்த் தண்ணீர் இருக் காது. ஆனால் 'ராஜா மாதிரி' வாழ்க்கை சாத்தியம்.




# அசோகமித்திரன்

எனக்கு நினைவு தெரியும் வயது வந்தபோது இரண்டு சித்தப்பாக்களுக்கும் நிறையக் குழந்தைகள். நாங்கள் ஒரே ஊரில் இருக்க, அவர்கள் சிறு சிறு ஊர்களாக ஏழெட்டில் இருந்துவிட்டார்கள். மாற்றங்களினால் சித்தப்பாக்களுக்குச் சிரமமில்லை. ஆனால், குழந்தைகள் படிப்பு சீராக அமையவில்லை. பெண்கள் ஐந்தாவது வகுப்போடு வீட்டில் இருந்து விட வேண்டியிருந்தது. பிள்ளைகள் யார் வீட்டிலோ இருந்துகொண்டு படிப்பைத் தொடர வேண்டியிருந்தது.

பெரிய சித்தப்பாவுக்கு எங்கள் ஊருக்கே மாற்றலானது. எங்கள் ஊரிலும் அவருக்கு குவார்ட்டர்ஸ்! ஆனால் மிகவும் சிறியது. அவ்வளவு சின்ன வீட்டுக்கு ஒரு தோட்டம் வேறு!

அது இரண்டாம் உலக யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம். தெருவில் நிறைய மிலிட்டரி டிரக்குகள். காக்கி வண்ணத்தில் பெரிய வண்டிகள். நம்பர் பிளேட்டில் ஒரு செங்குத்தான அம்புக்குறி இருக்கும். புதன்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும் சினிமாக் கொட்டகைகள் இராணுவத்தாரால் நிரம்பி வழியும். அவர்கள் சீருடையோடு வந்தால் பாதிக் கட்டணம். வாடகை சைக்கிள் அந்த இரு நாட்களில் வாடிக்கையாளர்களுக்குக் கிடையாது. அவையும் இராணுவக்காரர்களுக்குத்தான்! ஊர்க்காரர்களை இல்லாத கேள்வி கேட்கும் சைக்கிள் கடைக்காரர்கள் இராணுவக்காரர்களின் அடையாளச் சீட்டை வாங்கி வைத்துக் கொண்டு சைக்கிளைக் கொடுத்து விடுவார்கள். இர






- குகும்புராஜ்

வில் அந்த இராணுவக்காரர்கள் எந்தக் கடையிலிருந்து சைக்கிளை எடுத்து வந்தோம் என்று நினைவில்லாமல் திண்டாடுவார்கள்.

சைக்கிளில் போகும் இராணுவக் காரர்களால் சில சங்கடங்கள் நேர்ந் தால், இராணுவ டிரக்குகளால் சாலை களில் நடமாடுவதே அபாயகரமான தாகிவிட்டது. தினம் இருவர், மூவராவது இராணுவ டிரக்குகளால் அடிபட்டுப் படுகாயமடைந்தார்கள், அல்லது இறந்து போனார்கள். ஒரு டிரக்கு என் பெரிய சித்தப்பாவைப் பின்னாலிருந்து மோதியிருக்கிறது. சித்தப்பாவுக்குப் பெரிய உடம்பு. என் சித்தி செய்த புண்ணியம் சித்தப்பாவுக் குக் கால் எலும்பு முறிவோடு விட்டது.

மகிழ்ச்சியைவிட எல்லாருக்கும் ஆச்சரியம், சைக்கிளில் போகிற வனைப் பின்னாலிருந்து இராணுவ டிரக் மோதி அவன் உயிர் பிழைப்பதா வது?

சித்தப்பாவை ரயில்வே ஆஸ்பத்திரி யில் சேர்த்திருந்தார்கள். இன்று கேட் கத் தோன்றுகிறது, எப்படி எடுத்துப் போனார்கள்? அன்று ஆம்புலன்ஸ் வண்டி என்று கிடையாது. செவர்லே டூரர் என்பதுதான் டாக்சி. அதில் எடுத்துப் போவது சித்திரவதையாக இருக்கும். ஆதலால் ஒற்றை மாட்டு வண்டியில் சித்தப்பாவை ஏற்றி ஆஸ் பத்திரிக்கு எடுத்துப் போயிருப்பார் கள்.

நான் ஆஸ்பத்திரியில் சித்தப் பாவைப் பார்த்தபோது அவர் ஏதோ தர்பார் நடத்துவது போல இருந்தது. அவரு டைய இடக் காலுக்கு முழங்காலிலிருந்து பாதம் வரை மாவுக்கட்டு போட் டிருந்தது. அவரைச் சுற்றி இருந்தவர்களைச் சிரிக்க வைப்பது போலச் சித்தப்பா ஒரு பென்சில் கொண்டு அந்த மாவுக்கட்டைத் தட்டு வார். வெவ்வேறு தாளகதி களில் தட்டுவார். மாலை நேரம் சிரிப்பும் கும்மாளமுமாக இருக் கும். அது பெரிய அறை. இன்னும் ஏழெட்டுப் பேர் படுக்கையில் கிடந் தார்கள். அவர்களிடமிருந்து அவ்வப் போது முனகல் வரும்.

என் அப்பா போய்ப் பார்த்தாரோ இல்லையோ, நான் தினமும் சித்தப் பாவை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த் தேன். ஓரிரு தடவை யாருமே இருக்க மாட்டார்கள். அப்போது சித்தப்பா கண்களை மூடியபடி படுத்திருப்பார். முதல்முறை எனக்கு விசேஷமாக ஏதும் தோன்றவில்லை. ஆனால் இரண்டாம் முறை அவரைத் தனியாகப் பார்த்த போது பரிதாபமாக இருந்தது. அவரு டைய சைக்கிள் எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும். அவருடைய கால்கள் பெடலை மிதித்தபடியே இருக்கும். இப்போது மாதக் கணக்கில் அவர் படுக்கையில்.

சித்தப்பா சட்டென்று கண்களை விழித்துப் பார்த்தார். சிரிக்கத்தான் முயற்சி செய்தார். முடியவில்லை. "எப்படி வந்தே?" என்று கேட்டார்.

"சைக்கிள்லதான்."

"ஒரு வாழைப்பழம் வாங்கிண்டு வரயா?"

எனக்கு அப்போது தனியாகக் கடைக்குப் போய் சாமான் வாங்கிய அனுபவம் கிடையாது.

"வாழைப்பழம் எங்கே கிடைக்கும்?" என்று கேட்டேன்.

"பான் பீடா கடையிலே கூடக் கிடைக்கும்." அங்கு வெற்றிலை பாக்குக் கடைக்கு அதுதான் பெயர்.

"என்கிட்டே காசு இல்லியே?" என்றேன்.

சித்தப்பா தலையணையடியில் மல்லாக்கப் படுத்தபடியே தடவிப் பார்த்தார். பிறகு என்னைப் பார்த்து, "என் தலையடியிலே ஒரு பைசா வைச்சிருந்தேன். பாரு, எங்கே போச்சுன்னு."

சித்தப்பா தலையணைக்கடியில் அவருடைய பொடி டப்பா இருந்தது. அழுக்காக ஒரு கைக்குட்டை. பைசா கைக்குட்டையில் சிக்கிக் கொண்டிருந்தது. பைசா ஒரு ரூபாயில் மிகச் சிறிய பகுதி. தொண்ணூற்றாறு பைசாக்கள் ஒரு ரூபாய்.

நான் பைசாவை எடுத்துக்கொண்டு வெற்றிலை பாக்குக் கடையைத் தேடிக் கொண்டு போனேன். அந்த இடம் எனக்குப் பழக்கம் கிடையாது. மேலும் நான் கடைகளுக்குப் பெரியவர்களுடன் தான் அதுவரை போயிருந்தேன்.

நான் வாழைப் பழத்துடன் திரும்பியபோதும் சித்தப்பா தனியாகத்தான் இருந்தார். நான் வாங்கிக் கொண்டு போன வாழைப் பழத்தைச் சித்தப்பா அவசரம் அவசரமாகச் சாப்பிட்டார். அவர் எப்போதும் ஆற அமரச் சாப்பிட்டுத்தான் நான் பார்த்திருக்கிறேன்.

"எனக்கு மூணு நாளா சித்திரவதை" என்றார். கண்களை மூடிக்கொண்டார். அவர் சொன்னது சரியாகப் புரியவில்லை. ஆனால், மிகவும் சிரமப்படுகிறார் என்று தெரிந்தது.

"எனக்கு எங்கேருந்தாவது விஷம் கொஞ்சம் வாங்கிண்டு வாயேன்" என்றார்.


"பான் பீடா கடையிலே கிடைக்குமா?"

சித்தப்பா தலையில் அடித்துக் கொண்டார். பிறகு, "இதை யார்கிட்டேயும் சொல்லாதே," என்றார்.

அப்போது சித்தப்பாவின் குடும்பத்தாருடன் இன்னும் மூன்று நான்கு அக்கம்பக்கத்துக்காரர்களும் வந்தார்கள். சித்தப்பாவின் தர்பார் தொடங்கியது.

எனக்கு ஆஸ்பத்திரிகள் மீதிருந்த மயக்கம் குறையவில்லை. ஆனால், நான் மீண்டும் சித்தப்பாவைப் பார்க்கப் போகவில்லை. ○







# லாலு வீட்டு ஹோலி...

**மு**ம்பையில் பழம் பெருமை வாய்ந்த ஓவியக் கல்லூரி 'ஜே.ஜே.ஸ்கூல் ஆஃப் ஆர்ட். அதன் நூற்றைம்பதாவது ஆண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டுள்ளது. ஓவியம் பயிலும் மாண வர்களுக்கு, மனித உடலமைப்பு வரைய பயிற்சி அளிப்பதற்காக நிஜ மனிதரை நிறுத்தி வைத்து, மாணவர்களை வரையச் செய்வது வழக் கம். இந்த நூற்றைம் பதாவது ஆண்டு விழா வின் ஓர் அங்கமாக, ஒரு பிரபல பாலிவுட் ஸ்டார், மாடலாய் நிற்க, மாணவர்கள் வரையப் போகிறார்கள். அந்த ஸ்டார்: சசிகபூர்.

**கோ**டை நெருங்க, நெருங்க நாட்டின் சில பெரிய மாநிலங்கள், கடும் மின்சாரத் தட்டுப்பாட்டைச் சந்திக்க உள்ளன அந்த மாநிலங்களின் பட்டியலில் முதலிடம் மகாராஷ்டிராவுக்கு. அடுத்து, ஆந்திரா, கர்நாடகா, தமிழ் நாடு மாநிலங்கள், ஒரு யூனிட் மின்சாரத்தை வழக்கமாக இரண்டு அல்லது இரண்டரை ரூபாய் செலவில் தயாரிக்க முடியும். ஆனால், வாங்கும் பட்சத்தில் யூனிட்டுக்கு ஆறு ரூபாய் வரை கொடுத்து வாங்க வேண்டி இருக்கும். பல்வேறு மாநில மின்வாரியங்கள் இந்த வருடம் அடைந்துள்ள மொத்த நஷ்டம் எவ்வளவு தெரியுமா? இருபத்தாறு ஆயிரம் கோடி! ஷாக் அடிக்கிறதா?

**வ**ட இந்தியாவில் 'ஹோலி' பண்டிகையை, மிகவும் வண்ணமயமாகக் கொண்டாடுவார்கள். இந்த ஆண்டும், டெல்லியில் ஜனாதிபதி, பிரதமர், சோனியாகாந்தி, அத்வானி என அனைவரது வீடுகளிலும் வண்ணங்களை வாரி இறைத்து ஹோலி கொண்டாடப்பட்டது. ஆனால், பாட்னாவில் லாலுவின் பங்களாவில் வித்தியாசமான கொண்டாட்டம். சாணத்தையும், மண்ணையும் குழைத்து ஒருவர் மீது ஒருவர் வீசிக் கொண்டார்களாம். உற்சாகத்தில் லாலுவின் ட்ரஸ்கூட கிழிந்து விட்டதாம்!

- எஸ்.சி.எம்

## ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501. திருவாரூர் மாவட்டம்.

# ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

அன்புடையீர்,

நிகழும் அவ்யய வருஷம் பங்குனி மாதம் 22-ஆம் தேதி வியாழக்கிழமை (5.4.2007) ஸ்வாதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் **ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானுக்கும், மற்ற பரிவார தேவதைகளுக்கும்** 10-ஆம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா இறையருள், குருவருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது. இறையன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம். நன்கொடைகளைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ அளிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்பக் கோருகிறோம்.

### ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சி நிரல் (05.04.2007வியாழன்)

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 7.00 | மணி | - | கோபூஜை |
| " | 7.30 | மணி | - | புண்யாஹவசனம், அனுக்ஞை, மஹா ஸங்கல்பம் |
| " | 8.00 | மணி | - | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், கலச ஸ்தாபனம், ஸ்தபன பூஜை |
| " | 9.00 | மணி | - | நவக்ரஹ ஹோமம் |
| " | 10.00 | மணி | - | ஜபம் - பாராயணம், பூஜை - ஹோமம் |
| பிற்பகல் | 12.00 | மணி | - | பூர்ணாஹுதி |
| " | 12.30 | மணி | - | மஹாபிஷேகம் |
| " | 1.30 | மணி | - | ஸ்வாமி, அம்பாளுக்கு அர்ச்சனை, மஹா தீபாராதனை |

இங்ஙனம்

*Dr. V. கிருஷ்ணமூர்த்தி*
*பரம்பரை அறங்காவலர்*
*ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்*

*பொன். சிவசங்கரன் M.A.*
*நிர்வாக அதிகாரி*


ஸ்ரீ ஸற்குணேச்வரர்
கைங்கர்ய ஸபா (Regd).
மற்றும் கிராமவாசிகள்

**நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரிகள்**

G. கண்ணன்,
D/127-A, ராஜமன்னார் சாலை,
கே.கே.நகர்,
சென்னை –78.
போன்: 044-24836495

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 சுப்பாரெட்டித் தெரு,
எஸ்.என்.ஆர்.கன்ஸ்டிரக்ஷன்ஸ்,
சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. குஞ்சிதபாதம், ஆடிட்டர்
G. நடேசன் & கம்பெனி
டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்–612 001
போன்: 0435 2420047







# ஒன்றை மட்டும் எப்படி..?

இவருக்கு இருப்பதுபோன்ற அசாத்திய பொறுமை எல்லோருக்கும் இருந்தால், உலகின் எந்த மூலையிலும் வன்முறைப் போர் பதிவாகி இருக்காது.


இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அனைத்து ஓவியங்களையும் வாங்கி விட ஆசைதான். ஆனால், என் நிதி நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லையே...

என் முன் விஸ்வ ரூபம் எடுத்து நிற்கும் கேள்வி... இந்த ஓவியங்களிலிருந்து ஒன்றை மட்டும் நான் எப்படித் தேர்ந்தெடுப்பது?


- பார்வையாளர் புத்தகத்தில் வியந்து சென்றவர்கள் விட்டுச் சென்ற குறிப்புகள்..

கோட்டுச் சித்திரங்களோ, வாட்டர் கலரோ, வாஷ் டிராயிங்கோ சுலபம். ஆனால், புள்ளி ஓவியங்களை வரைவது, வைரத்தைப் பட்டை தீட்டித் தங்க நகையில் பொருத்துவதுபோல நுணுக்கமானது. அதற்கு மிகுந்த திறமையும்,

படங்கள்:
**பொள்ளாச்சி சுந்தரம்**







**அசாத்திய பொறுமையும் தேவை. அவை இரண்டும் நிரம்பப் பெற்றவர் என் நண்பர் சந்திரசேகர்.**


- ஓவியரும் நடிகருமான சிவகுமாரின் பாராட்டுப் பத்திரம்...

...எல்லாம் பறைசாற்றுகின்றன சந்திரசேகரின் ஓவியத் திறமையை. கடந்த மார்ச் இரண்டு முதல் பத்து வரை சென்னை வின்யசா ப்ரீமியர் ஆர்ட் கேலரியில் இடம் பெற்ற சந்திரசேகரின் ஓவியக் கண்காட்சிக்கு ஏக வரவேற்பு.

சென்னைக் கவின் கல்லூரியின் முன்னாள் மாணவரான சந்திரசேகருக்கு ஓர் ஓவியம் வரைய மூன்று முதல் நான்கு வாரங்கள் ஆகுமாம். இவரது புள்ளி ஓவியங்களின் இன்ஸ்பிரேஷன் மாமல்லபுரம் சிற்பக் காட்சிகள்.

"நான் பேசுவதைவிட என்னைப் பற்றி என் படைப்புகள்தான் அதிகம் பேச வேண்டுமென நினைக்கிறேன்" என்று அமைதியாகி விடுகிறார் சந்திரசேகர். கனத்த மௌனத்தைத்தான் பேசுகின்றன அவரது ஓவியங்களும்.

**- மௌலி**



* சந்திரசேகர்

எப்போது உறங்கினான் என்று தெரியவில்லை. ஆனால் கண் விழித்த போது மணி ஏழரையாகியிருந்தது. விடிந்ததும் முந்தைய நாள் கோடம்பாக்கம் ரயில்வே மேம்பாலத்தில் சாந்தியுடன் பேசியதுதான் முந்திக்கொண்டு நினைவில் வந்து நின்றது. ஆர்வமும், தயக்கமும், காரணமற்ற பயமும், பதற்றமுமாகப் பேசியதெல்லாம் சரிதான் என்று உறக்கம் வரும்வரை தோன்றியது. ஆனால் இதென்ன? விழித்து எழுகிற நேரத்தில் அத்தனையும் அபத்தமாக அல்லவா தெரிகிறது?

முத்துராமனுக்குக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது. தன் தெளிவின்மையை வலுக்கட்டாயமாக அவளது சிந்தனைக்குள் திணித்துவிட்டோமோ? என்று நினைத்தான். முட்டி மோதி முன்னுக்கு வர விரும்புபவனுக்கு வலிகள் குறித்த ஞாபகம் வருவதே ஆடம்பரமல்லவா? என்ன அபத்தம்! தேரோட்டம் தாங்கும் பூமியாக ஏன் அவள் இருக்க வேண்டும்? ஏற்றி உட்கார வைத்து 'ஓட்டிப் போகிறேன்' என்று சொல்லத் துப்பில்லாதவன், அரசியலில் மட்டும் என்ன கழற்றிவிட முடியும்?

உடனே ஓடிப்போய் முந்தைய நாள் பேசிய அனைத்தையும் அவள் மனத்திலிருந்து அழித்துவிட்டுப் புதிதாக ஒன்று எழுதி நிரப்ப முடியாதா என்று நினைத்தான். சிரித்துக்கொண்டான்.

குளித்து, சாப்பிட்டுக் கிளம்பும்போது அம்மா கேட்டாள்: "எப்படா வருவ?"

"தெரியலம்மா... எப்பவும் போலத்தான்."

"உங்க சித்தப்பா பேசணும்னிட்டுப் போனாரு. முடிஞ்சா வூட்டாண்ட ஒரு நடை வந்துட்டுப் போவச் சொன்னாரு."

"வந்திருந்தாரான்ன?"

"அக்காங்... நேத்திக்கு வந்தாரு. நீ வர்றதே இல்லன்னிட்டு ஒரே பாட்டு. உங்கப்பாவுக்கு என்னாமோ மருந்து ஒண்ணு குடுத்துட்டுப் போனாரு. தேச்சி ஊறவெச்சிக் குளிச்சா குதிகால் வலி இருக்காதாமா... போய்தான் பாத்துட்டு வாயேன் ஒருதாட்டி. இன்னா பெரிசா வெட்டி முறிக்கற?"




**11**

**பா.ராகவன்**

முத்துராமன் சிரித்தான். ஒரு வகையில் அவன் கேட்டதில் எந்தத் தவறும் இல்லை. வெட்டி முறிக்க ஏதுமற்ற வாழ்க்கையாகத்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. தீபாவளி, பொங்கல் வந்தால் துணி தைக்கும் வேலை சரியாக இருக்கும். சாதாரண தினங்களில் குப்பத்து மனிதர்கள் புதுத் துணி எடுக்கிற வழக்கமில்லை.

பொதுவாக, அவன் தையல் பணிகளை இரவுகளில் மட்டுமே வைத்துக் கொள்வான். ஊர் உறங்கிவிட்ட இரவுகள். ஓடும் தையல் இயந்திரத்தின் கைச் சக்கரத்துடன், தன் கனவுகளைச் சுழற்றியபடி பணியாற்றுவதுதான் அவனுக்கு வசதி. இத்தனை நாள் வாய்க்காத ஒரு சந்தர்ப்பம் இப்போது கூடி வந்திருக்கிறது. வட்டச் செயலாளருடனான நெருக்கம், தனிப்பட்ட லாபம் ஏதுமில்லாது போனாலும் குப்பத்துக்கு ஒரு தாற்காலிக விடிவு. இன்றைக்குக் கொசு ஒழிப்புப் பணி ஆரம்பமாகப் போகிறது. சாக்கடைகளுக்கு சிமெண்ட் பூசிய கால்வாய். கால்வாய்களுக்கு கான்கிரீட் மூடி, சந்துதோறும் கொசு மருந்து. ஆற்றங்கரையோரம் குப்பை ஒழிப்பு.

எப்படியும் இரவாகிவிடும். 'இடையில் நேரம் கிடைத்தால் அவசியம் சித்தப்பாவைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்' என்று நினைத்துக்கொண்டான். அவனுடைய தந்தையைக் காட்டிலும் சித்தப்பாவுக்கு அரசியல் வெறியும், வேகமும் அதிகம். அவர் மாற்றுக் கட்சி. அண்ணனும், தம்பியும் அரசியல் பேசத் தொடங்கினால் பெரும்பாலும் சண்டையில் முடியும். ஒவ்வொருவரின் தலைவரும் அடுத்தவருக்கு ஏனோ பிடிக்கவில்லை. இரண்டு பேருமே அரசியலில் இறங்கி உருப்படாமல்தான் போனார்கள்.



"தபார் நாகராஜு, நாம அடிச்சிக்கிட்டு என்னா ஆவப் போவது? எங்கட்சில என்னால மேல வர முடியல. உங்கட்சில உன்னால மேல வர முடியல. தொண்டனா இருந்து ரிடையர் ஆவுடா சோம்பேறின்னு நம்ம தலைல எழுதி வெச்சிட்டான். ஒண்ணு புரிஞ்சிருச்சி எனக்கு. நாலு காசு சில்ற தேறுமா, ஒரு போஸ்ட்டு கெடைக்குமான்னு கணக்கா ப்ளான் பண்ணி நமக்கு அப்புறம் உள்ளார வந்த அத்தினி பேரும் மேல பூட்டானுக. பத்து லட்சம் வாட்டி வால்க கோசம் போட்டிருப்பமா? நல்லாத்தான் வாலறானுக. நாம வாலறமான்னு கண்டுக்கத்தான் ஒரு நாதி இல்லாம பூடுச்சு..."

நல்ல போதை ஏற்றிக் கொண்டு வீட்டில் சாப்பிட உட்கார்ந்த ஒரு தினத்தில்

அவனது தந்தை தன் தம்பியிடம் பேசியது அவனுக்கு வரிவரியாக மனத்தில் ஓடியது. பரிமாறிக் கொண்டிருந்த அம்மா, அவள் பாட்டுக்குப் புலம்பிக் கொண்டேதான் இருந்தாள். அன்றைக்குத்தான் அவன் முடிவு செய்தான், அரசியலில் அவனது நோக்கம் பதவி, மேலே வருவது. உதைத்துக்கொண்டு பாயும் ஒரு குதிரையைப் போல நிற்காமல் ஓடி வெல்வது. கொள்கைகள் அவசியம் வேண்டும். மேடைப் பேச்சுக்கு அது இல்லாமல் முடியாது. ஆனால், மேடைக்குப் பின்னால் வேண்டியவை என்னென்ன என்று தெரிந்து கொள்ளாமல் இருப்பது அபத்தம். இன்றைக்குக் கிடைத்திருக்கும் வட்டச் செயலாளரின் நெருக்கமும், அண்மையும் கண்டிப்பாகத் தன் வாழ்வில் ஒரு படி மேலேறச் செய்கிற விஷயம்தான் என்று அவனுக்கு உறுதியாகத் தோன்றியது.

'சித்தப்பா, நீங்களும் அப்பாவும் விட்ட இடத்தில் நான் ஜெயிக்கப் போகிறேன். தொலைத்த சில்லறையை நோட்டாக மாற்றி எடுக்கப் போகிறேன். நம்புவீர்களா? ஆசிர்வதிப்பீர்களா?'

'உருப்பட மாட்ட'

அவரது கரகரத்த குரல் மனத்துக்குள் ஒலித்தது. இப்போதும் சிரித்துக் கொண்டான்.

முத்துராமன் ஆற்றங்கரைக்கு வந்த போது அங்கே வட்டச் செயலாளர் வந்து அமர்ந்திருந்தார்.

"ஐயா... வாங்க... வாங்க... எப்ப வந்திங்க?"

"இப்பத்தான் வரேன் முத்து. உன்னியத்தான் கேட்டேன், இல்லடா?" என்றார் பின்புறம் திரும்பி.

"அ... ஆமாங்க. தம்பி எங்கன்னு கேட்டுக்கிட்டேதான் வந்தாரு."

"கொஞ்சம் தூங்கிட்டேங்க. நைட்டு லேட்டாயிருச்சி."

"அதெல்லாம் பரவால்லப்பா... எப்பிடி நடக்குது வேலைங்க? நேத்திக்கி கார்ப்பரேஷன் கமிசனர் பேசினாரு. சொந்தக் காசப் போட்டு நல்ல காரியம் பண்றீங்கன்னாரு. அதுக்குத் தானே பொது வாழ்க்கைல இருக்கறது? என்ன நாஞ் சொல்றது?"

"கண்டிப்பாங்க. நியாயமாப் பாத்தா கார்ப்பரேசன் செய்ய வேண்டிய வேலைங்க இது. கொசு மருந்து அடிக்கச் சொல்லி எத்தினிவாட்டி மனு குடுத்திருப்பமோ கணக்கே கிடையாது. கரீட்டா தீவாளிக்கு மறுநாள் வந்து அடிப்பான். ஏழை பாழைங்ககிட்ட துட்டு கேக்க எப்பிடி மனசு வருதோ தெரியாது. என்னாத்தச் சொல்லி என்னங்க? உங்கள மாதிரி யாரானா... [illegible]

## ஈடாகாத சுகம்!

சாதனைகள் சமயங்களில் சத்தமில்லாமலும் அரங்கேறுவதுண்டு. 'அண்டர் தி ஸ்கை' என்னும் ஹாலிவுட் படத்துக்கு இசையமைத்து வருகிறார் ஒரு தமிழர். "எத்தனை ஹாலிவுட் படத்துக்கு இசையமைத்தாலும் ஒரு தமிழ்ப் படத்துக்கு மெட்டமைக்கும் சுகத்துக்கு ஈடாகாது" என்கிறார் இசையமைப்பாளர் தஷி. அமைதியாக! 'தந்திரா' என்னும் மலையாளப் படத்துக்காக கடந்த ஆண்டின் சிறந்த பின்னணி இசையமைப்பாளர் விருதை கேர அரசிடமிருந்து பெற்றிருக்கிறார்.

"பழைய தமிழ்ப் பாடல்களை ரீமிக்ஸ் செய்து ஆல்பமாக வெளியிட வேண்டும் என்பது எனது தீராத ஆசை" என்று கூறும் தஷி, தற்போது எட்டுப் படங்களின் இசையமைப்பாளர். 'வில்லன் மாதிரி இருக்கீங்களே... நடிக்கலாமே...?' என்றால், "இசைதான் என் உலகம். உலக இசையால்தான் நான் உயிர் வாழ்கிறேன். வேறெதுவும் எனக்குத் தேவையில்லை. தெரியாது" என்கிறார்.



- கௌசல்யா

பண்ணாத்தாஞ் சரி."

வட்டம் சட்டென்று எழுந்து அவன் தோளில் கை போட்டுத் தனியே அழைத்துப் போனார்.

"ஒரு விசயம் முத்து ராமா... நம்ம பசங்க செலராண்ட சொல்லி பத்திரிகைங்களுக்கு நியூஸ் வுட அனுப்பி யிருக்கேன். எப்பிடியும் இன்னிக்கி இல்லாங் காட்டி நாளைக்கு நாலஞ்சு பேரு வந்து பாப்பானுக. அந்த நேரம் நான் இங்க இருந்தா நல்லா இருக்காது. நீ என்ன செய்யி, யார் வந்து கேட்டாலும் கரெக்டா இந்த மேட்டர மட்டும் சொல்லிடு. நான் திங்கற சோறு, நம்ம தலைவர் போட்ட பிச்சை, மக்கள் குடுத்த வரம். என்னை வாழவெக்கற தலைவருக்கும் மக்களுக்கும் என்னால என்ன செய்ய முடியும்? நானும் ஏழைதான். கஷ்டப்பட்டு ஏதோ கொஞ்சம் சம்பாதிக்கறேன். அந்தப் பணத்த இந்த மாதிரி காரியங்களுக்குச் செலவு பண்றதுதான் நம்ம தலைவருக்கு சந்தோசம் தரக்கூடிய விசயம். முழுக்க முழுக்க தலைவர் பேராலதான் இதச் செய்யறேன். என் க்ரெடிட்டுன்னு இதுல ஒண்ணும் கிடையாது. அப்பிடின்னு நான் சொன்னேன்னு சொல்லிரு..."

முத்துராமனுக்கு வியப்பாக இருந்தது. பேட்டிகள் வாய்ப்பு வரும்போது ஏன் தவிர்க்க வேண்டும்?

"அட நீ ஒருத்தன்யா. நான் பேசக் கூடாது முத்து. இப்பப் பேசினா அது நல்லாருக்காது. விசயம் பெரிசாவணும். அத்தினி பேரும் இதப் பாராட்டணும். நியூஸ் பாத்துட்டு தலைவர் கூப்புட்டு என்னிய பேசணும். நான் பேசி இது வரைக்கும் ஒண்ணும் வெளங்கல. அவரு என்னிய கூப்ட்டுப் பேசினாத்தான் நான் நெனச்சது நடக்கும். புரியுதா?"

"சர்தாங்க" என்றான்.

"பாத்துக்க. எங்கியும் போயிராத. மத்த பசங்கள பேச வுட்றாத. உன்னியத்தான் நம்பறேன்" என்று தோளில் தட்டிவிட்டு வண்டியேறிப் போனார்.


மாலை வரை பம்பரமாகச் சுற்றி வேலைகளைக் கவனித்தான். குப்பத்தில் பாதி இடங்கள் முழுச் சுத்தமாகிவிட்டது போலிருந்தது. மாற்றங்கள் இப்படித்தான்... சொல்லாமல் கொள்ளாமல் வரும்.

ஆறு மணி வாக்கில் அவன் சித்தப்பாவைப் பார்க்கப் போகலாம் என்று கிளம்பியபோது, இரண்டு பைக்குகள் வழி மறித்தன. கட்சிக்கார ஆட்கள்தான்.

"முத்து... உன்னிய நம்ம தங்கவேல் அண்ணன் கையோட இட்டாரச் சொன்னாரு. இங்க ஒரு கல்யாணத்துக்கு வந்திருக்காரு. அபீத் காலனியாண்ட இருக்காரு."

முத்துராமன் உஷாரானான்.

*(தொடரும்)*



## "நான் ஏன் இயக்கணும்?"

**தொ**டர்ந்து வரும் வாழ்த்துக்கள் மத்தியில் தான் தூங்குகிறார், சாப்பிடுகிறார் பொன்வண்ணன், "எல்லாம் பருத்தி வீரன் செஞ்ச மாயம்தான் சார். என் மனைவி சரண்யாவை 'ராம்' படத்துல நடிக்க வெச்சு ரீ என்ட்ரி கொடுத்த அமீர் சார், பருத்தி வீரன் மூலமா எனக்கும் ப்ரேக் கொடுத்திருக்கார். ரெண்டு படங்கள் டைரக்ட் பண்ணினேன். வெற்றி பெறல. அமைதியாகி, என்ன மாதிரி கேரக்டர்ல நடிக்கணும்ங்கிற தேடலில் இருந்தப்போதான் 'பருத்தி வீரன்' வந்தான். அவன் தந்த வெற்றி மகத்தானது" என்று உருகுகிறார்.

'இனி இயக்கம் இல்லையா?' என்றால்...

"டைரக்ஷன்ங்கறது நம்முடைய ரசனையை விக்கறது. அது ஏற்கப்படாம போகும்போது நான் ஏன் டைரக்ட் பண்ணணும்? எல்லாருடைய படத்தையும் ரசிக்கிறேன். இனி நல்ல கேரக்டர் ஆர்டிஸ்ட்டா என்னை தக்க வெச்சுக்கப் போறேன்" என்கிறார் பொன்வண்ணன்.

**- கல்பனா**

# "உலகக் கோப்பை வேண்டாம்!"

உலகக் கோப்பை கிரிக்கெட் ஃபைனல். ஆஸ்திரேலியா - அயர்லாந்து மோதல். பரபரப்பான ஆட்டத்தில் அயர்லாந்து இருபது ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி.

தினசரிகளில் இதுபோன்ற ஒரு செய்தி வரும் நாட்கள் வெகு தொலைவிலில்லை. இருபது வருடங்களுக்கு முன்பு மடுவாக இருந்த ஸ்ரீலங்கா, 96ல் உலக சாம்பியன். குட்டி தேசங்கள் உலகக் கோப்பை வெல்வது என்பது இப்போது அயர்லாந்து, ஸ்காட்லாந்து, கென்யா, கனடா, பெர்முடா, நெதர்லாந்து போன்ற ஆறு நாடுகளின் கைகளில்தான் உள்ளது. ஆனால், பங்கேற்புச் சான்றிதழ் மட்டும் போதும் என்று இந்த அணிகள் ஏன் பின் வாங்குகின்றன? அவர்களின் சரக்கு எப்படி? எல்லாம் பார்த்து விடுவோமா!






அயர்லாந்து - சென்னையைவிடக் குறைவான மக்கள் தொகை (அறுபது லட்சம்) கொண்ட ஒரு தீவு கம் நாடு. ரக்பி, கால்பந்து எல்லாம் தெருவுக்குத் தெரு ஆடுவார்கள். இரிக்கெட் இறுக்கு இன்னமும் பிடிக்கவில்லை. சென்ற வருடம்தான் இங்கிலாந்தோடு முதல் ஒன்டே மேட்ச் ஆடினார்கள்.

அணியின் கோச், லோகப் பிரபலமான வெஸ்ட் இண்டீஸ் வீரர் பில் சிமன்ஸ். பாகிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ், ஜிம்பாப்வே உள்ள க்ரூப்பில் இருக்கிறது அயர்லாந்து அணி. 'உலகக் கோப்பை எல்லாம் வேண்டாம் சார். ஒரு மேட்ச் ஜெயித்தால் போதும்' என்று நம்பிக்கையோடு பேசுகிறார் அயர்லாந்து கிரிக்கெட் சேர்மன் முரே பவர். ஜிம்பாப்வே பரிதாபப்பட்டு ஏதாவது போட்டுக் கொடுத்தால் உண்டு.

ஸ்காட்லாந்து - பரிதாபமான அணி. ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா என இரு மாமலைகள் உள்ள க்ரூப்பில் வந்து சிக்கிக் கொண்டது. ஆஸ்திரேலியாவை ஜெயிப்போம் என்று க்ரேக் சேப்பல்கூட வாய் திறக்கவில்லை. ஆனால் ஸ்காட்லாண்ட் கோச், 'ஆஸ்திரேலியா எங்களிடம் கவிழப் போகிறது. அந்த சந்தோஷம் போதும்' என்று குளுரைக்கிறார். இழப்பதற்கு என்று இவர்களிடம் எதுவுமில்லை.

கென்யா - 2003 உலகக் கோப்பையில் ஸ்ரீலங்காவை வீழ்த்தி செமி பைனல் வரைக்கும் வந்த அணி; 96 உலகக் கோப்பையில் மேற்கு இந்திய அணியை துரத்தியடித்த அணி. ரவிந்து ஷா என்கிற உலகத் தரமான ஒரு வீரரைக் கொண்ட அணி. 2004 செப்டெம்பருக்குப் பிறகு பதினெட்டு மாதங்கள்

கென்யா வீரர்கள் ஒரு மேட்ச்கூட ஆடாமல் சும்மாவே பொழுதைப் போக்கியிருக்கிறார்கள். 2003-ல் கென்யாவுக்கு அடித்த அதிர்ஷ்டக் காற்று, 2007ல் யார் பக்கம் திரும்பப் போகிறதோ?

**க**னடா - கிரிக்கெட் இந்த நாட்டில் தேசிய விளையாட்டு. சென்ற உலகக் கோப்பையில் ஜான் டேவிஸன் அறுபத்தேழு பந்துகளில் செஞ்சுரி அடித்தது ஒரு உலகக் கோப்பை சாதனை. மேற்கு இந்திய அணிக்காக ஆடிய ஆண்டர்ஸன் கம்மின்ஸ் இப்





போது கனடாவுக்கு ஜாகை மாறியிருக்கிறார். சென்ற ஜனவரியில் கனடாவுக்கும் கென்யாவுக்கும் நடந்த ஒன்டே மேட்சில், ஐந்து கனடா வீரர்களுக்குக் காய்ச்சல் வர, தகுந்த பதினொரு வீரர்கள் இல்லாமல் அந்த ஆட்டமே கைவிடப்பட்டது. அப்போது மேட்ச் ரெப்ரியாக இருந்தவர் நம்ம ஊர் ஜவகல் ஸ்ரீநாத்.

**நெ**தர்லாந்து - ஹாக்கியில் தலை; கிரிக்கெட்டில் குட்டி வைக்கப்பட்டுள்ளவால். ஸ்ரீலங்கா வீரர்கள் இந்த அணி வீரர்களிடம்தான் 443 ரன்கள் குவித்து உலகச் சாதனை படைத்தனர். இதுபோன்ற துக்கடா நாடுகள் உலகக் கோப்பையில் ஆடுவதை பல முன்னாள் வீரர்கள் எதிர்க்கிறார்கள். 'ஆஸ்திரேலியாவுக்குச் சமமாகத்தான் நாங்களும் உழைக்கிறோம். எங்கள் வியர்வை யார் கண்ணிலும் படுவதில்லை' என்று வருத்தப்படுகிறார் நெதர்லாந்து கேப்டன். வந்தோமோ, போனோமோ என்றுதான் வெஸ்ட் இண்டீஸுக்குக் கிளம்பியிருக்கிறார்கள்.

**பெ**ர்முடா - மணி பதினொன்று ஆகிவிட்டால், தூக்கம் வராவிட்டாலும் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். மறுத்தால் ஆயிரம் டாலர் ஃபைன் என்று பெர்முடா வீரர்களுக்கு விசித்திரமான தூக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. அறுபத்தைந்தாயிரம் மக்கள் தொகை கொண்ட இந்தக் குட்டித் தீவின் தேசிய விளையாட்டு - கிரிக்கெட். அந்த நாட்டின் முனிசிபாலிட்டி, பிடபிள்யூடி போன்ற அரசு மற்றும் தனியார் கம்பெனிகளில் வேலை பார்ப்பவர்கள்தான் சிக் லீவ் போட்டுக்கொண்டு சிவப்பு - நீல கலர் உடைகளை மாட்டிக்கொண்டு வெஸ்ட் இண்டீஸில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். பெர்முடா அணிக்குத் தேர்வான பதினைந்து பேரில் பத்து டிக்கெட்டுகள் முப்பது வயதைக் கடந்தவர்கள். இந்திய அணி பரவாயில்லை அல்லவா!

**- ச.ந.கண்ணன்**

இயல்பாகவே சற்று வறட்சி நிலவி வரும் மாவட்டம் புதுக்கோட்டை. நிலத் தடி நீரை மட்டுமே நம்பி இங்கு நடை பெற்று வருகிறது விவசாயம். கடந்த சில ஆண்டுகளாக ஆந்திராவில் நடைமுறை யில் இருந்து வரும் திருந்திய நெல் சாகு படி முறையினை, தற்போது தமிழகத்தில் அறிமுகப்படுத்தி





# திரண்ட லாபம் தரும்...

வருகிறது வேளாண்மைத் துறை. புதுக்கோட்டை ஆலங்குடி வேளாண்மைக் கோட்டம், திருவரங்குளம் வட்டாரத்தில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இடங்களில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குத் திருந்திய நெல் சாகுபடித் திட்ட வழி முறைகள் குறித்துப் பயிற்சியளிக்கப் பட்டது.

"இந்தச் சாகுபடி முறையினை விவ சாயிகள் மத்தியில் கொண்டு சென்ற போது பலரும் தயக்கம் காட்டினர். எங் களுடன் இணைந்து செயல்பட முன்வந்த சில விவசாயிகளின் துணையுடன் இதனை நடைமுறைப்படுத்தினோம். நான்கு மாதங்கள் கழித்து அறுவடை யின்போது இரு மடங்கு விளைச்சல் தந்துள்ளது கண்டு, தற்போது விவசாயிகள் பலரும் திருந்திய நெல் சாகுபடி முறையில் ஆர்வம் காட்டிச் செயல்பட முன் வந் துள்ளனர்!" என்று கூறுகிறார் ஆலங்குடி வேளாண்மை உதவி அலுவலர் சத்திய மூர்த்தி.

ஒற்றை நாற்று நடவு முறைதான், திருந்திய நெல் சாகுபடி எனக் கூறப்படுகிறது. விவ சாயிகளுக்கு இது பல வகையிலும் சிக்கனமானது. விதை நெல், நாற் றங்கால் செலவு, நடவுச் செலவு, களையெடுக்கும் கூலி, பாசனத் தண்ணீர் தேவை எனப் பல முறை களிலும் அதன் சிக்கனம் தொடர்கிறது. பொதுவாக ஓர் ஏக்கர் சாகுபடிக்குக் குறைந்தது முப்பது கிலோ விதை நெல் தேவை. ஆனால், திருந்திய நெல் சாகுபடிக்கு ஓர் ஏக்கருக்கு இரண்டு கிலோ விதை நெல் மட்டுமே போதுமானது.

"இத் திட்டத்தில் நாற்றங்கால் தயார் செய்யும் செலவு மிகவும் குறைவு. நாற்றங்காலுக்கு எவ்விதச் செயற்கை உரமும் இடத் தேவை யில்லை. இயற்கைத் தொழு உரமிட் டால் போதும். பத்து நாட்கள்

# திருந்திய நெல் சாகுபடி!

நாற்றங்கால் வளர்த்து, நாற்றுப் பிடுங்கி வயலில் ஒற்றை நாற்றுகளாக நடவு செய்ய வேண்டும். தண்ணீரைக் காய்ச்சலும் பாய்ச்சலுமாக விட்டு வர வேண்டும். பழைய சாகுபடி முறையில் ஓர் ஏக்கருக்குப் பாய்ச்சப்படும் தண்ணீரை, இந்தச் சாகுபடியில் மூன்று ஏக்கருக்குப் பயன்படுத்தலாம். தண்ணீர்ச் செலவும் மிகக் குறைவு. களையெடுப்பிலும் கூலிச் செலவு அதிகமாவதில்லை. கோனோ வீடர் (Cono Weeder) எனப்படும் களையெடுக்கும் கருவி கொண்டு களைச் செடிகளை வயலிலேயே மடக்கி உழ வேண்டும். அவை வயலுக்கே உரமாகின்றன. அதனால் உரச் செலவும் குறைகிறது. இப்படி பலமுறையிலும் செலவுகள் குறைந்து, இறுதியில் அறுவடையின்போது இரு மடங்கு விளைச்சல் தந்து விடுகிறது திருந்திய நெல் சாகுபடி!" என்கிறார் ஆலங்குடி வேளாண்மை உதவி இயக்குநர் சி...



**ஒரு ஏக்கருக்குப் பாய்ச்சப்படும் தண்ணீரை, இந்தச் சாகுபடியில் மூன்று ஏக்கருக்குப் பயன்படுத்தலாம்.**



• கோனோ வீடர் கருவி மூலம் களையெடுப்பு...

தோப்புக்கொல்லை கிராம விவசாயி சதாசிவம் வயலில் பயிரிட்டது ஆடுதுறை 39 ரக நெல். வியாபாரிகள் மத்தியில் கல்சர் என்று இதற்குப் பெயர். நூற்றியிருபது நாள் சாகுபடியாக அது பயிரிடப்பட்டு, தற்போது அறுவடையும் முடிந்திருக்கிறது. "சாதாரணமாக இந்த ரக நெல், ஓர் ஏக்கருக்கு அதிகபட்சமாக இருபத்தைந்து மூட்டைதான் விளைந்துள்ளது. ஆனால், தற்போது திருந்திய நெல் சாகுபடியில் என் வயலில் ஒரு ஏக்கருக்கு அறுபத்தாறு மூட்டை நெல் விளைந்துள்ளது. செலவுகளும் குறைவு. திரண்ட லாபம் என்பதால் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதம்!" என்கிறார் விவசாயி சதாசிவம்.

ஸ்ரீரங்கம் ...

❖ ப்ரியா மணி ❖



"ஏன் மும்பை நடிகைகளுக்கே முக்கியத்துவம் தர்றாங்க?"

# "என் கோபம்

# தமிழ் சினிமா மீது!”

‘நான் லேட்டா வந்தாலும் லேட்டஸ்டா வந்திருக்கேன். இனி நான் எல்லோருக்கும் கடுமையான போட்டி கொடுப்பேன். நம்பர் ஒன் நடிகையாவது தான் என் லட்சியம். அதை யாரும் தடுக்க முடியாது.”

பருத்தி வீரன் வெற்றியால் இப்படிப் பலமாகச் சபதம் போடுகிறார், ‘முத்தழகு’ ப்ரியா மணி. பேச்சில் அள்ள அள்ள சந்தோஷம். கி கொடுத்தது போல தொடர்ந்து பருத்தி வீரனைப் பற்றிய புகழாரம். கால் தரையிலேயே இல்லை.

“யாருக்கும் கிடைக்காத பாக்கியம் எனக்குக் கிடைச்சுது. முதல் படமே பாரதிராஜா பட ஹீரோயின். அடுத்த சில வருடங்கள்ல பாலுமகேந்திரா படம். ஆனாலும் வெற்றி மட்டும் என்கிட்டே கண்ணாமூச்சி ஆட்டம் காட்டுச்சு. பெரிய பேனர், பெரிய ஹீரோ படங்கள் எல்லாம் கனவாகவே இருந்தது. அந்தச் சமயத்தில்தான் ‘பருத்தி வீரன்’ வாய்ப்பு வந்தது. அமீர் படம்ங்கிறதால கதை கேட்கல.

நான் எட்டிப் பார்க்காத, என் காலடி படாத இடம்னா அது கிராமம் தான். அங்கே நூற்றிஐம்பது நாட்கள் தங்கினேன். மதுரை, தேனீயைச் சுத்தியிருக்கிற குக்கிராமப் பகுதிகள்லதான் படப்பிடிப்பு நடந்தது. சூரிய வெளிச்சத்துல தான் முழுப் படமும் எடுத்தாங்க. சூரியன் வர நேரமாச்சுன்னா அதுவரைக்கும் வானம் பார்த்த பூமியா இருப்போம். படம் எடுக்கும்போதே தெரிஞ்சது, இது சாதாரணப் படம் இல்லைன்னு.

அங்கே வெள்ளந்தியான மக்களை மட்டுமே பார்க்க முடிஞ்சுது. உடை மாத்துவது போன்ற பல அவசர உதவிகளுக்கு உதவினாங்க.

க்ளைமாக்ஸ் எடுக்கும்போது அமீர் சார்கிட்டே ஒரு கேள்வி கேட்டேன். ‘எப்படி இப்படியொரு சீன் எடுக்க நினைச்சீங்க’ என்று. ‘என் மீது நம்பிக்கை இருந்தால் தொடர்ந்து நடி’ன்னு பதில் கொடுத்தார். அப்புறம் ஏன் நான் பேசறேன்!



தமிழ் சினிமாவுல கதாநாயகி குரல்னா கீச் கீச்னு இருப்பது தான் இலக்கணம். தமிழ்ப் பெண்ணாக இருந்து சுத்தமாகத் தமிழ் பேசத் தெரிந்த என் குரலுக்கு எல்லோரும் வைத்த பெயர் கட்டைக் குரல். கதாநாயகிக்கு ஒவ்வாத குரலாம்! ஆனா அமீர் சார் இந்த அபத்தங்களை எல்லாம் ஒரு பொருட்டாவே எடுத்துக்கலை.

தமிழ் சினிமா மேல் எனக்குக் கோபம், வருத்தம், எல்லாம் உண்டு. தமிழ் பேசத் தெரிந்த என்னைப் போன்ற நடிகைகளைப் பயன்படுத்தாமல் ஏன் மும்பைப் பெண்களுக்கு மட்டும் அதிமுக்கியத்துவம் தருகிறார்கள்! தமிழ் பேசத் தெரிந்தால் பாவமா! முத்தழகு கதாபாத்திரத்தை ஒரு மும்பை நடிகை செய்திருந்தால் எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டிருக்கும்! நூற்றி ஐம்பது நாள் படப்பிடிப்பு ஒரு வருஷத்துக்கு இழுத்திருக்கும் இல்லையா!

பிரகாஷ்ராஜ், விஷால், பரத், ரமேஷ், ப்ரித்விராஜ்னு எல்லா ஹீரோக்களும் போன் பண்ணிப் பாராட்டிட்டே இருக்காங்க. இப்போ நான் தெலுங்குல பரபரப்பா பேசப்படற ஒரு நடிகை. ஆனாலும் எனக்குத் தமிழ்ல தான் சாதிக்கணும். பெரிய பேனர் படங்களுக்காகக் காத்துக்கிட்டு இருக்கேன்.”

- ச.ந.கண்ணன்

# தொடரும் முயற்சி!


மதுரை மாவட்டத்தின் ஆட்சியாளராகச் சிறந்த முறையில் செயல்பட்ட உதயசந்திரன், பத்தே மாதங்களில் மாற்றப்பட்டார். அதன் பிறகு கார்த்திகேயன் என்



பவரைப் போட்டார்கள். பொறுப்பேற்ற சில நாட்களில் 'விட்டால் போதும்' என்று அவரும் விடுப்பில் சென்றுவிட்டார். இப்போது ஜவஹர் என்பவரைப் நியமித்திருக்கிறார்கள். இதேபோல் ஆணையராக இருந்து ஆளும்கட்சிப் பிரமுகருக்கு அனுசரணையாக இருந்த போதும், சிதம்பரநாதன் என்பவரை மாற்றி விட்டார்கள். மதுரை மத்திய தொகுதிக்கு இடைத்தேர்தல் வரவிருக்கும் நிலையில், உயர் போலீஸ் மற்றும் அரசு அதிகாரிகள் மதுரை என்றாலே அலறி ஓடுகிறார்கள். இந்த நிலைக்குக் காரணம் மதுரையில் தனி ஆட்சி நடத்தி வரும் ஆளும்கட்சிப் பிரமுகர்தான் என்று முணுமுணுக்கின்றன எதிர் கட்சிகள்.

மத்திய கூட்டணியில் இடம்பெற்று மாநிலத்தில் தங்கள் ஆதரவுடன் ஆட்சி நடத்தி வரும் தி.மு.க, மகளிர் இடஒதுக்கீடு, மீனவர் பிரச்னை ஆகியவற்றில் பேரணி, ஆர்ப்பாட்டம் நடத்துவதை கவலையுடன் பார்க்கிறார்கள் காங்கிரஸ் பிரமுகர்கள். ஆண்டு கொண்டிருந்தாலும் கட்சி மட்டத்தில் செயல் திட்டங்களை வகுத்துச் செயல்படும் தி.மு.க போன்று, மாநில விவகாரங்களில் தாங்களும் போராட்டம், ஊர்வலம் நடத்தினால் என்னவென்ற கருத்தோட்டம் காங்கிரஸில் உருவாகிறதாம்.

பட்ஜெட்டுக்குப் பிறகு, தி.மு.க அரசை எதிர்த்துப் பா.ம.க கடுமையாகச் செயல்படும் என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிட்ட சூழலில், காங்கிரஸுக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்து அரசைப் பலப்படுத்த கலைஞர் தீர்மானித்து விட்டதாக, காங்கிரஸ் வட்டாரம் உறுதியாகச் சொல்கிறது. புதுச்சேரி காங்கிரஸ் அமைச்சரவையில் தி.மு.க இடம் பெறுமாம். அதேசமயம் தங்கள் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் விதத்தில் ம.தி.மு.க.விலிருந்து, குறைந்தபட்சம்



மூவரையாவது வளைத்துப் போடுவது என்ற தி.மு.க.வின் முயற்சியும் தொடர்கிறதாம்.

- சஞ்சயன்

படங்கள்: ஸ்ரீஹரி

❖ கவிதை ❖

கணேசகுமாரன்



# பேச்சு மூச்சு வாரதில்ல...

ஒத்தையடிப் பாதையில
ஒருத்தியா முள்ளுக்கட்டு
தூக்கிப் போகையில
துணைக்கு யார் வருவா?

காலுல தைக்கும் முள்ளு
கடமைக்குக் குத்திப் போகும்
தலைமேல் உள்ள முள்ளு
வயித்தை நிரப்பிப் போகும்

தாலி கட்டித் தொட்டவரு
சோலி முடிஞ்சி போயிட்டாரு
புள்ளக்குட்டி உள்ளவ நான்
முள்ள வெட்டிப்
பொழைக்கிறேங்க

நெஞ்சுக்குள்ள ஆயிரம் முள்ளு
நெறைஞ்சு கெடக்குதுங்க
ஒத்தச் சொல்லு தப்பாச்
சொன்னா
ஒறைஞ்சே போய்டுவேங்க

முள்ளுக் காட்டுல
பொறந்தவதான்
பொழப்பும் முள்ளாப் போச்சு
மல்லிகொன்னு பேர வச்ச
மகராசி போய் நாளாச்சு

ஒரு முள்ளு இதுவரைக்கும்
ஒரசி எனக்கு வலிச்சதில்ல
பேரென்னான்னு யாரும்
கேட்டா
பேச்சு மூச்சு வாரதில்ல

## ஜி.எஸ்.எஸ்.

# கலீதா Vs ஹசீனா

சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று சராமாரியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது பங்களாதேஷின் ராணுவம். மக்கள் வாய் பிளந்து நிற்கிறார்கள். காரணம், கலீதாவின் மகன் கைது செய்யப்பட்டதும், ஹசீனாவின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டதும்தான்.



• ஷேக்...



• பேகம்...

கலீதாவும், ஹசீனாவும் பரம எதிரிகள். இவர்கள் இருவரின் கைகளில்தான் பங்களாதேஷ் அரசியல் மாறி மாறி இருந்து வந்திருக்கிறது. ஹசீனா, பங்களாதேஷ் உருவாகக் காரணமாக இருந்த முஜிபுர் ரஹ்மானின் மகள். கலீதா, அந்த நாட்டை ஒரு கால கட்டத்தில் ஆண்ட ஜியாவின் மனைவி.

''பூகம்பங்களும் புயல்களும் அவ்வப்போது எங்கள் நாட்டைச் சீரழித்ததுண்டு. என்றாலும் பங்களாதேஷை மிகவும் ஆட்டிப் படைத்த சக்திகள் இந்த இரண்டு பெண்மணிகளும்தான்'' என்று சில அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள். கலீதாவைத் தலைவியாகக் கொண்ட 'பங்களாதேஷ் தேசியக் கட்சியும்', ஹசீனாவைத் தலைவியாகக் கொண்ட 'அவாமி லீக்' கட்சியும் தான் மாறி மாறி அந்த நாட்டை ஆட்சி புரிந்து வந்திருக்கின்றன. கலீதாவின் பதவிக் காலம் சமீபத்தில் முடிவடைந்திருக்கிறது.

இரண்டு முஸ்லிம் பெண்கள் நாட்டின் தலைவியாக இருக்க முடிந்திருக்கிறது என்பதே மதரீதியாக பங்களாதேஷில் நவீன சிந்தனைகள் இருப்பதற்குச் சான்று. ஆனால், மன்னராட்சியின் நிழல் தங்கள் மீது படிவதைத்தான் இந்த இருவரும் அதிகம் விரும்புகிறார்கள். தாங்கள் இருவரும் முறையே 'பேகம் ஜியா' என்றும், 'ஷேக் ஹசீனா' என்றும் அழைக்கப்படுவதில் தான் இவர்களுக்கு அலாதி ப்ரியம்.

இந்த நிலையில், கலீதாவின் மகன் தாரிக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

''சர்வதேச சதியின் காரணமாக நான் மாட்டிக் கொண்டிருக்கிறேன்'' என்கிறார் தாரிக். ஒரு கட்டுமான நிறுவனத்தின் அதிபரிடம் தனக்கு ஒரு கோடி டாகா (சுமார் 65 லட்ச ரூபாய்) தரும்படி மிரட்டியதற்காகத்தான் அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் தாரிக்குக்கு அதிகபட்சம் பதினான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைக்கும்.

ராணுவத்தின் நடவடிக்கைகள் பங்களாதேஷை 'சுத்தம்' செய்யுமா? அல்லது ஜனநாயகத்தை நசுக்கிவிட்டு ராணுவமே ஆட்சியில் அமர வழி வகுக்குமா என்பது போகப் போகத்தான் தெரியும்.

## ❖ ஜோக்ஸ் ❖

"உங்க மனைவிக்கு அன்புப் பரிசாக விலை உயர்ந்த வைர மோதிரம் வாங்குறீங்களே... அவங்க மேல அவ்வளவு ஆசையா?"

"சேச்சே! குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால குட்டுப்படலாமேன்னுதான்!"

- பெ. கலாசாமி



# மனைவிக்கு அன்புப் பரிசு!



"போர் முடிந்துவிட்டது, மன்னா..."

"அதற்குள்ளாகவா...?"

"ஆம்; நம் வீரர்கள் சரணடைந்து வெகுநேரம் ஆகிவிட்டது, வேந்தே!"

- சீர்காழி ரேவதி

"ஆறிலும் சாவு, நூறிலும் சாவுன்னு கேள்விப்பட்டிருக்கேன். நீங்க என்ன புதுசா ஐம்பதாயிரத்திலும் சாவு, ஒரு இலட்சத்திலும் சாவுன்னு சொல்றீங்க..."

"இந்த டாக்டர் ஆபரேஷனுக்கு லட்ச ரூபாய் கேக்கறார்... பக்கத்துத் தெரு டாக்டரோ ஐம்பதாயிரம்தான் வாங்கறார்னு சொல்றாங்க!"

- கே.ஆனந்தன்



அதிக உதிரப் போக்கு இன்று பரவலான கோளாறாகிவிட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. மிக முக்கியமாக:

- பெண் உறுப்பில் அடிபடுவது
- உடலுறவு மூலமாகப் பரவக்கூடிய நோய்த் தொற்று
- கர்ப்பப்பை அழற்சி
- புற்றுநோய்
- இரத்தத் தட்டுகள் (platelets) குறைவதால் ஏற்படும் நோய்கள்
- கர்ப்பப்பைக் கட்டிகள் மற்றும் புற்றுநோய்க் கட்டிகளாலும், கர்ப்பப் பையின் தசைப் பகுதியில் ஏற்படுகின்ற கட்டிகளினாலும் அதிக இரத்தப் போக்கு ஏற்படலாம்.

சில பெண்கள் தைராய்டு சுரப்பி, அட்ரினல் சுரப்பியின் ஏற்றத் தாழ்வினால் சிறு வயதிலேயே பருவமடைகிறார்கள். வெகு அபூர்வமாக, பிறந்த பெண் குழந்தைக்குக் கூட இரத்தப் போக்கு ஏற்படுவதுண்டு. தாயிடமிருந்து ஈஸ்ட்ரோஜனை சிசுவும் பெறுவதால் விளையக்கூடியது இந்நிகழ்வு. திருமண மாகி இல்லற வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இரத்தப் போக்கு ஏற்படக் காரணங்களாக, கருத் தடை மாத்திரைகளைச் சாப்பிடுவது, கர்ப்பத் தடைக் கருவிகளைப் (காப்பர் டி) பயன்படுத்துவது, கருப்பைக் குழாயில் கர்ப்பம் உண்டாவது போன்றவற்றைச் சொல்லலாம். இவ்வகை கர்ப்பத் தடைச் சாதனங்களைத் தவிர்ப்பது நல்லது.

மாதவிடாய் நின்ற பிறகு இரத்தப் போக்கு ஏற்பட்டால் அது புற்றுநோயின் அறிகுறியா என்று உடனே சோதனை செய்ய வேண்டும். இதற்கு Biopsy, scan செய்து பார்ப்பது சிறந்தது.

ஹார்மோனால் ஏற்படும் இரத்தப் போக்கை Dysfunctional Uterine Bleeding - DUB என்கிறது நவீன மருத்துவம். இது 20 சதவிகிதம் இளம் பெண்களுக்கும், 50 சதவிகிதம் நாற்பத்தைந்து வயதுக்கு மேற் பட்ட பெண்களுக்கும் வருகிறது.

ஆயுர்வேதம் அதிகமான இரத்தப் போக்கை ‘பிரதரம்’ என்கிறது. இது பித்தத் தினாலும், வாயுவினாலும் ஏற்படுவதாகக் கூறுகிறது. இரத்தம் அதிகம் வெளியேறு வதால் இரத்தச்சோகை உண்டாகிறது. இதற்கு ஆயுர்வேதத்தில் ‘சமனம்’ அல்லது ‘ஸ்தம்பனம்’ போன்ற சிகிச்சைகளை மேற் கொள்கிறோம்.



## டாக்டர் எல்.மஹாதேவன்

# உயிரின் ஜீவன்!

**கருத்தடைக்கு மாத்திரைகள் சாப்பிடுவது ஒரு சில கர்ப்பத்தடை சாதனங்கள் போன்றவற்றால் உதிரப் போக்கு அதிகரிக்கலாம். இவற்றைத் தவிர்ப்பது நல்லது.**

அதிக இரத்தப் போக்குடனும், வயிற்று வலியுடனும் முப்பது வயதுள்ள ஒரு பெண் வந்திருந்தார். Fibroid பிரச்னையாக இருக்குமோ என்று ஸ்கேன் செய்ததில் பிரச்னை அதுவல்ல, ஹார்மோன்களின் ஏற்றத்தாழ்வே காரணம் என்று அறியப்பட்டது.

இரத்தம் உயிரின் ஜீவன். இரத்தப் போக்கை உடனடியாகக் கட்டுப்படுத்தும் மருந்துகளுக்கு 'சோணித ஸ்தாபம்' என்று பெயர். ஹார்மோன் பிரச்னையுடன் வந்த பெண்ணுக்குப் பாடதாளிக் கிழங்கு, நாவல் கொட்டை, மாங்கொட்டை, வெள்ளிலோத்திப்பட்டை, செம்பருத்தி, கொம்பரக்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, இலவம்பிசின், இலுப்பைப்பூ, வாகை போன்றவற்றைப் பொடித்துத் தேனுடனும் அரிசி கழுவிய நீருடனும் கலந்து சாப்பிடச் சொல்லிக் கொடுத்தேன். இதைச் சாப்பிட்டு வர, இரத்தப் போக்கு சற்றே குறைந்தது. பின்பு நன்கு பசித்தபோது அசோகப்பட்டை சேர்த்துக் காய்ச்சப்பட்ட நெய், கல்யாணக கிருதம், சதாவரி நெய் போன்றவற்றைக் கொடுக்க, இரத்தப் போக்கு நின்று நல்ல பலன் கிடைத்தது. இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்த அசோகப்பட்டை சிறந்தது. வாழைத்தண்டுச் சாறும் நன்கு கட்டுப்படுத்தும். மண்டூரம், லோஹ பஸ்மம், ஸப்தாம்ருத லோஹம் போன்றவற்றைத் தேனுடன் கலந்து கொடுப்பது உதிரப் போக்கினால் ஏற்படும் இரத்த சோகைக்கு உகந்தது. அதிகமான இரத்தப் போக்கு ஏற்படும்போது அரிஷ்டாஸவங்களைக் கொடுப்பதில்லை. சில நேரங்களில் 'உத்தர வஸ்தி' என்னும் சிகிச்சை மூலம் மருந்துகளைக் கர்ப்பப்பைக்குள் செலுத்தி இரத்தப் போக்கை உடனடியாக நிறுத்தவும் இயலும்.

அற்புதமான கேள்விகளை ஹெச்.ஷேக்தாவூத் திருச்சியிலிருந்து அனுப்பியுள்ளார். அவற்றில் ஒரு சில கேள்விகளுக்குப் பதிலளிக்கிறேன். இவர் முதல் பரிசாக தன்வந்திரி டாலரினைப் பெறுகிறார்.

**எல்லாமே மாறிக் கொண்டிருக்கும் போது, மருத்துவ உலகில் இன்றுவரை மாறாத விஷயமாக எந்த விஷயம் உள்ளது?**

ஆயுர்வேதத்தில் மாறாத விஷயங்களான பஞ்ச பூத, தத்துவங்கள், த்ரிதோஷ தத்துவங்களைப் போல நோயிலிருந்து விடுபட வேண்டும் என்ற







மனிதனின் எண்ணமும், நோயைக் குணப்படுத்த வேண்டும் என்ற வைத்தியனின் ஆவலும் மாறாதவையாக உள்ளன.

**மருத்துவ உலகில் இன்றுவரை புரியாத விஷயம் ஏதாவது இருக்கிறதா?**

எல்லா மருத்துவப் பரிசோதனைகளையும் செய்துவிட்டு, மனத்தையும் சிகிச்சை செய்துவிட்டு ஆனாலும் சில நோய்கள் ஏன் வருகின்றன என்று கண்டு பிடிக்காத நிலையும் அந்த நோய்களுக்குச் சிகிச்சையும் இல்லை என்கின்ற நிலைமையும் புரியாதனவாக உள்ளன. ஒரு சில நோயாளிகளுக்கு எல்லாமே நார்மலாக இருக்கும். மன நோயாளி என்று மனத்தை சிகிச்சை செய்வோம். உணவு முறை மற்றும் உடற்பயிற்சி சொல்லிக் கொடுப்போம். ஆனாலும் அவர்கள் வலி வலி என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். இது ஒரு புரியாத விஷயம்.

ஒரு சில நோய்களுக்கு குறிப்பாக Rheumatoid arthritis போன்ற நோய்களுக்கு ஒரு சிலருக்கு அற்புதமான குணம் கிடைக்கிறது; ஒரு சிலருக்கு எந்த முயற்சி செய்தும் குணம் கிடைப்பதில்லை. இதுவும் ஒரு புரியாத விஷயம்.

மயிலாடுதுறை திரு.சி.எஸ்.டி. ராயன், இரண்டாம் பரிசாக தேவ மருந்து முதல் பாகத்தைப் பெறுகிறார்.

**சாதாரணமாக ஒரு குடும்பத்துக்குள் ஏற்படும் சாதாரண நோய்களுக்கு அஞ்சறைப்பெட்டி மருந்து சொல்லுங்களேன்.**

1. ஜலதோஷம் - தாளிசாதி சூரணம் 1 ஸ்பூன் தேனுடன் இரண்டு வேளை, சுதர்ஸன மாத்திரை காலை 2 மாத்திரை இரவு 2 மாத்திரை, ராஸ்னாதி சூரணம் எலுமிச்சை சாறில் கலந்து பற்று போட வேண்டும்.
2. ஜுரம் - அமிர்தாரிஷ்டம், வில்வாதி குளிகை.
3. வயிற்றுக் கோளாறுகள் - மதுரகாஸவம், வில்வாதி குளிகை, தாடிமாஷ்டக சூரணம்.
4. குழந்தைகளுக்கு ஏற்படும் காயங்கள் - முறிவெண்ணெய்.
5. சாதாரணமாக ஏற்படும் கை கால் வலி - கற்பூராதி தைலம்.
6. மலச்சிக்கல் - திரிபலா சூரணம் 1 ஸ்பூன் அல்லது 2 ஸ்பூன் எடுத்து வென்னீரில் கலந்து இரவு தூங்குவதற்கு முன் சாப்பிடவும்.
7. பித்தத் தலைவலி - நிலவேம்பு, இஞ்சி கஷாயம்.

*(தொடரும்)*

**தன்வந்தரி டாலர்**
**பரிசுப் போட்டி எண்: 18**

பெண்களுக்கு உகந்ததான இரும்புச் சத்துள்ள உணவு வகைகளை எழுதி அனுப்புங்கள்.

முதல் பரிசாக தன்வந்தரி டாலர் அளிக்கப்படும்.

இரண்டாவது பரிசாக
டாக்டர் **எல்.மஹாதேவனின்**
தேவமருந்து முதல் பாகம்
வழங்கப்படும்.
ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
கடைசி தேதி: **26.04.07**

❖ சேனல் ❖

# "வெளியேறியதால் லாபம்தான்.."

சன் டீ.வி.யிலிருந்து மக்கள் தொலைக் காட்சிக்கு ஜாகை மாறியுள்ள ரேவதியைப் பற்றிய ஓர் ஆச்சர்யமிருக்கிறது. ஆனால், அதற்கு முன்பாக இந்தக் கேள்விக்கான விடை தெரியாவிட்டால் மண்டை வெடித்துவிடும் போலிருக்கிறது! இவர் சன்னிலிருந்து விலக வேண்டிய அவசியம் என்ன?

"மர்மம், ரகசியம் எதுவும் இல்லை. நீண்ட நாட்களாகவே மக்கள் டீ.வி.யில் என்னை அழைத்துக் கொண்டிருந்தார்கள். தொடர்ந்து ஐந்து வருடங்கள் சன் டீ.வி.யில் புழங்கியதற்கும் ஒரு மாற்றம் வேண்டியிருந்தது. இடம் மாறிவிட்டேன்'' என்கிறார். யாருக்கும் எந்தச் சேதமும் வினை விக்காத ஒரு பதில்.

ஆனால், சன், மக்கள் இரண்டில் எது சிறந்தது என்றால், தைரியம் வெளியே வருகிறது.

"சன் டீ.வி.யில் அவர்கள் சொன்ன சொல்லுக்குத்தான் கட்டுப் பட வேண்டும். கிரியேட்டிவிட்டி, தனித் திறமை எல்லாவற்றையும் நமக்குள்ளேயே புதைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், மக்கள் தொலைக்காட்சியில் வேண் டிய சுதந்திரத்தைக் கொடுக்கிறார்கள். எங்கள் வளர்ச்சியில் அக்கறை காட்டு கிறார்கள். தமிழ் என்றால் எனக்கு உயிர். 'ஆங்கிலம் கலக்காமல் பேசு' என்பது கரும்பு தின்னக் கூலி. சன்னிலிருந்து வெளியேறிய தால் என் புகழ், மதிப்பு எதுவும் துளிக்கூட குறையவில்லை. வெளி நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க இப்பொழுதுதான் நிறைய பேர் அழைக்கிறார்கள். தூய தமிழில் நிகழ்ச்சியைத் தொகுத்துத் தாருங்கள் என்று கேட்பது காதில் தேனை ஊற்று கிறது." தமிழுக்காக உருகும் ரேவதி, தன் முழுப் பள்ளிப் படிப்பையும் தமிழ் வழியில் படித்தவர்.

"மக்கள் தொலைக் காட்சி ஆங்கிலத் துக்கு எதிரி அல்ல ஆனால், நம் தமிழையும் கலாசாரத்தையும் கட்டிக் காக்கும் கலாசார மேடையாகத் திகழ்கின்றது. இதர தொலைக்காட்சிகளில் வருவதைப்போல தமிங்கிலீஷ் பேசிக் கொண்டும் தலைவிரி கோலமாய் நிகழ்ச்சி நடத்தும் தொகுப்பாளினிகள் இங்கு அறவே கிடையாது. எல்லாரும் தமிழ்ப் பெண்கள்; கலாசாரத்தை மதிப்பவர்கள்."

**- சநகன்**




● சே. ராதிகா, திருக்குறுங்குடி

*? வைகோவுக்கு இருக்கும் நினைவாற்றலுக்கு அவர் அரசியலுக்கு வராமல் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டிருந்தால் இன்னும் பெரிய நிலையை அடைந்திருப்பார் அல்லவா?*

! பத்திரிகைத் துறையில் பிரகாசிக்க நினைவாற்றல் மட்டும் போதாது. அதே போல்தான் அரசியலிலும். நினைவாற்றலைப் பயன்படுத்தி வரலாற்றை ஆராய்ந்து, பாடம் கற்று, தன்னைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.



• காரண பிரகடனம்!



• அறிக்கை எச்சரிக்கை...

# மது விற்பனையில் முதலிடம் தமிழகத்துக்காமே..?

பேசப்படுகிறது. எப்படியும் மூக்கு (தனித் தமிழ் ஈழக் கோரிக்கை) இருக்கும் வரை ஜலதோஷம்தான்!

● ஜி.ஜெயபாலன், மதுரை - 4

*? டாஸ்மாக் கடைகளை மூடினால் கள்ளச் சாராயம் பெருகும் என்று முதல்வர் சொல்லியிருக்கிறாரே?*

! ஆமாம்; அதைக் காரணம் காட்டி பாக்கெட் சாராயத்தையும் அரசே பழைய படி விற்கலாம்!

● ஏ.ராஜாத்தி, எலவம்பட்டி

*? ஜெ. அறிக்கை, ராமதாஸ் அறிக்கை – எது கருணாநிதியை அதிகம் பயமுறுத்தும்?*

! தைலாபுரத்து அறிக்கைக்குத்தானே கோபாலபுரம் கொஞ்சியும் கெஞ்சியும் பதில் சொல்கிறது.

● எம். ராஜேந்திரன், லால்குடி

*? தமிழக மீனவர்களை இலங்கைக் கப்பற்படை மீண்டும் மீண்டும் சுட்டுக் கொல்கிறதே?*

! புலிகள் என்று தவறுதலாக எண்ணிச் சுட்டுவிட்டதாக முதலில் கூறப்பட்டது. புலிகள் சுட்டுவிட்டு, இலங்கைக் கடற்படை மீது பழி விழ வழிவகுப்பதாகப் பிறகு சொல்லப்பட்டது. இந்திய – இலங்கைக் கடற்படைகள் சேர்ந்து ரோந்துப் பணி ஆற்றலாம் என்று இப்போது

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

*? தமிழக விவசாயிகளைப் பாதுகாக்க நேரடி நடவடிக்கையில் அ.தி.மு.க. இறங்கும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளதைப் பற்றி...?*

! தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் அமர்கையில் அ.தி.மு.க. விவசாயிகளைப் பாதுகாக்க நேரடி நடவடிக்கையில் இறங்கும். அ.தி.மு.க. ஆட்சி புரிகையில் தி.மு.க. அவ்வாறு இறங்கும். இது போதாதா...? இத்தகைய நேர் – அடிகளைக் காட்டிலும் விவசாயிகளுக்கு வேறு என்ன வேண்டும். போங்கள்!

# தராசு

● **ஜி.எஸ்.பாரதி, விபீஷ்ணபுரம்**

*? பஞ்சாப், உத்தராஞ்சல் மாநில தேர்தல் தோல்விக்கு 'விலைவாசி உயர்வே காரணம்' என பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கிறாரே சோனியாகாந்தி...?*

! இந்த ஒப்புதல் வாக்கு மூலங்களுக்குத்தான் விலைவாசிகள் காத்துக்



• வருஷுக்கு வாழ்த்து!

கொண்டிருந்தன போல! இனி, அவை கிடுகிடுவென்று சரிஞ்சுடும் பாருங்க!

● **ஜோ.பன்னீர்செல்வம், சென்னை -12**

*? "தமிழ்நாடு அண்ணனைப் போன்றது; கர்நாடகா தம்பியைப் போன்றது. தம்பியை அண்ணன் ஒரு போதும் ஏமாற்றக் கூடாது" என்கிறாரே கர்நாடகா எம்.பி. ஜாலப்பா?*

! ஜாலப்பா, வெறும் வார்த்தை ஜாலம்ப்பா! அண்ணனை ஏமாத்திட்டு எல்லாத்தையும் அடிச்சுட்டுப் போற தம்பிகளும் உலகில் உண்டப்பா!

● **பி.தாம்பரம் யோகநாதன், சென்னை - 59**

*? நாங்கள் உங்களிடம் கேள்வி கேட்கிறோம் – நீங்கள் எங்களிடம் என்ன விரும்புகிறீர்கள்?*

! ஏப்ரல் 15 இதழ் வரைக்கும் பொறுத்திருங்களேன்... சொல்றேன்... இல்லையில்லை, கேட்கறேன்!

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்**

*? கச்சத் தீவைக் கைப்பற்ற அரசு முயற்சி செய்தால் இந்திய கம்யூனிஸ்ட் ஆதரவு அளிக்கும் என தா.பாண்டியன் கூறியுள்ளாரே?*


! இந்திரா காந்தி செய்த ஒரு தவறை தா.பாண்டியனின் ஆதரவு பெறுகின்ற மற்றொரு தவறினால் சரி செய்ய முடியாது. கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து உருப்படியான யோசனைகளை எதிர்பார்க்கிறோம்.

● **ச.ஆ.கேசவன், இளாம்மணியாச்சி**

*? விஞ்ஞானத்துக்கும் மெய்ஞானத்துக்கும் நிகழ்ந்து வரும் பனிப்போரின் முடிவு என்ன?*



• சொல் விளையாட்டு...



• நினைவாற்றல் ப்ளஸ்...

! செயற்கைக் கருத்தரிப்பு முறையில் பிறந்த குழந்தைகளுக்கு – குறிப்பாக ஆண்களுக்கு – மலட்டுத்தன்மை அதிகமாக உள்ளதாக ஆய்ந்தறிந்திருக்கிறார்கள். மெய்ஞானத்தைத் தோற்கடிக்க முயலும் விஞ்ஞான முயற்சிகள் அனைத்திலும் இதுபோன்ற அபாயங்கள் உள்ளதை உணர்கிற கட்டத்தில், விஞ்ஞானம் என்பது மெய்ஞானத்துக்கே பயன்படுத்தப்

படும்.

● பி.சிவா, பாளையங்கோட்டை

? மது விற்பனையில் தமிழகம்தான் முதலிடம் வகிப்பதாக ராமதாஸ் கூறுவதைப் பற்றி...?

● ஆன்டனி தமிழரசன், மும்பை

? குடும்ப வன்முறையினால் 37 சதவிகிதப் பெண்கள் பாதிக்கப்படுகிறார்களாமே? சென்னைக்கு இதில் முதல் இடமாமே?

! இரண்டாவது



• அபாயகர ஆதரவு



• அனுமதி அரசியல்!

நிலைமை, முதல் 'சாதனை'யின் பின் விளைவாகவும் இருக்கலாம். எனவே, பெண்கள் அமைப்பினர், கட்சி சார் பின்றி விழிப்புணர்ச்சி பெற்று, உரக்கக் குரல் கொடுத்தால் நற்பயன் விளையாமல் போகாது.

❐ ரூ.100/- பரிசு பெறுபவர்:

ஏ.ராஜாத்தி,
எலவம்பட்டி அஞ்சல்,
ஜலகண்டபுரம் 636 501
ஓமலூர் தாலுகா
சேலம் மாவட்டம்

* ரூ.50/- பரிசு பெறுபவர்:

ச.ஆ.கேசவன்,
341/3, பைபாஸ் சாலை,
இனாம் மணியாச்சி,
கோவில்பட்டி - 628 502

● அ.யாழினி பர்வதம்,
சென்னை - 112

? "எதையும் அகில இந்தியத் தலைமையிடம் அனுமதி வாங்கிய பிறகுதான் நான் பேச முடியும்" என காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி வெளிப்படையாகக் கூறுகிறாரே?

! இவ்வாறு கூற அவருக்குத் தலைமையின் முழு அனுமதி உள்ளது என்று அறிக!

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நேரில் சென்று பார்ப்பதற்காக, தம்முடைய கிட்னியை விற்க முன் வந்துள்ள ஜாம்ஷெட்பூர் இளைஞரைப் பற்றி...?

! விற்கக் கூடாது; விற்றாலும் ஏற்கக் கூடாது. தொலைக்காட்சியில் லைவ் காண வசதி வந்த பிறகும் இத்தகைய அதீதங்களுக்குத் துணிவது ஏதோ மனக் கோளாறு காரணமாகத்தான் இருக்க முடியும்.

● அ.அப்துல் காதர்,
விளாத்திகுளம்

? தங்கள் தொகுதி நிலவரத்தை அறிய ஆந்திர எம்.எல்.ஏ.க்களுக்குப் புதிய சாஃப்ட்வேர் வழங்கப்பட்டுள்ளது பற்றி...?

! மனங்கள், மக்களின் கஷ்டம் அறியாத 'ஹார்ட்வேர்' ஆகிவிட்ட பிறகு, கம்ப்யூட்டர்களுக்கு என்ன சாஃப்ட்வேர் இருந்து என்ன பயன்?

● என். சண்முகம், திருவண்ணாமலை

? நீதிக்கும் நிதிக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்று முதல்வர் கலைஞர் பேசியிருப்பது குறித்து...?

! சொல் விளையாட்டுக்குச் சுகமா இருக்கு. அர்த்தத்தை ஆராய்ஞ்சா விபரீதமா இருக்கு!

● ரூபாவதி சௌந்தர்ராஜன், தேனூர்

? ஏப்ரலில் 'சிவாஜி' ரிலீஸ் ஆனால் உலகக் கோப்பை கிரிக்கெட் காரணமாக வசூல் பாதிக்கப்படாதா?

! ஊஹூம்; சிவாஜி திரைப்படம் காரணமாக சிவாஜி வசூல் பாதிக்கப்பட்டால் தான் உண்டு. அப்படி ஒரு வரலாறு திரும்பாது; திரும்ப வேண்டாம். ரஜினியை வாழ்த்துங்கள்!

✉ நகைச்சுவையாகத் தொடங்கிய 'எட்டாறு' சிறப்புச் சிறுகதையின் முடிவு மிக மிக உருக்கம். ஆறாம் வாய்ப்பாடு என்கிற சொற்களைக் கேட்கும்போதெல்லாம் இனி இந்த 'எட்டாறு' கதைதான் நினைவுக்கு வரும்!

**போடிநாயக்கனூர், எஸ்.எம்.பாலசுப்ரமணியன்**

✉ 'எட்டாறு' கதையைப் படித்ததும் கண்களில் கண்ணீர் ஆறாகப் பெருகியது. இயல்பான நடை மனதை உலுக்கியது.

**பொள்ளாச்சி, என்.சீதாலட்சுமி**

✉ இயக்குனர் ரமேஷ், வீரப்பன் மனைவி முத்துலட்சுமியை மட்டும் தன் படத்தில் நடிக்க வைக்க ஏன் ஆசைப்பட வேண்டும்? மனிதருக்கு கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.

**லால்குடி, எம்.இராஜேந்திரன்**

✉ 'ஜெயிக்கப் போவது நீங்க'வில் கூறப்பட்ட டிப்ஸ்களை பின்பற்றினால் செல்லுமிடமெல்லாம் நிச்சயம் ஜெயித்துக் காட்டலாம்.

**கும்பகோணம், எல்.வெங்கடராமன்**

✉ 'வாரம் ஒரு பாசுரம்' பகுதியில் நம்மாழ்வாரின் 'பேரே உரைகின்ற பிரான்' பாசுர விளக்கம் மிக மிக அருமை. பாசுரமும் பொருளும் மனதில் நிறைந்தன.

**விழுப்புரம், எம்.சங்கரி ரமேஷ்**

✉ பழைய வழக்கத்தின்படி சிறுகதைக்குப் பல பக்கங்கள் ஒதுக்க முன் வந்த 'கல்கி'க்குப் பாராட்டுக்கள்.

**தென்காசி, தீப.நடராஜன்**

✉ இளைஞர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் 'சோஃபியா ஸ்காலர்ஷிப்' உதயமாகியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய விஷயம்.

**நங்கநல்லூர், எஸ்.கோபாலன்**

✉ ஜெயிக்கப் போவது நாங்களாக இருப்பினும் அதற்கு வழிகாட்டிய துணைப் புத்தகம் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தது.

**சென்னை-57, தர்மன் பெரியசாமி**

## கூழுக்கும் மீசைக்கும்...



✉ வளர்ந்து வரும் நவீன யுகத்துக்கு ஏற்ப காலனி மார்க்கெட்டும் வித்தியாசமான சவால்களைச் சந்திக்கும் எனும் ஆதேஷ் குப்தாவின் கூற்று உண்மையே!


**கும்பகோணம், கே.என்.பாலகிருஷ்ணன்**

✉ லஜ்ஜா, உன்னோட விமர்சனம் மஜா! இருபத்திமூணாம் புலிகேசியுடன் நீ ஒப்பிட்டு இருப்பது, ஜோக்கா இருக்குது!

**பள்ளப்பட்டி, த.அசாருதீன்**

"உங்களுக்கு நாற்பது வயது நெருங்கி விட்டதா? ஆம் என்றால் நீங்கள் உஷாராக இருக்க வேண்டிய பருவம் இது என்பதை உணருங்கள். இந்த வயதில்தான் பல நோய்கள் உங்களைக் காதலிக்க ஆரம்பிக்கும். அவற்றுள் முக்கியமானது டயாபடீஸ் எனப்படும் சர்க்கரை வியாதி" என்கிறார் சென்னை அண்ணா நகர் பாலாஜி மருத்துவமனையைச் சேர்ந்த நீரிழிவு நோய் நிபுணர் டாக்டர் வி.பாலாஜி.

"சர்க்கரை வியாதியைப் பற்றித் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. நம் உடலில் இன்சுலின் எனப்படும் இயக்குநீர், கணையம்ங்கிற நாளமில்லாச் சுரப்பியிலிருந்து சுரக்கிறது. இது இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் அளவைச் சீராக வைத்திருக்க உதவுகிறது. சில காரணங்களால் பலருக்கு இந்த இன்சுலின் குறைவாகச் சுரக்கும். இல்லேன்னா அறவே சுரக்காமல் நின்றுவிடும். இன்னும் சிலருக்கு இன்சுலின் சுரந்தாலும் அது செயல்திறன் குறைஞ்சதா இருக்கும். இப்படிப்பட்டவங்களுக்கு இரத்தத்துல குளுக்கோஸ் அளவு இயல்பு அளவை (80-120 மி.கி. சதவிகிதம்) விட அதிகமாயிடும். இதனால் ஏற்படுற விளைவைத்தான் 'சர்க்கரை நோய்' என்கிறோம்.



• டாக்டர் பாலாஜி

**"தட்டிக் கொடுத்து கட்டுப்படுத்தி ஆயுள் வரை தோழனாக வைத்துக் கொள்ளலாம்!"**

இந்நோய் வருவதற்கு என்ன காரணம்? பரம்பரைத் தன்மை முக்கியமானது. பெற்றோர் இருவருக்கும் சர்க்கரை நோய் இருந்தா, அவங்களுடைய குழந்தைகளுக்கு இப்பிரச்னை வருவது 80 சதவிகிதம் உறுதி. அடுத்து, கொழுத்த உடம்பு உள்ளவங்களுக்கு இன்சுலின் பற்றாக்குறை உண்டாகி எளிதில் சர்க்கரை நோய் வருகிறது. இன்னொன்று, வைரஸ் பாதிப்பு. இதன் காரணமா கணையத்திலிருந்து இன்சுலின் சுரப்பதில்லை. இதுவும் சர்க்கரை நோய்க்கு இன்னொரு காரணம்.

சிலருக்கு அதிக அளவு உணவு, மன அழுத்தம், உடற்பயிற்சியின்மை மற்றும் உழைப்பின்மை காரணமாகவும் வரலாம். அட்ரீனலின், நார்-அட்ரீனலின், கார்டிசால், வளர்ச்சி இயக்குநீர், தைராக்சின் போன்ற பிற இயக்குநீர்கள் இரத்தத்துல அதிகமாவதாலும் இந்நோய் வரலாம். சில சமயங்கள்ல வேறு சிகிச்சைக்கு மாத்திரைகளைத் தொடர்ந்து சாப்பிடுவதால்கூட வர வாய்ப்பிருக்கு.

அறிகுறிகள் என்னென்ன தெரியுமா? அளவுக்கு அதிகமா பசி எடுக்கும். நாக்கு வறண்டுபோய் தாகம் எடுத்துக்கிட்டே இருக்கும். உடம்பு இளைச்சுக்கிட்டே இருக்கும். நாட்பட்ட சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு மேற்சொன்ன அறிகுறிகளுடன் பிறப்புறுப்பில் புண்ணும் அரிப்பும் உண்டாகும். சிலபேருக்கு உடல் முழுவதும் அரிப்பு ஏற்படலாம். அடிக்கடி கைகால்களில் குடைச்சல், உணர்ச்சிக் குறைவு, கண் பார்வை குறைவது, அடிக்கடி கிறுகிறுப்பு, மயக்கம் வருவது என்று இருந்தாலே டயாபடீஸ்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எந்த அறிகுறியும் வெளியில தெரியாமயும் உடலில் சர்க்கரை நோய் இருக்க வாய்ப்பு இருக்கு.

ரெண்டு விதமான சர்க்கரை வியாதிகள் இருக்கு. இன்சுலின் சார்ந்த சர்க்கரை வியாதியை முதலாவது வகை- அதாவது Type-I டயாபடீஸ்னு சொல்றோம். இது பொதுவா சின்ன வயசிலேயே வரக்கூடியது. இவங்களுக்கு இன்சுலின் கொஞ்சம்கூட சுரக்காது.


இன்னொன்று இன்சுலின் சாரா சர்க்கரை வியாதி. இது Type-II. இது

வழக்கமா நடுத்தர வயசுக்காரங்களுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் வருவது. இவங்களுக்கு இன்சுலின் சுரப்பி தேவையான அளவுக்கு இருக்காது.

**த**னக்குச் சர்க்கரை வியாதி இருக்குமோன்னு சந்தேகப்படுகிறவர்கள் Glucose Tolerance Test மூலம் இதனை உறுதிப்படுத்திக்கலாம்.

காலையில் வெறும் வயிற்றில் ரத்தமும், சிறுநீரும் சேகரிக்கப்படும். அதை அடுத்து 75 கிராம் குளுக்கோஸ் நீரில் கரைத்துக் கொடுக்கப்படும். அதன் பிறகு அரை மணி நேரத்துக்கப்புறம் ஒருமுறை ரத்தமும், சிறுநீரும் பரிசோதிக்கப்படும். அரை மணி நேரமான பிறகு ஒரு மணி நேரம், பிறகு ஒன்றரை மணி நேரம்... கடைசியாக ரெண்டு மணி நேரம்... என்ற கால இடைவெளியில் இந்தப் பரிசோதனை செய்யப்படும். இந்தப் பரிசோதனைகளில் சர்க்கரையின் அளவு சரியான விகிதத்துல இருந்தால், சம்பந்தப்பட்ட நபருக்கு டயாபடீஸ் இருக்காது.

அதுவே குளுகோஸ் சாப்பிட்ட பிறகு செய்யப்படும் ரத்தப் பரிசோதனையில்,




ரத்தத்தில் சர்க்கரை அளவு 250மி.கி., 260மி.கி., 300 மி.கி. என்று உயர்ந்து, மீண்டும் கொஞ்சம் குறைந்து 200 மி.கி. என்ற அளவுக்கு மேல் இருந்தால், டயாபடீஸ் உள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். சர்க்கரையின் அளவு, அவரது வயது, உடல் எடை போன்ற விவரங்களையும் தெரிந்து கொண்டு சிகிச்சை செய்வது சிறந்தது.

**ச**ர்க்கரை நோய் அண்டாமல் இருக்க உடற்பயிற்சி அவசியம். உணவுக் கட்டுப்பாடு, உடல் எடையை அதிகரிக்காமல் பார்த்துக்கறதன் மூலமா இந்நோய் வராம தடுக்கலாம். பரம்பரை காரணமா மீறி வந்துட்டாலும் ஒண்ணும் கவலைப்படத் தேவையில்லை. தட்டிக் கொடுத்துக் கட்டுப்படுத்தி நம்ம ஆயுள்வரை நல்ல தோழனாக் கூடவே வச்சுக்கலாம்."

**- மனோ**

படம் : **சுந்தரம்**

எப்பேர்ப்பட்டவரையும் மன்மதன் ஜெயிக்கிறானே...? எங்கு போனாலும் ஜெயிக்கிறானே...? என்ன காரணம்? தவம் செய்த விஸ்வாமித்ரர் - முக்காலமும் உணர்ந்த முனிவர் - அவர்கூட அவனிடம் தோற்கிறார். காரணம் என்ன என்று கேட்டால், அதற்கு பகவத்பாதர் பதில் சொல்கிறார் - 'காம சஞ்சீவன ஔஷதி' என்ற திருநாமத்தை அடிப்படையாக வைத்துத்தான் பதில் சொல்கிறார்:

# அரவணைக்கும் அன்னை 27

சுதா சேஷய்யன்

“அம்மா! அவனுக்குப் பின்னாலே நீ இருக்கிறாய்... அதனாலேதான் அவன் ஜெயிக்கிறான். அவனை எப்படி ஜெயிக்க வைக்கிறாய் என்றால் - சஞ்சீவன ஔஷதியாக இருந்து கொண்டு ஜெயிக்க வைக்கிறாய். அவனுக்கு நீ உயிரைக் கொடுத்தால்தானே உலக வியாபாரம் நடக்கும்...?”

ஆனால், அதே சமயத்தில் இந்த ஜீவன்களுக்கு என்ன காட்டுகிறது இந்தச் சம்பவம்...? மனத்தையும் இந்த்ரியங்களையும் கொண்டுபோய் அம்பாள் காலடியில் போட்டால், அவன் எப்படி மன்மதனுக்கு ஔஷதியாக - சஞ்சீவினியாக - இருக்கிறானோ, அதே மாதிரி ஜீவன்களான நமக்கும் இருப்பான்.

அதைத்தான் இந்தப் பண்டாஸுரன் கதை மூலமாக லலிதா சஹஸ்ரநாமாவளி உணர்த்துகிறது.

## தெரிந்தோ தெரியாமலோ

பகவான் நாமாவைப் பாராயணம் செய்வது அவனை அடைவதற்கான மிகச் சுலபமான வழி என்பது நம் முன்னோர்கள் நமக்குச் சொல்லிவிட்டுப் போன உண்மை. நாமியைவிட நாமா பெரியது என்பார்கள். அதாவது பகவானைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது அவனுடைய நாமம்! வேறொன்றுமே இல்லையென்றாலும் இந்தத் திருநாமங்களைச் சொன்னால், அதற்குரிய பயன் நிச்சயமாக உண்டு. எத்தனையோ விதங்களில் பகவானை ஆராதனை பண்ணலாம் என்றாலும் கூட, சில முறைகள் சில பேருக்கு ஒத்து வரும்; சில பேருக்கு ஒத்து வராது. இதற்குப் பல காரணங்கள் இருக்


ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகை
திருச்சிராப்பள்ளி


கலாம். செய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தால் கூட முடியாமல் போகலாம். நடைமுறையிலே ஒத்துவராது; சூழல் ஒத்து வராது; அல்லது வாய்ப்பு அமையாது. மந்திர பூர்வமாகவும் யந்திர பூர்வமாகவும் அம்பாளை உபாஸனை செய்வதென்பது எல்லா சமயங்களிலும் எல்லாருக்கும் கிடைக்கக் கூடியது அல்ல. குருமுகமாக உபதேசம் பெற்றவர்கள் செய்ய முடியும். அவர்கள் கூட அதை முழுமையாகச் செய்ய முடியுமா முடியாதா என்பது அவரவர் சூழலைப் பொருத்தது.

ஆனால், இயந்திர மயமான வாழ்க்கை இருக்கக்கூடிய கால கட்டத்தில், எல்லாவற்றுக்கும் வேகம் வேகம் என்று வேகமாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கக் கூடிய இந்தக் காலகட்டத்தில், மிகச் சுலபமான வழியாக இருக்கக்கூடியது பகவான் நாமாக்களைத் தெரிந்தோ தெரியாமலோ சொல்லக் கூடிய முறை.

'தெரிந்தோ தெரியாமலோ' சொன்னால் கூட பலன் உண்டு என்பது நமது பண்பாட்டில் மிகப் பிரசித்தம். சில நாமாவளிகளைச் சொல்லும்போது அர்த்தம் என்ன என்பதுகூட தெரியாது. ஆனால், புரிந்து சொன்னாலும், புரியாமல் சொன்னாலும் நிச்சயம் பலன் உண்டு. அதுவும் கலிகாலத்தில் நாம சங்கீர்த்தனமும் நாம பாராயணமும் (இறைவன் பெயர்களைப் பாடுவதும் உச்சரிப்பதும்) எல்லோராலும் கடைப்பிடிக்கப்படக்கூடிய வழிகள் என்று சொல்வதுண்டு. அதுவும் அம்பாளைச் சொல்லும்போது, மற்ற தெய்வங்களைக் காட்டிலும் எளிமையும் சுலபமும் இருக்கின்றன. ஏனென்றால் அவளைச் சொல்கிறபோது ரொம்ப அணுக்கமாகச் சொல்லலாம். மற்ற உறவுகளிடம் இருக்கக்கூடிய அன்பையும் அணுக்கத்தையும்விட தாயினிடத்தில் இருக்கக்கூடிய அணுக்கம் மிக அதிகம் அல்லவா? மற்ற உறவுகளைக் கூட குறிப்பிட்ட வயது வரைக்கும் ஒரு மாதிரி கூப்பிடலாம். அதற்கப்புறமும் வளர்ந்து வயதான பிறகும் அதே மாதிரி கூப்பிட்டுப் பழகினால் மனஸ்தாபம் வருவதற்கான வாய்ப்பு உண்டு. ஆனால் அம்மா என்பவளை - எந்த வயதானாலும் சரி - மூன்று வயதோ முப்பது வயதோ - எப்படி நடத்தினாலும் - குழந்தைகளைப் பார்த்துத் தாய் சந்தோஷப்படுவாள். கொஞ்சம் நாட்களுக்குப் பேசவில்லையென்றால்கூட, 'சரி, ஏதோ வேலை போலிக்கிறது. அதனால்தான் இவ்வளவு நாட்களாகப் பேசிக் கொண்டிருந்த பிள்ளைக்கு நம்மிடம் பேச நேரம் இல்லை' என்கிற வாத்ஸல்யம் தாயினிடத்தில் இருப்பதால்தான் அந்த அம்பாளை ஆராதனை செய்யும்போது சுலபமான நாமாக்களால் புரிந்தும் புரியாமலும் வழிபட்டாலும் அவள் ஏற்கிறாள். நாமாக்களைச் சொன்னாலே ப்ரீதி அடையக் கூடியவள் - அப்படிப்பட்ட லலிதாம்பிகையின் திருநாமங்களைக் குறித்து நாம் சேர்ந்து சிந்தித்து வரக் கூடிய பாக்கியம் கிடைத்திருக்கிறது.

## விரும்புவோர் விருப்பப்படி...


**ஸ்ரீ** லலிதா ஸஹஸ்ரநாமத்தினுடைய விசேஷம் என்னவென்றால், அம்பாளை யார் யார் எப்படியெல்லாம் பார்க்க விரும்புகிறார்களோ அவை எல்லாவற்றுக்குமான தகுந்த நாமங்கள் இந்த நூலிலே இருக்கின்றன.



கௌலாசாரம் என்று ஒரு வழிபாட்டு முறை உண்டு. சமயாசாரம் என்று ஒரு முறையும் உண்டு.

ஸ்ரீ வித்யா உபதேசம் பெற்றவர்கள் இந்த இரண்டையும் நன்றாகத் தெரிந்து வைத்திருப்பார்கள்.

மிக எளிமையாக இவை குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அண்டத்திலே இருக்கக்கூடிய எல்லாவற்றையும் அம்பாளாகப் பார்ப்பது ஒரு முறை. கண்ணுக்கு முன் எதைப் பார்த்தாலும் அது அம்பாள். அப்படிப்பட்ட முறையில்தான் சந்திரனும் சூரியனும் அம்பாளின் திருக்கண்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்த அண்ட-பிரும்மாண்டம்தான் அம்பாள்' என்று ஒரு ஸ்வரூபத்தைக் கற்பனை பண்ணிக் கொண்டால், இவ்வளவு பெரியதாக இருக்கக்கூடிய அண்டத்துக்கு ஒளி வழங்கும் சூரியனும் சந்திரனும் அவள் கண்கள்.



- இது ஒரு விதம்.

இன்னொரு விதம் என்னவென்றால், அண்டத்தையே பிண்டத்துக்குள் பார்த்து வழிபடும் முறை. அவள் நமக்குள்ளேயே உறைகிறாள் என்று உணர்ந்து கொண்டாடி வழிபடும் முறை.

இந்த இரண்டு முறைகளும் சாதாரணமாக ஸ்ரீ வித்யா உபாஸனையில் சொல்லப்படுகின்றன. இந்த இரண்டு உபாஸனா முறைகளுக்கான திருநாமங்களையும் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தில் காணலாம். அம்பாளுக்கே ஸமயா என்று ஒரு திருநாமம் உண்டு. அதே மாதிரி கௌலாசார முறையில் அவள் எப்படி இருக்கிறாள் என்று சொல்லக்கூடிய திருநாமங்கள் இருக்கின்றன. இவை தவிர, யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள முறைகளை எடுத்துக்கொண்டு, அந்த சாஸ்திரம் விளக்கும் ஆதாரச் சக்கரங்களில் அவள் இருக்கிறாள் என்று விவரிக்கும் நாமங்கள் உள்ளன. மூலாதாரத்தில் ஆரம்பித்து ஒவ்வோர் ஆதாரச் சக்கரமாகத் தொடர்ந்து, குண்டலினியில் அவளை எப்படி எழுப்புவது என்று கூறும் நாமங்கள்.

இப்படி, அம்பாளை யார் யார் எப்படி எப்படியெல்லாம் வழிபட விரும்புகிறார்களோ, யார் யாருக்கு எது எதுவெல்லாம் பொருத்தமாக வருகிறதோ அந்த முறைகளிலெல்லாம் வழிபடலாம் என்பதற்கான நாமங்கள்தான் இந்த ஆயிரம் திருநாமங்கள்.

இவற்றுள் தேர்ந்தெடுத்த சில நாமங்களின் பொருளை நாம் இதுவரை சேர்ந்து அனுபவித்து வந்தோம். இன்னும் அற்புதமான பொருள் படைத்த நாமங்கள் இருக்கின்றன. அவற்றையும் தொடர்ந்து அனுபவிப்போம். ◎

---

(ஸ்ரீ லலிதா முதல் பாகம்
நிறைந்தது. அடுத்த பாகம்
கல்கி ஆகஸ்டு 5
ஆண்டு மலரில் ஆரம்பம்)

## லஜ்ஜாவதி

ரெட்டை அர்த்த வசனங்கள், கிளு கிளுப்பு சமாசாரங்கள்னு எஸ்.ஜே. சூர்யா ஃபார்முலா தப்பாம வந்திருக்குற படம். ஆரம்பத்திலேயே இதைக் கண்டிக் கிறேன்.

முறுக்கு மீசை, முரட்டுக் கோபத்தோடு தெருமகனா சுத்திக்கிட்டிருக்கிற எஸ்.ஜே. சூர்யாவைத் தங்களுக்கு மணமகனாக்க போராடுற நான்கு மணமகள்கள். இவங் களைத்தான் கதை சுத்திச் சுத்திக் கும்மி யடிக்குது.

பானை செய்யற மீரா ஜாஸ்மினை மட்டும் உயிருக்குயிரா நேசிச்சாலும், 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'ன்னு காதலிச்ச மீராவைக் கைவிட்டுட்டு, வேறொரு பெண்ணைத் திருமணம் செஞ்சுக்கிட்டு அப்பாவின் வாக்கைக் காப்பாத்துறாரு 'திருமகன்.'

கோபம்னு வரும்போது மீசையை முறுக்கிட்டு அரிவாளத் தூக் கறதும், பாசம்னு வரும்போது அப் பாகிட்ட உருகறதும்னு உணர்வு பூர்வ மான காட்சிகளில் ஒன்றிப்போய் மாறுபட்டு மனசைத் தொடுறாரு சூர்யா.

மீராவைப் பத்திச் சொல்லத் தேவை யில்லை. எந்த கேரக்டர் கொடுத்தாலும், அப்படியே வாழ்ந்து காட்டுவேன்ங்கிறதை இதிலேயும் நிரூபிச்சிருக்காங்க. குறும்பு குப்பம்மான்னு பட்டமே கொடுக்கலாம். மாளவிகா, ஊறுகாயா பயன்பட்டிருக் காங்க.

ராதாரவி பொறுமையா, நிதானமா நடிச்சு மனசை அள்றாரு. விஜயகுமாரும் அப்படித்தான். வில்லனா வர்ற ரஞ்சித் பாந்தம். இளவரசு அடாவடி மருமகனா வந்து அலம்பல் பண்றது சுகம்.

எச்.வேணுவோட ஒளிப்பதிவு கிராமத் தைக் கிராமமா காட்டி நெகிழ்ச்சியூட்ட செஞ்சிருக்கு. நீண்ட நாளுக்கப்புறம் தேவாவின் இசை! தேவலை. வைரமுத்துவின் வார்த்தைகள்ல மண் மணம் கமழுது.

டைரக்டர் ரத்னகுமாரோட முதல் படம். பாரதிராஜா கூடவே இருந்ததால மண் வாசனைப் படம் தந்ததுல தப்பில்ல. ஆனா, தரமா தரணுமா இல்லையா? திரைக்கதை முதற் கொண்டு பல விஷயங் கள்ல கூடுதல் கவனம் செலுத்தி யிருக்கணும். விட்டுட்டாரே கோட்டைய! ●

# திருமகன்



# ஜெயித்துக் காட்டிய வங்கி!

சென்னையில் 2001-ஆம் ஆண்டில் இந்தியன் வங்கி நடத்திய கண்காட்சி ஞாபகத்துக்கு வருகிறது. இந்த வங்கியின் நிதியுதவி பெற்ற சுயஉதவிக் குழுவினர், தாங்கள் தயாரித்த பொருட்களை அக் கண்காட்சியில் விற்பனைக்கு வைத்திருந்தார்கள். அதைச் சுற்றிப் பார்த்தபோது அப் பெண்களின் முகங்களில் பெருமிதம் பிரகாசிப்பதைக் கண்டேன். கைவேலைப்பாடு அமைந்த அழகான கொலுசுகளை அங்கே என் பேத்திக்காக வாங்கினேன்.

மகாத்மா காந்தி சொல்வார்: "நமது செயல்திறனுக் கும் நமது நடைமுறை செயல்பாட்டுக்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் கொண்டு உலகின் பெரும்பாலான பிரச்னைகளைத் தீர்த்து விடலாம்" என்று!

இந்தியன் வங்கியின் வெற்றி மகாத்மாவின் இந்தச் சிந்தனைக்கு முழு நிரூபணம். சவால்களைச் சந்தித்து, சோதனைகளிலிருந்து மீண்டு, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்பத் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு ஜெயித்துக் காட்டியிருக்கிறது. வருங்கால சந்ததியினருக்கு மட்டுமின்றி இன்று நம் நாட்டில் இயங்கும் ஒவ்வொரு நிறுவனத்துக்கும் நல்லுதாரணமாக இந்தியன் வங்கி திகழ்கிறது.

இந்த வங்கி தேசத்தின் முன்னணி வங்கியாகத் (Lead Banker) திகழவும், அடுத்த இருபது ஆண்டுகளுக்கான தேச வளர்ச்சியில் பங்கு பெறவும் இலக்குகள் அமைத்துக்கொண்டு இயங்க வேண்டும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் - குறிப்பாக கிராமங்களில் - இந்தியன் வங்கிக் கிளைகள் காணப்படவேண்டும்.



இந்தியன் வங்கி தனது இலட்சியங்களை அடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.



மக்களுக்கு மிகுந்த பதற்றம் ஏற்பட்டிருந்த காலம் அது. அவர்கள் மிகவும் நம்பி தங்கள் பணத்தை டெபாசிட் செய்திருந்த 'அர்புத்நாட்' என்ற நிறுவனம் திவாலாகி விட்டது.

"நமக்கென்றே ஒரு சுதேசி வங்கி இருந்தால் இப்படி ஆகியிருக்குமா? உள்ளூர்வாசிகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு கவனத்துடன் இருந்திருப்பார்களே!"- இப்படி ஒரு சிந்தனை பரவியது. வி.கிருஷ்ணசாமி ஐயர் மற்றும் வேறு சிலரது கடும் முயற்சிகளின் காரணமாக அந்த வங்கி 1905 மார்ச் 5 அன்று பிறந்தது.

அதுதான் "இந்தியன் வங்கி" என்பதை உங்களால் யூகித்திருக்க

# சரித்திரச்



முடியும். ஆனால் அதில் ஒரு சின்ன திருத்தம். அதன் அப்போதைய பெயர் "தி இந்தியன் வங்கி லிமிடெட்" (The Indian Bank Ltd.) தேசியமயமாக்கப் பட்டப் பிறகுதான் "லிமிடெட்" என்ற வால் மறைந்தது!

சென்னை பாரிமுனையில் உள்ள ஒரு கட்டடத்தில் இயங்கத் தொடங்கிய

'வீட்டுச் சேமிப்புத் திட்டம்' என்பதை முதன் முதலாக அறிமுகப் படுத்தியது இந்தியன் வங்கிதான். சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் வாடிக்கையாளர் டெபாசிட்கள் செலுத்தினால், தனது வீட்டைக்

## முதன் முதலாக...

கட்டிக் கொள்ள, சலுகை வட்டியில் கடன் பெறலாம் என்ற உறுதியை முன்னதாகவே இந்தியன் வங்கி அளிக்கிறது.



வேலையற்ற பட்டதாரிகள் சிறுதொழில் நிறுவனங்களை உருவாக்க உதவும் வகையில் ஒரு புதிய தொழில் முனைவோர் வளர்ச்சி அமைப்பை (NEDA) உருவாக்கியது இந்தியன் வங்கி. குறிப்பிட்ட சில பகுதிகளில் இவ்வமைப்பு இயங்கி வருகிறது. இந்த அமைப்பு பல்கலைக்கழக வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டும் தகவலகம், SISI, வேலைவாய்ப்பு அலுவலகங்கள் போன்றவற்றுடன் இணைந்து பட்டதாரிகளுக்கு உதவி செய்கிறது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுள் இந்தியன் வங்கியே



இந்த வங்கி, ரத்தன் பஜார் பகுதிக்கு மாறியது. பிறகு வடக்குக் கடற்கரை சாலைக்கு 1919-ல் தன் தலைமை அலுவலகத்தை மாற்றிக் கொண்டது.

இப்போதைய கம்பீரமான கட்டடத்தில் மே, 1970-லிருந்து இயங்குகிறது இந்த வங்கியின் தலைமையகம். "வடக்குக் கடற்கரைச் சாலையின் முதிய சீமாட்டி" என்றும் இந்தியன் வங்கி செல்லமாக அழைக்கப்பட்டதுண்டு.

## வளர்ந்த கதை

பளவு சலவைக்கல் சிலை தலைமையகத்தின் நுழைவு வாயில் அருகே வைக்கப்பட்டிருக்கிறது.

தொடங்கிய ஏழு வருடங்களில் இந்த வங்கிக்கு (சென்னை தலைமையகத்தைத் தவிர) இரண்டே கிளைகள்தான்.

# சுவைத் துளிகள்

ஒரு வேடிக்கை: இதன் நுழைவாயில் உள்ள தெருவின் பெயர் "அபுத்நாட் சந்து!"

இதன் ஆரம்ப காலத் தலைவர்கள், நிர்வாக இயக்குநர்கள் மற்றும் இயக்குநர்களில் சிதம்பரம் செட்டியார், சி.பி.ராமசாமி ஐயர், ராமசாமி செட்டியார், வி.கிருஷ்ணசாமி ஐயர், ராஜா சர் அண்ணாமலை செட்டியார், சர் முத்தையா செட்டியார் போன்ற பல ஜாம்பவான்கள் இருந்திருக்கிறார்கள்.

அதிலும் கிருஷ்ணசாமி ஐயரின் இடைவிடாத தொடர் முயற்சிகள் இந்தியன்' வங்கி உருவாக முக்கிய காரணமாக அமைந்தன. அதற்கு நன்றிக் கடனாக அவரது மார்

"டெபாசிட்டுகளின் கூட்டுத்தொகை 41,637 கோடி ரூபாய்..."

ஒன்று மதுரையில் மற்றொன்று காக்கிநாடாவில் (காக்கிநாடா கிளை 1918-ல் மூடப்பட்டது!)

நாட்டுக்கோட்டை செட்டியார்கள்- முக்கியமாக திவான் பகதூர் ராமசாமி செட்டியார் - அளித்த ஆதரவு, வங்கியின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு மிக மிக உதவியது. பர்மாவுடன் (இன்றைய மியான்மர்) வணிகம் செய்ய செட்டியார்களுக்கு வங்கி நிறைய கடன் உதவி செய்ய, அவர்களும் தங்கள் சேமிப்பையெல்லாம் வங்கியில் டெபாசிட் செய்ய,



இத்தகைய அமைப்பை முதன்முதலில் உருவாக்கியது.



இந்தியன் வங்கி புஷ்டியாகவே வளர்ந்தது.

*1913 - 1920-ல்* (கடுமையான போர் நடைபெற்ற எட்டு வருடங்கள்) கூட, *102* வங்கிகள் இயங்காத போது, இந்தியன் வங்கி மட்டும் வெற்றிகரமாக இயங்கியது. யுத்த காலத்தில் டெபாசிட்டுகள் இருபத்தைந்து லட்சம் ரூபாய்க்கு அதிகரித்தன. யுத்தம் முடிந்தபோது அது ஐம்பது லட்சத்தைத் தாண்டியிருந்தது.

*1932-ல்* கொழும்புவில் இந்தியன் வங்கி தனது கிளையைத் தொடங்கியது. அதாவது முதல் வெளிநாட்டுக் கிளை.

*1962-ல்* லாபம் குறைந்ததன் காரணமாக தென் இந்தியாவில் இயங்கிய சில சிறு வங்கிகள் சிக்கலில் ஆழ்ந்தன. ராயலசீமா வங்கி, அழகாபுரி வங்கி, சேலம் வங்கி, மன்னார்குடி வங்கி, திருச்சி யுனைடெட் வங்கி போன்றவற்றை இந்தியன் வங்கி தன்னுடன் இணைத்துக் கொண்டது. தொண்ணூறுகளில் 'பேங்க் ஆஃப் தஞ்சாவூர் லிமிடெட்' இந்தியன் வங்கியுடன் ஐக்கியமானது.

தேசியமயமாக்கப்பட்ட பிறகு இந்தியன் வங்கியின் செயல்பாடுகள் நன்றாகவே இருந்தன. இந்தக் காலகட்டத்தில் டெபாசிட் *90* கோடி ரூபாயிலிருந்து *1293* கோடி ரூபாயாக அதிகரித்தது.

• ஆரம்ப காலத்தில்...





• ...நிர்வாகிகள்



## முதன் முதலாக...

தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு (2001 - 02, 2002 - 03, 2003 - 04) தமிழகத்தில் மிக அதிக எண்ணிக்கையில் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் உதவி அளித்ததற்காக NABARD அமைப்பு, 2004 - 05ல் இந்தியன் வங்கிக்கு முதல் பரிசு வழங்கியுள்ளது.

• இன்றைய நிர்வாகிகள்





தொண்ணூறுகளின் பிற்பகுதியில் இந்தியன் வங்கிக்குச் சில பின்னடைவுகள் உண்டாகின. ரிசர்வ் வங்கியின் விதிகளுக்குட்பட்டு இயங்குவது பெரிதும் சிரமமானதாயிற்று. இந்தியன் வங்கி 'மறுசீரமைப்புத் திட்டம் 2000-03' என்கிற திட்டம் வகுக்கப்பட்டு இந்திய அரசிடம் ஜூன் 2000 ஆண்டில் வழங்கப்பட்டது. இத் திட்டம் அதிக லாபம், போதுமான முதலீட்டு விகிதம் ஆகியவற்றை அடைய வழிமுறைகளை வகைப்படுத்திக் கொடுத்தது.

இன்று இந்தியன் வங்கி தன்னை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டுவிட்டது. அதற்கான சில ஆதாரங்கள் இதோ:

* 31.03.2006 அன்று வங்கியில் முதலீட்டு விகிதம் (Capital Adequacy Ratio) 13.19 சதவிகிதத்தைத் தாண்டியது.

* 13 வருடங்களுக்குப் பிறகு, 2005-06-ல் இந்தியன் வங்கி 101 கோடி ரூபாயை டிவிடெண்டாக வழங்கியது.

* 2005-06-ல் வங்கியின் உலக வணிகம் 19 சதவிகிதம் அதிகரித்தது.

* 31.3.06 அன்று திரும்பி வாராக் கடன் 0.79 சதவிகிதமாகக் குறைந்துள்ளது.

இந்தியா முழுவதும் பரவியுள்ள இந்தியன் வங்கியின் கிளைகள் 1431. கொழும்பு, சிங்கப்பூர் ஆகிய இரண்டு வெளிநாட்டுக் கிளைகளையும் கொண்டுள்ளது இவ்வங்கி.

ஜூன் 2006 அன்று வங்கியின் டெபாசிட்டுகள் கூட்டுத்தொகை 41,637 கோடி ரூபாய். அது அளித்துள்ள மொத்தக் கடன் தொகை 25,157 கோடி ரூபாய்.

ஆக சாதனைகள், சோதனைகள் என்று பலவற்றைக் கடந்து இன்று வெற்றிநடை போடுகிறது இந்தியன் வங்கி.




தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு (2003, 2004, 2005), தென்னிந்தியாவில் உள்ள சேவை நிறுவனங்களுள் (service brands) இந்தியன் வங்கியே முதலிடம் பிடித்துள்ளது. ஏ.சி.நியல்சென் – ORG-MARG அமைப்பின் கணிப்பு இது.

'விழுவது எழுவதற்கே' என்பதற்கு உதாரணமாக விளங்குகிறது இந்தியன் வங்கி. அதன் தலைவரும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் கே.ஸி.சக்ரபர்த்தி தடையின்றி நமக்களித்த பதில்களிலும் அந்தத் தன்னம்பிக்கை எதிரொலித்தது.

**பதவியேற்றவுடன் நீங்கள் எடுத்த முதல் முடிவு என்ன?**

கடந்த பத்து வருடங்களாக வங்கியின் வெவ்வேறு கட்டங்களை ஆராய்ந்தேன். கடினமான ஒரு நிலையைச் சந்தித்துக் கொண்டிருந்தது இந்தியன் வங்கி. அதைக் களைவது எப்படி என்பதை ஆராய்ந்தேன். இந்தியன் வங்கி ஒரு சராசரி மனிதனுக்கான வங்கியாக இருக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம். இன்று வங்கி சோதனைகளைத் தாண்டி வெற்றிகரமாக நடைபோடுகிறது என்றால், அது அதிக எண்ணிக்கையிலுள்ள சராசரி மனிதர்களின் ஆதரவினால்தான். இந்தப் பிரிவினர்களின் தேவையை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்டு வந்தேன். வாடிக்கையாளர்களின் பலதரப்பட்ட தேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் கடன் அட்டை, தங்கக்காசு, இன்சூரன்ஸ் ஆகியவற்றை எங்கள் வங்கியில் அறிமுகம் செய்துள்ளோம்.

**குறிப்பிட்ட பிரிவினருக்கு நிதி உதவியில் முன்னுரிமை தரவேண்டும் என்று தீர்மானித்தீர்களா?**

முக்கியமாக சில்லரை வணிகர்கள், சிறு தொழில் நிறுவனர்கள், விவசாயிகள் ஆகியோருக்கான நிதி உதவிக்கு முன்னுரிமை அளிக்கத் தீர்மானித்தேன். எங்கள் உதவியால் அவர்களே பெருமளவில் நாளை செழித்து முன்னுக்கு வர வாய்ப்பு உண்டு அல்லவா?

**சமீபத்தில் நீங்கள் படித்த புத்தகங்கள் எவை?**

நான் எப்போதுமே விரும்பிப் படிப்பது பீட்டர் ட்ரக்கரின் (PETER DRUCKER) நிர்வாக மேலாண்மை நூல்களைத்தான். "பபுள்" (BUBBLE) என்ற நூலை சமீபத்தில் படித்தேன். நிதியமைச்சர் சிதம்பரத்தின் AN OUTSIDER'S VIEW என்ற நூலையும் படித்தேன். சிறந்த பொருளாதாரம் என்பது, சிறந்த அரசியலாகவும் எப்படி விளங்கும் என்பது அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

> "பலதரப்பட்ட தேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பூர்த்தி செய்ய வேண்டும்"



வருங்காலத்தில், தனியார் வங்கிகளுடன், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளால் எந்த அளவு

## தலைவர் நேர்காணல்

# சங்கடங்களிலிருந்து சந்தோஷத்திற்கு...

போட்டி போட முடியும் என்று எண்ணுகிறீர்கள்?

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அரசின் பின்னணி இருக்கிறது. மிக அதிக மான வங்கிக்கிளைகள் உள்ளன. போதிய ஊழியர்கள் இருக்கிறார்கள். இந்த பலங் களை வைத்துக்கொண்டு திறமையுடன் இயங்குவதால்தான் போட்டியை எதிர் கொள்ள முடிகிறது. தவிர, நாங்கள் தொலைநோக்குப் பார்வையில் மதிப்பீடு களை அதிகரித்துக் கொண்டிருக்கிறோம்.

**உங்கள் வங்கிப் பணியில் நடந்த சுவையான அனுபவங்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

இலண்டனில் பணியாற்றியபோது சில டாக்டர்களுக்குப் பிற நிதி நிறுவனங்கள் உதவி செய்ய மறுத்துவிட்டன. அந்த உதவியைச் செய்யத் தீர்மானித்தேன். அவர்கள் வெற்றிகரமான மருத்துவர் களாக இன்று அங்கு விளங்குவதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

முன்பு வேறு சில வங்கிகளின் பங்கு களைப் பொது மக்களுக்கு விற்க முயன்ற போது வெளிநாட்டவரிடம் இந்தியாவின் பின்னணி குறித்து நிறைய விளக்க வேண்டியிருந்தது. ஆனால் இப்போது இந்தியன் வங்கிகளின் பங்குகளில் ஒரு பகுதியை அப்படி விற்கும்போது அந்தச் சிரமமேயில்லை. இந்தியா குறித்தும், அதன் பொருளாதார மேன்மை குறித்தும் மிகப் பரவலாக உலகம் முழுவதும் தெரிந் திருக்கிறது. இது தன்னம்பிக்கை தரும் சூழல்.

தவிர, கிராமப் பகுதிகளுக்குச் செல்லும்போது எங்கள் வங்கியால்தான் உயர்வு பெற்றதாக தங்கள் முன்னேற் றத்தை அந்தப் பகுதி மக்கள் கூறும்போது மகிழ்ச்சியாக இருக்கும்.

**ஒருபுறம் இயந்திரமயமாக்கல்; இன் னொருபுறம் பர்சனல் டச் எனப்படும் தனிப்பட்ட சேவை. எப்படி இந்த இரண்டையும் இணைத்துச் செயல்படு கிறீர்கள்?**

முதன்முறையாக நம் நாட்டில் சுய உதவி இயக்கத்தை அறிமுகப்படுத்தியது இந்தியன் வங்கிதான். 70 சதவிகித மக் களுக்கு வங்கிகளோடு தொடர்பு இல்லை. 90 சதவிகிதம் பேருக்கு இன்சூரன்ஸ் வசதி கிடையாது. இவர் களையெல்லாம் ஒருங்கிணைக்கும் முயற்சியில்தான் நாங்கள் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

தகுதி பெற்றவர்களுக்கு எங்கள் வங்கி நிச்சயம் நிதி உதவி செய்ய மறுக் காது. அதுவும் கிராமப் பகுதிகளில் இது போன்ற சேவைகளில் அழுத்தமாகக் காலூன்ற விரும்புகிறோம். திட்டங்களை ரிசர்வ் வங்கி வகுத்தாலும் அவற்றை முதலில் நடைமுறைப்படுத்திய வங்கி யாக எங்கள் வங்கி இருப்பதில் பெருமை. மத்திய நிதியமைச்சர் கிராமக் கட்டமைப்புகளில் வங்கிகள் கவனம் செலுத்துவதற்கு முன்னுரிமை கோரி யிருக்கிறார். அதை நிறைவேற்றப் பாடு படுவோம்.

மொத்தத்தில் எங்கள் முக்கிய நோக் கம் என்பது ஒரு வங்கி எப்படி திறமை யாக சராசரி மனிதனின் தேவைகளை நியாயமான முறையில் நிறைவேற்ற முடியும் என்று ஆய்ந்து அதன்படி முழுமையாக செயல்படுவதுதான்!

# வங்கிக்குறள்




# திட்டமுறை திருவினையாக்கும்!

கடனறிந்து காலம் கருதி நேரத்துள்
கடன்செலுத்தல் எல்லார்க்கும் தலை.

தேரான் பிறனைத் தெளியார் கடன்முறை
தீரா வாராக்கடன் தரும்.

எக்கடன் யார்யார்க்குக் கொடுத்திடினும் அக்கடன்
வாராக்கடன் ஆகாதிருப்பது வங்கிநலன்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே வாங்கியகடனை
கட்டாமல் விடுவோம் எனல்.

முன்னுறக் காவாத வங்கியின் தன்பிழை
பின்னூறு வாராக்கடனாகி விடும்.

திட்டமுறை திருவினை யாக்கும் சேவையின்மை
இன்மை புகுத்தி விடும்.

சேவைத் தனைய வாடிக்கையாளர் அவர்தம்
வைப்புத் தனையது வங்கிஉயர்வு.

- ஜி.ஐ.லக்ஷ்மிகாந்தம்,
இந்தியன் வங்கி

# களிப்பு

# சாம்பியன்களின் சாம்பியன்!



வங்கித் துறையில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் அழுத்தமாகத் தடம் பதித்து வந்துள்ள இந்தியன் வங்கியை, 'சாம்பியன்களின் சாம்பியன்' என்றழைப்பது பொருத்தம். பல்வேறு விளையாட்டுகளில் தேசிய அளவிலும், ஏன் உலக அளவிலும் கூட இந்தியன் வங்கி ஊழியர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்கள் சிலரது அனுவங்கள்:

*சையது சபீர் பாஷா (பிரபல கால்பந்து சாம்பியன்):*

"தெற்காசிய விளையாட்டுகளின் போது (1996) நடைபெற்ற சம்பவம் இது. அணியின் இரண்டு ஸ்டிரைக்கர்களுள் ஒருவரான பூட்டியாவுக்கு அடிபட்டு விட்டதால், அடுத்து நடக்கவிருந்த இறுதிச் சுற்றில் அவரால் கலந்து கொள்ள முடியாத நிலை. அவசரமாக எங்கள் அணியைக் கூட்டினார் பயிற்சியாளர் அக்ரமொள (இவர் ஒரு ரஷ்யர்). 'நீதான் பூட்டியாவின் இடத்தில் ஆடப்போகிறாய். கோல் அடிக்கப் போவதும் நீதான்' என்றார் அவர் உறுதியுடன். எங்கள் அனைவருக்குமே அவர் இப்படித் தீர்மானமாகப் பேசியது மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது. பங்களாதேஷ் அணியோடு மோதிய இறுதிச் சுற்றில் நம் அணி ஒரே கோல் எடுத்து வென்றது. அந்த 'கோல்' என்னுடையது!

1995-ல் பெங்களூரில் ஒலிம்பிக்கின் முன்னோட்டப் பயிற்சிகள் அளிக்கப் பட்டன. அடுத்ததாக ஓமன் செல்ல வேண்டும். இந்த நிலையில், குர்டெக் சிங் என்பவருக்கும் எனக்கும் பயிற்சியின் போது காயங்கள் ஏற்பட்டன. தவிர, உள்ளூர் அணியோடு ஆடியபோதே எங்கள் அணி தோற்றுவிட்டது. இதனால் பயிற்சியாளருக்கு ஒரே கோபம். சில விளையாட்டு வீரர்கள் காயம் என்று சாக்கு சொல்லிக்கொண்டு பயிற்சிக் காலத்தில் நழுவி விடுவார்கள். எங்களையும் அப்படி நினைத்தோ, என்னவோ அவர், 'போய் விடுங்கள். உங்களுக்கு இங்கே இடமில்லை' என்று கத்தினார். மிகவும் வருத்தமாக இருந்தது. இடிந்து போன குர்டெக் சிங்கையும் சென்னையில் உள்ள என் வீட்டுக்கு

"மிகப்பெரிய வெற்றி
எதிர்பாராத தோல்வி -
இரண்டுமே
மறக்க முடியாதவை..."

அழைத்து வந்தேன். அடுத்த நாள் காலையில் அவர் பஞ்சாப் செல்ல முடிவு செய்து விட்டார். ஆனால், காலை செய்தித்தாளில் 'ப்ரீ-ஒலிம்பிக்ஸில்' கலந்து கொள்ளவிருக்கும் இந்திய அணியின் பட்டியல் வெளியாகி இருந்தது. அதில் எங்கள் இரு வரின் பெயர்களும் இருந் தன. அதே சமயம் துறை இயக்குநரிடமிருந்து தொலைபேசி அழைப்பு. 'பாதிப் பயிற்சியில் எப்படி நீங்கள் வெளியேறலாம்?' என்று மிகுந்த கோபத்துடன் கேட்டார். நடந்ததை விவரித்த போதும் அவர் சமாதானம் அடையவில்லை. 'கோபத் தில் கோச் ஆயிரம் சொல்வார். அதற் காக இப்படிச் செய்வதா?' என்றார். அலறி அடித்துக் கொண்டு திரும்பி பயிற்சி முகாமுக்கே ஓடினோம்.



அருள்செல்வி
டேபிள் டென்னிஸ்

***அருள் செல்வி (பிரபல டேபிள் டென்னிஸ் வீராங்கனை):***

கொல்கத்தாவில் நடைபெற்ற தேசியப் போட்டியில் தமிழ்நாடு அணியின் சார் பாக நான் கலந்து கொண்டிருந்தேன். மகாராஷ்டிராவைச் சேர்ந்த சைதாலி ஹதே என்ற பெண்ணை எதிர்த்து விளை யாடும்படி ஆனது. அதற்கு முன்பும் சரி பின்பும் சரி, பல முறை அவரை எதிர்த்து விளையாடியபோதெல்லாம், ஒவ்வொரு முறையும் நான்தான் ஜெயித்திருக்கிறேன். ஆனால் அந்தமுறை மட்டும் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவரிடம் தோற்றுவிட் டேன். இதுபோன்ற சந்தர்ப்பத்தில் வேறொரு சம்பவத்தை நான் நினைத்துக் கொள்வதுண்டு:

நியாதி ராய் என்பவருடன் 'இண்டர்-இன்ஸ்டிட்யூஷன்' போட்டியில் மோதி னேன். நியாதி ராய் மிகச் சிறந்த டேபிள் டென்னிஸ் வீராங்கனை. அர்ஜுனா விருது பெற்றவர். அப்போது நான் 'அன்ஸீடெட்' அளவில்தான் இருந்தேன். மும்பையில் நடைபெற்ற அந்தப் போட்டி யில் நான் வென்றது பரபரப்பை ஏற்படுத்தியது. 16 வயதில் நான் செய்த சாதனையும் இந்தியன் வங்கியில் நான் சேர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது.

***சி.வி.சன்னி (பிரபல கூடைப் பந்து சாம்பியன்)***

''வங்கிகளுக்கிடையேயான கூடைப்பந்துப் போட்டி. இறுதிச் சுற்று எங்கள் வங்கிக்கும் மற் றொரு வங்கிக்குமிடையே நடைபெற்றது. போட்டி முடிய இரண்டு, மூன்று நொடிகள்தான் இருந்தன. எதிரணி எங்களைவிட இரண்டு புள்ளிகள் அதிக மாக எடுத்திருந்தது. எங்கள் அணியைச் சேர்ந்த சரவணன் பந்தை மேலே எழுப்ப, நான் அதை 'ரிங்'கிற்குள் அனுப்பினேன். போட்டி நேரம் முடிந்ததற்கான விசில் ஒலித்த போது, இரு அணிகளும் சமமான புள்ளி களை எடுத்திருந்தன. இது புரியாமல் கேலரியில் இருந்த பலரும் எதிரணி யினர் வென்றதாகவே எண்ணி ஒருவருக் கொருவர் கை கொடுத்துக் குதூகலப்பட் டனர். பிறகு முடிவு தெரிந்தவுடன் அதிர்ச்சி அடைந்தனர்!



சையது சபீர் பாஷா
கால் பந்து







தேசிய கூடைப் பந்து போட்டியில் அப்போது கேரளா அணியில் இருந்தேன். காலிறுதிச் சுற்றில் தமிழ் நாடு அணியோடு மோதினோம். இன்னும் ஐந்து நொடிகளே உள்ளன என்ற நிலையில், எதிரணி மூன்று புள்ளிகள் அதிகமாக எடுத்திருந்தது. எங்கள் அணியைச் சேர்ந்த சுரேஷ் ஆப்கோர்ட்டிலிருந்து பந்தைக் கூடைக்குள் செலுத்தினார். நேரம் முடிந்தபோது இரு அணிகளும் சம புள்ளிகள் எடுத்திருந்தன. வழக்கத்தை மீறி அன்று மூன்று முறை மிகை நேரம் அளிக்கும்படி ஆனது!

தேசிய அளவில் கூடைப்பந்தில் தமிழக அணியை கேரள அணி முதன் முறையாக வென்றது. அப்போது கேரள அணியின் கேப்டனாக இருந்த நான், அடுத்த வருடமே தமிழ்நாட்டு அணிக்காக விளையாடத் தொடங்கியதும், முதல் முறையாக தமிழக அணி அப்போது கோப்பையைப் பெற்றது.

***என்.சுதாகர் பாபு (பிரபல செஸ் சாம்பியன்):***

அப்போதெல்லாம் ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமிடையே பல நட்புறவு செஸ் பந்தயங்கள் நடக்கும். ஒரு முறை அப்படிச் சென்றபோது பத்து வயது ரஷ்யச் சிறுவன் ஒருவன் பிரமிக்க வைத்தான். நடந்த அத்தனைப் போட்டிகளிலும் ஜெயித்தான். 'என் ஸ்கோர் அப்சொல்யூட்' என்றான். அப்போது இந்தியாவைச் சேர்ந்த பிரபல செஸ் விளையாட்டு வீரர் அருண் வைத்யா 'நானும் அப்சொல்யூட்தான்' என, எங்களுக்கு சிரிப்பு வந்துவிட்டது. காரணம், அவர் அந்த முறை ஒரு பந்தயத்தில்கூட ஜெயிக்கவில்லை. அந்தச் சிறுவன்தான் இன்று உலகப் புகழ் பெற்ற செஸ் விளையாட்டு வீரரான போரிஸ் கில்ஃபார்ட்.

'காலிகட்'டில் ஒரு ஹோட்டல் ரூமில் தங்கியிருந்தோம். ஒரு மதிய நேரத்தில் கிரிக்கெட் விளையாடிய போது பந்து பட்டு ஓர் அறையில் கண்ணாடி உடைந்துவிட்டது. ஹோட்டல் நிர்வாகம், செஸ் நிர்வாகிகளிடம் இதுகுறித்துப் புகார் செய்ய, நாங்கள் விசாரிக்கப்பட்டோம். அப்போது சுந்தர் கிடாமி அந்தப் பக்கமாக நடந்துவந்தார். அவரைச் சந்தேகத்துடன் பார்த்தபடி, 'நீங்கள் பந்து வீச்சு நிபுணரென்று




கேள்விப்பட்டிருக்கேன்' என்று தொடங்கினார் நிர்வாகி. சூழல் புரியாத அவர் கம்பீரமாக 'நான் ஓர் ஆல்ரவுண்டர். எல்லாச் சாதனைகளுக்கும் நானே பொறுப்பு' என்று கூற, அடக்கிக் கொள்ளமுடியாமல் விழுந்து விழுந்து சிரித்தோம்.

இவர்கள் அனைவருமே இந்தியன் வங்கி அளித்த ஆதரவை நன்றியுடன் நினைவு கூர்ந்தார்கள்.

# ஒவ்வொருவருக்கும் ஒரு வங்கிக்

**இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் திரு. எம்.எஸ்.சுந்தரராஜனின் நேர்காணலின்போது தன் வங்கிமீது அவருக்கு உள்ள ஆத்மார்த்தமான அக்கறை தெளிவாகவே புலப்பட்டது. சரளமாகவும் தெளிவாகவும் அவர் அளித்த விடைகள் இதோ:**

**செயல் இயக்குநராகப் பதவியேற்றவுடன் நீங்கள் எதற்கு முன்னுரிமை கொடுத்தீர்கள்?**

"அப்போது இந்தியன் வங்கி மிகவும் கரடுமுரடான பாதையைக் கடந்து கொண்டு இருந்தது. ஊழியர்களும் ஊக்கமிழந்து இருந்தனர். பழைய, கசப்பான அனுபவங்கள் காரணமாக புதிதாக எந்த ஒரு 'ரிஸ்க்'கும் எடுக்க அதிகாரிகள் மிகவும் தயங்கினார்கள். ஆனால் ஒரு வங்கிக்கு இலாபம் என்பது, கடன் கொடுத்து அதிலிருந்து பெறப்படும் வட்டியிலிருந்து கிடைப்பதுதான். ஆராயாமல் கொடுக்கப்படும் கடன் ஆபத்தானதுதான். ஆனால் அதே சமயம் கடன்கொடுப்பதையே நிறுத்திவிட்டால் அதுவும் வங்கிக்கு ஆபத்துதானே! எனவே ஆராய்ந்து எடுக்கப்பட்ட ரிஸ்க் (Calculated risk) என்பது செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றுதான் என்பதை உணர வைத்தேன். 'இப்படி முடிவுகள் எடுத்து நாளடைவில் எதிர்பாராத முறையில் அந்தக் கடன் திரும்பி வராவிட்டால் கூட நிர்வாகம், சம்பந்தப்பட்ட ஊழியருக்கு ஆதரவு அளிக்கும்' என்று நம்பிக்கை கொடுத்தோம்.

''மிஷன் ஸ்டேட்மெண்ட்'' ஒன்றை வடிவமைத்து வெளியிட்டோம். சாதாரண மனிதனுக்கு, வெளிப்படையான முறையில், அவனுக்குக் கட்டுப்படியாகும் விதத்தில் வங்கி என்னென்ன செய்யலாம் என்பதைத் தீர்மானித்தோம்.

> "பணமே இல்லாமல் கூட வங்கிக் கணக்கு துவங்கலாம்"

**இந்தியன் வங்கியை ஒரு சாதாரண மனிதனுக்கான வங்கியாகச் சித்திரிப்பது வணிக நோக்கில் உதவும் என்று நினைக்கிறீர்களா?**

"இன்றைய தேதியில் நம் நாட்டில் 70% பேர் வங்கிக்கணக்கே இல்லாதவர்கள் தான்! இவர்களை வங்கிக்குள் அழைத்து வரவேண்டும் என்பதுதான் என் நோக்கம். வங்கிக் கணக்கு துவங்குவதில் அவர்களுக்கு உள்ள தயக்கங்களில் முக்கியமானது கணக்கில் குறைந்தபட்சத் தொகையை வைத்திருக்க வேண்டும் என்பதுதான். இந்த நிபந்தனையை முதலில் நீக்கினோம்.

முதல் முறையாக "அனைவருக்கும் வங்கிச் சேவை" (FINANCIAL INCLUSION) என்ற திட்டத்தை எங்கள் வங்கி புதுச்சேரியில் அறிமுகப்படுத்தியுள்ளது. 'ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவருக்காவது வங்கிக் கணக்கு' என்பதை அங்கு எட்டி இருக்கிறோம்.

சொல்லப்போனால், பணமே இல்லாமல் கூட வங்கிக் கணக்கு துவங்கலாம். (NO FRILLS ACCOUNT) என்ற நிலையை அறிமுகப்படுத்தினோம். தேவைப்பட்டால் அந்தக் கணக்கில் ஓவர்டிராஃப்ட் கொடுக்கத் தயார் என்றும் அறிவித்தோம்.

சிறு கடன்களை வங்கியிலிருந்து பெறவும் தொடங்கி இருக்கிறார்கள். சுய உதவித் திட்டம் வேகமாகப் பரவி வருகிறது.

தவிர, கல்விக்கடனை அதிக அளவில் வழங்கத் தீர்மானித்திருக்கிறோம்.

**நிதி நெருக்கடி நிலைமையிலிருந்து இந்தியன் வங்கி முன்னேறுவதற்கு என்ன விதமான நடவடிக்கைகளை எடுத்தீர்கள்?**

# செயல் இயக்குநர் கணக்கு!

பழைய தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றோம். எங்கள் முன்னேற்றத்துக்கு, முக்கியமாக மூன்று பிரிவினரை நினைவு கூர வேண்டும்.

"நஷ்டத்தில் ஓடுகிறது. வங்கியை மூடி விடலாம்'' என்று முடிவெடுக்காமல் 2000-ல் ஒரு சீரமைப்புத் திட்டத்தை உருவாக்கிய எங்கள் ப்ரமோட்டர்கள்.

அடுத்ததாக, எங்கள் வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கை. நிதி நிலைமை மோசமாக இருந்த காலத்திலும் அவர்கள் தங்கள் டெபாசிட்களைத் திரும்ப எடுத்துக் கொண்டு விடவில்லை. மூன்றாவதாக, எங்கள் வங்கியின் ஊழியர்கள். ஒற்றுமையாக உழைத்து வங்கியின் முன்னேற்றத்துக்கு உதவினார்கள்.

இப்போது எங்கள் பாதை செம்மையாக இருக்கிறது. பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு மார்ச், 2006-ல் நிகர லாபம் கண்டிருக்கிறோம். 101 கோடி ரூபாய் அரசுக்கு டிவிடெண்ட் வழங்க முடிந்தது.



சேர்ந்துவிட்ட நஷ்டங்களைத் (Accumulated losses) துடைத்துவிட்டோம். பிப்ரவரி 5 அன்று எங்கள் வங்கியின் 20 சதவிகிதப் பங்குகள் பொது மக்களுக்கு விற்கப்பட்டன. 8,59,50,000 பங்குகள் இப்படி விற்கப்பட்டன. ஒரு பங்கின் விலை 91 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்தியன் வங்கியின் நூற்றாண்டு விழாவில் ஒரு கனவு நனவாகிறது என்பதில் மிகுந்த மகிழ்ச்சி.

**கடந்த பல வருடங்களாக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வேலை நியமனமே இல்லை. வங்கி ஊழியர்களின் சராசரி வயது என்பதே அதிகமாகிவிட்டது. இதைப் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

உண்மைதான். இந்தியன் வங்கி ஊழியரின் தற்போதைய சராசரி வயது 45 முதல் 47 வரை இருக்கலாம். ஆனால் வயதைவிட, மனதளவில் ஒருவர் இளமையானவரா, இல்லையா என்பது தானே முக்கியம்! தவிர, இன்றைய தேவை மதியூகமான பேங்கிங்; அதிக உழைப்பு தேவைப்படும் பேங்கிங் அல்ல. மிகத் தாமதமாக வங்கியிலிருந்து கிளம்பும் ஊழியர்தான் சிறந்த ஊழியர் என்று கருதிய காலம் போய்விட்டது. ஆக்கபூர்வமான யுக்திகளைச் செயல்படுத்துவதுதான் சிறந்த ஊழியருக்கு அழகு.

**இந்தியன் வங்கி வாடிக்கையாளர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

'இந்தியன் வங்கி உங்களுடைய வங்கி. உங்கள் தேவைகளை நிறைவேற்றுவோம்' என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறோம். தொடர்ந்து வளர உங்களது ஆதரவு தேவை. குடும்ப டாக்டர் என்பதுபோல் உங்கள் குடும்ப வங்கியாக இந்தியன் வங்கி இருக்கட்டும்; இருக்கும்.

கிழக்கு அபிராமபுரம் கிளையில் கணக்கு வைத்திருக்கும் சீனியரான சுந்தரேசன்,



வழக்கறிஞராக வலம் வந்தவர். இந்தியன் வங்கியின் மதிப்பு மிகுந்த வாடிக்கையாளர். அவர் சொல்கிறார்:

நான் ஐம்பதுகளிலேயே வங்கிக் கணக்கைத் துவக்கிவிட்டேன். வீட்டில்

கின்றன. குறைந்தபட்சம் கையினாலேயே குறிப்பிட்ட வரவு செலவுக்கான விவரங்களை அவர்கள் பதிவு செய்து கொடுக்க வழி செய்யலாமே!

வாடிக்கையாளரின் கவனத்தைத் திசை திருப்பிப் பணத்தைத் திருடும் போக்கு அதிகரித்து வருகிறது. எனவே நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.

கணினிகள் வந்த பிறகு வங்கியில் ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. எனவே இப்போதுள்ள ஊழியர்களின் வேலைச்சுமை அதிகரித்துவிட்டது. அவர்கள் திணறுவதைப் பார்க்க முடிகிறது. சில மேலைநாட்டு வங்கிகளில் ஊழியர்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை பத்து நிமிட கட்டாய இடைவேளை கொடுத்து, அவர்களுக்குச் சிறு கேளிக்கைகளும் உருவாக்குகிறார்கள். இங்கும் அதைப் பின்பற்றலாம்.

இவையெல்லாம் வங்கிச் சேவைகள்

# பிரகாசிக்கும் பர்சனல்

சும்மா இருக்கும் வருமானத்துக்கு வட்டி கிடைக்கட்டுமே என்ற எண்ணம்தான் காரணம். இப்போது நிறைய மாற்றங்கள் வந்துவிட்டன. பொதுவாக வங்கிகளுக்குச் சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்:

இப்போதெல்லாம் வங்கிகளுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. துப்பாக்கி ஏந்திய காவலர்களை வங்கிகளில் பார்ப்பது என்னவோ மாதிரி இருக்குது!

வங்கியில் கணினி என்பது வாடிக்கையாளர்களுக்கு வசதி என்கிறார்கள். ஆனால் அவ்வப்போது கணினிகள் செயலற்றுப் போய்விடு

மேலும் சிறப்பதற்கான என் ஆலோசனைகள்தான். மற்றபடி, இந்தியன் வங்கியின் சேவை எனக்குப் பிடித்திருக்கிறது. கிளையின் மேனேஜரும், பிற ஊழியர்களும் காட்டுகிற 'பர்சனல் டச்' குறிப்பிடத்தக்கது."

"இந்தியன் வங்கி இதுவரை என்னைக் காக்க வைத்ததில்லை..."

மயிலாப்பூரில் வசிக்கிறார் டி.ஏ.அருணாச்சலம். வங்கியின் மயிலை கிளையின் வாடிக்கையாளர். சந்தடி நிறைந்த பகுதியில் பழைமை மாறாத இல்லம் அவருடையது. வயது 92. ஆனால் கேட்டால் 86 ப்ளஸ் 6 என்கிறார். அதென்ன ஆறு? வேதபாடசாலையில் சேர்க்கும் போது வயதைக் குறைவாகக்

# மூத்தோர்

கொடுத்துவிட்டாராம் அவரது அப்பா! கணீரென்று பேசுகிறார்!

“அப்போ இண்டோ கமர்ஷியல் பேங்க்னு ஒரு வங்கி வீட்டுக்கு அருகிலேயே இருந்தது. நான்கூட அதில் நூறு ரூபாய் போட்டு இருந்தேன். அந்த வங்கி திவாலாகிவிட்டது. அதில் பணம் போட்டிருந்த எல்லாருக்குமே அதிர்ச்சி. பொதுவாகவே வங்கிகள் மீது ஓர் அவநம்பிக்கையும் உண்டாகத் தொடங்கியது. ஆனால் இந்தியன் வங்கியைப் பொருத்த



## டச்!



அளவில் மக்கள் தொடர்ந்து அதன் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த நம்பிக்கையை இந்தியன் வங்கியும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

கையிலே பணம் இருந்தா செலவாயிடுமே. அதுக்காகத்தான் வங்கியிலே கணக்குத் தொடங்கினேன். அதாச்சு... ரொம்ப ரொம்ப வருஷம்.

இன்றைக்கும் மயிலாப்பூர் கிளைக்கு நடந்தேதான் போவேன். ஒரு சிக்கலும் இல்லை.

இந்தியன் வங்கி இதுவரை என்னைக் காக்க வைத்ததில்லை. அவ்வளவு சிறப்பான சேவை!

இந்தியன் வங்கியைத் தொடங்கிய கிருஷ்ணசாமி ஐயர் மயிலாப்பூரைச் சேர்ந்தவர். அதனால் எங்கள் பகுதி வாசிகளுக்கு இந்த வங்கியின் மீது அந்தக் காலத்திலிருந்தே ஒரு பிடிப்பு உண்டு. அதற்குப் பாத்திரமாக இன்று வரை நடந்து கொள்கிறது வங்கி. ●

## நூற்றாண்டு விழா சின்னம்

'நம்பர் ஒன்' என்ற இலக்க வடிவமே தென்னிந்திய வங்கிச் சேவைப் பிரிவில் இந்தியன் வங்கி முதலிடத்தை வகிப்பதைக் குறிக்கிறது. நூற்றாண்டு காணும் தருணத்தில் சாமானியனின் வங்கியாக எதிர்காலத்தை வடிவமைப்பதை தனது இலக்காக்கிக் கொண்டிருக்கிறது இவ் வங்கி. விழா சின்னம் இதையே குறிப்பாக உணர்த்துகிறது.

## முதல் பங்குதாரர்!



அசப்பில் பார்த்தால் வீரபாண்டிய கட்டபொம் மனைப் போல இருக்கும் இந்த மீசைக்காரரின் பெயர் லாட் கோவிந்தாஸ் (Lodd Govindas) இந்தியன் வங்கியின் முதல் பங்குதாரர் இவர். அந்தக் காலத்துக்கு (1907) மிக மிகப் பெரிய தொகையான ரூ.25,000 செலுத்தி வங்கியின் முதல் இயக்குநர் ஆனார் இவர். எழுத்தாற்றல் மிக்கவர் கோவிந்தாஸ்.


அர்பத்நாட் என்ற பிரிட்டிஷ் வங்கி மிகவும் நொடித்துப் போய், அதில் பணம் போட்டிருந்த இந்திய மக்கள் இடிந்து போயிருந்த காலகட்டத்தில், இந்திய வங்கி ஒன்று தொடங்கப்படவேண்டியதன் அவசியத்தை பத்திரிகைகளில் வலியுறுத்திப் ஆணித்தரமாக எழுதினார். இதன் மூலமாக, சமூகத்தில் இக் கருத்து உருவாக்கம் பெற முக்கிய காரணமாக இருந்தார் கோவிந்தாஸ்.

நாட்டின் முதல் 'ட்ரைவ் இன்' (Drive In) ஏ.டி.எம். கிளையை (சென்னை ராயப்பேட்டை கிளை) அறிமுகப்படுத்தியது இந்தியன் வங்கிதான். தவிர, தனது மயிலாப்பூர் கிளையில் 'வாக் இன் (Walk In) ஏ.டி.எம். வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.



## முதன் முதலாக...





# செய்தி வங்கி

ஒரு வங்கியை நடத்த ஒரு மாதத்துக்கு சுமார் எவ்வளவு தொகை தேவைப்படலாம்? 1,950 ரூபாய். சந்தேகம் இருந்தால் இதோ ஆதாரம். மேற்படி பட்ஜெட்டில் விளம்பரச் செலவு, ஆடிட்டருக்கான கட்டணம் எல்லாமே அடங்கியுள்ளது.


இது 1908-ஆம் வருடக் கணக்கு!

Budget for the Half year ending 30th June 1908

| No | Item per month | Rs | as | ps | Remarks |
|---|---|---|---|---|---|
| 1 | Establishment | 1175 | - | - ✓ | |
| 2 | Postage | 35 | - | - ✓ | |
| 3 | Law Charges | 30 | - | - ✓ | |
| 4 | Rent | 200 | - | - ✓ | |
| 5 | Miscellaneous | 10 | - | - ✓ | |
| 6 | Printing | 50 | - | - ✓ | |
| 7 | Advertisement | 40 | - | - ✓ | |
| 8 | Telegrams & Telephone | 20 | - | - ✓ | |
| 9 | Director's fees | 300 | - | - ✓ | |
| 10 | Auditors fees | 25 | - | - ✓ | |
| 11 | Petty furnishing & lighting | 5 | - | - ✓ | |
| 12 | Brokerage & Commission | 10 | - | - ✓ | |
| 13 | Taxes | 60 | - | - ✓ | |
| | Total per month Rs | 1950 | - | - | |
| | Total for six months @ Rs 1950 a month | 11700 | - | - | |
| | Add Interest on Fixed Deposit of Rs 26,250 | 721 | 14 | - | |
| | Add unforeseen expenses | 300 | - | - | |
| | Total Rs | 12721 | 14 | - | |



குறைந்த வருமானம் கொண்ட சராசரி மனிதனுக்காக "பாரத் கடன் அட்டை"யை முதலில் அறிமுகப்படுத்தியது இந்தியன் வங்கி.



## மூன்று அம்புகள்

ஜூலை 1978-ல் இந்தப் புதிய சின்னம் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஒரு மையப்புள்ளி. அதைச் சுற்றி வட்டவடிவில் மூன்று அம்புகள். இந்த அம்புகள் சேமிப்பு, முதலீடு, இலாபம் ஆகியவற்றைக் குறிக்கின்றன. சேமிப்பு முதலீட்டுக்கு வழிவகுக்கிறது. முதலீடு வருமானத்துக்கு வழிவகுக்க, அது இலாபத்தைச் சட்டுகிறது. இலாபம் மீண்டும் சேமிக்கப்படுவதால் அதுவே மறுமுதலீடாகி அடுத்த சுற்றைத் தொடங்குகிறது.

வங்கிக் கிளை ஒன்றில் ஓரிரு மணி நேரம் செலவிட்டுக் கண்களையும் காதுகளையும் கூர்மையாக்கிக் கொண்டால் சுவாரஸ்யமான தகவல்கள் கிடைக்குமென்று தோன்றியது. இதற்காக இந்தியன் வங்கியின் கிண்டி கிளையைத் தேர்ந்தெடுத்தோம்.


சென்றால் வாக்கிங் சென்று வந்த பலன் கிடைக்கும்.

அறையில் அமர்ந்திருந்த மேனேஜர் திரு. நாயர் நம்மை அன்புடன் வரவேற்றார்.

மேனேஜரின் இருக்கைக்குப் பின்னே மிகப் பெரிய வால்போஸ்டர். அங்கே பூந்தோட்டத்தில் மலர்கள் சிரித்துக் கொண்டிருக்கின்றன.

''என் அறையின் கதவு எப்போதும் திறந்தபடிதான் இருக்கும். எந்த வாடிக்கையாளர் வேண்டுமானாலும் தாராளமாக உள்ளே வரலாம்'' என்றார்.

வந்தார்கள். முதலில் சீருடையில்



# கிண்டி கிளையில்

நெரிசலான தொழிற்பேட்டையில், மையத்தில் இயங்குகிறது இந்தியன் வங்கியின் கிண்டி கிளை. 1963 இறுதியில் துவங்கப்பட்ட கிளை. ஒரே தளம்தான். ஆனால் நீளம் அதிகம். ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு எட்டுமுறை நடந்து



ஓர் இன்ஸ்பெக்டர். கிண்டி கிளையின் வாடிக்கையாளர். இப்போது வேறு இடத்துக்கு மாற்றல் ஆகிவிட்டதால், அவ்வளவாக வரமுடியவில்லையாம். தம்முடைய பாஸ்புக்கை அப்டேட் செய்து தரக் கோரினார். ஐந்து வருடங்களாக இதைச் செய்யத் தவறிவிட்டாராம்!

அடுத்து இரு வாடிக்கையாளர்கள். காலம் கடந்தும், கடிதங்கள் அனுப்பியும் கடன் பாக்கியைக் கட்டாததால் அவர்களது சொத்து ஏலத்தில் விடப்படும் என்று தெரிவிக்கப்பட, வேகமாக வந்திருந்தார்கள். விளக்கம், வேண்டுகோள், ஆவன செய்யப்படும் என்ற உறுதிமொழி... பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன.

மேனேஜர் அறைக்குள் சின்னதாக ஒரு டி.வி. களைப்படையும்போது கண்டு ரசிக்கவா? இல்லை. அது ஒரு 'க்ளோஸ்டு

சர்க்யூட் டீவி.' கிளையில் பல பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களை அறைக்குள்ளிருந்தே பார்க்க முடியும். "பொதுவாக ஒரு வாடிக்கையாளர் பதினைந்து நிமிடங்களுக்குள் தன் வேலையை முடித்துக்கொண்டு கிளம்பிவிட முடியும். மிக அதிக நேரம் ஒரு வாடிக்கையாளர் நிற்கிறார் என்பதை இதன் மூலம் கண்டறிந்தால், நான் அதன் பின்னணியை விசாரிப்பேன்'' என்றார் மேனேஜர்.

வங்கியின் அறிவிப்புப் பலகையில், வெளியான முதல் நாளே இந்தியன் வங்கியின் பங்குகள் ஓவர்சப்ஸ்கிரைப் செய்யப்பட்ட நாளிதழ் செய்தி



# ஆக்ஷன்

கிறதாம். ''முப்பது நிமிஷத்திலே கிடைச்சிடும்.

> "எந்த வாடிக்கையாளர் வேண்டுமானாலும் தாராளமாக உள்ளே வரலாம்..."

# ஒரு நாள்...



காணப்பட்டது.

**வ**ரைவோலை (அதுதாங்க டிமாண்ட் ட்ராஃப்ட்) வாங்க வந்திருந்தார் ஒருவர். மின்வாரியத்துக்கு ஏதோ லைசன்ஸ் பெறுவதற்குத் தேவைப்படு




அப்படித் தானே போட்டிருக்காங்க'' என்றார்.

கிளையின் அறிவிப்புப் பலகையில் சில கால வரையறைகள் குறிப்பிடப் பட்டிருந்தன:

வரைவோலை பெற... 30 நிமிடங்கள் என்றது வாசகம்...

காத்திருந்தவருக்கு 25 நிமிடங்களில் வரை வோலை வந்து சேர்ந்தது!

**கி**ளையில் பாது காப்புப் பெட்டகங்கள் உண்டு-ஆனால் மிகக் குறைவாக-கிண்டி தொழிற் பேட்டை பகுதி என்பதால் இந்த வசதியைக் கோருவோர் அதிகம் இருக்க வாய்ப்பில்லை என்கிற காரணத்தால். ஆனால் நடப்புக் கணக்குகளைப் போல பல மடங்கு அதிகமாகச் சேமிப்புக் கணக்குகள் இருப்பது மட்டுமே எப்படி? காரணம் இதுதான்: ஒரு நிறுவனம் தன் கணக்கைத் துவக்கினால் அதன் பல ஊழியர்களும்கூட இங்கு கணக்கு துவக்குகிறார்கள். பல நிறுவனங்கள்



ஊழியர்களின் சம்பளத்தை அவர்களது சேமிப்புக் கணக்கில் மாதா மாதம் டெபாசிட் செய்து விடுகின்றன.

**கி**ளையின் மற்றொரு பகுதியில், வேறொரு ஊழியர் "அடடா, இவர் கணக்கிலே செக் பவுன்ஸ் ஆனதே இல்லையே. இன்னைக்கு மட்டும் கணக்கிலே பாக்கி இருக்கிற தொகை யைவிட அதிகமாக செக் கொடுத்திருக் கிறாரே. ஃபோன் போட்டுச் சொல் லணும்" என்று கூறிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது.

ஒரு வாடிக்கையாளரின் செல் ஃபோனிலிருந்து மிகக் கடூரமான ஒரு பாடலின் இசை (அவருக்கு அது தேன்!) ரிங் டோனாக வெளிப்பட, நோட்டுகளை எண்ணிக் கொண்டிருந்த காசாளரின் கவனம் சிதறிப் போய் மீண்டும் எண்ணத் தொடங்கினார்!

மிகவும் ஒடுங்கிப்போன ஒரு வயதான மூதாட்டியிடம் "எதுக்காக இந்த வெயில்லே வந்தீங்க?" என்று ஒருவர் கரிசனத்துடன் கேட்க, "இப்படி வந்து நான் உயிரோடு இருப்பதை நிரூபிச்சால் தானே பென்ஷன் கிடைக்கும்!" என்றார் அந்தப் பாட்டி வெறுமையுடன். வேறொன்றும் இல்லை, அந்த மூதாட்டி பென்ஷன் பெறுவதற்கான 'லைஃப் சான்றிதழை'க் கொடுத்து விட்டுப் போக வந்திருந்தார்!

தமது கணக்கிலிருந்து பணம் எடுக்க வந்திருந்த ஒரு பெண்மணியிடம் "இதே வங்கியின் ஏ.டி.எம். மையம் வெளியிலே இருக்குதே. அதிலேயிருந்து நீங்க இன்னும் சீக்கிரம் பணத்தை எடுக்க லாமே. ஒருவேளை ஏ.டி.எம். அட்டை இல்லையோ?" என்று கேட்டோம்.

"அதெல்லாம் இருக்கு. ஆயிரம் இருந்தாலும் மனுஷங்களைப் பார்க் கறதுக்கு ஈடாகுமா? தவிர, வெயிலுக்கு இதமா பத்து நிமிடம் இங்கே உட் கார்ந்துட்டுப் போகலாமே" என்று பதில் வந்தது.

உண்மைதானே, ஏ.டி.எம். புன்னகை செய்யாது; "பையன் பிளஸ் டூ நல்லா எழுதினானா?" என்றோ, "மாமியாருக்கு உடம்பு தேவலையா?" என்றோ விசாரிக்காது; பிஸினஸ் கிளை பரப்பி னால் ட்ரீட் கேட்டு தட்டிக் கொடுக் காது... இதையெல்லாம் ரசிக்கவும் அனுபவிக்கவும்கூட வங்கிக்கு வருவோர் ஏராளம். அதை இந்தியன் வங்கியின் கிண்டி கிளையில் பார்க்க முடிந்தது.



இணைப்புக் கட்டுரைகள்: ஜி.எஸ்.எஸ்.
அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி

# சிரிப்பு

## ஆஹா ஏ.டி.எம்.!





– [illegible], இந்தியன் வங்கி



"கடன் கொடுக்கணும்னா, செக்யூரிட்டி வேணுமே..."
"இதோ எங்கள் காலனியின் செக்யூரிட்டி."



கேஷியர் : என் கௌன்டரி லிருந்தும் பணத்தை எடுத்துக் கோப்பா...
திருடன் : கேட்காமலே கொடுக்கறே...?
கேஷியர் : இரண்டு மணி நேரமா அல்லாடியும் கணக்கு டாலி ஆகாம உதைக்குது. அதுதான்...! ஹி...ஹி...



"எங்க வங்கி அதிகாரி யாரையும் இலேசுல நம்ப மாட்டாரு..."
"எப்படிச் சொல்றே?"
"தன்னுடைய காசோலையில் உள்ள கையெழுத்தைக்கூட வங்கியிலே இருக்கிற தன்னுடைய மாதிரிக் கையெழுத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பாரு..."



"மானேஜர் சார், உங்கள் ஊழியர் எனக்குச் செக் புக் தரமாட்டேன்னு அடம் பிடிக்கிறார்."
"அப்படியா? ஆச்சரியமா இருக்கே!"
"ஆமாம். முதல்லே ஒரு கணக்கை ஆரம்பிக்கணும்னு சொல்றார்."

100th YEAR
Indian Bank
Since August 15,1907




“நான் சைதாப்பேட்டை கிளையில் பணியாற்றியபோது ஓய்வூதியத் துறையில் அதிகாரியாகப் பொறுப்பேற்றிருந்தேன். தொடக்கத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களைக் கையாளுவது கஷ்டமான காரியம் என எண்ணியிருந்தேன். ஆனால் அது இந்த அளவுக்கு மனத்தை உருக்கும் அனுபவமாக இருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கவேயில்லை. ஓய்வூதியம் பெறுபவர்களோடு நான் பழகிய அந்த சுமார் இரண்டு வருடங்களில் வாழ்க்கையின் பல முகங்களை அறிந்துகொள்ள நேர்ந்தது.

என்னைப் போல இரண்டு மடங்குக்கும் அதிகமான வயதானவர்களோடு பழக வேண்டியிருந்தது. சிலரது குழந்தைகள் வெளிநாடுகளில் செழிப்பாக வாழ, இவர்கள் மட்டும் தனிமையில் இருக்க வேண்டிய கட்டாயம். வேறு சிலருக்கோ மகனும் மகளும் கூடவே இருந்தார்கள். ஆனால் பெற்றோரைவிட அவர்களது பென்ஷனிலேயே அதிகப் பாசம் கொண்டிருந்தார்கள் அவர்கள்! இந்த இரு தரப்புப் பெற்றோருமே பேசுவதற்கும், பேசுவதைக் கேட்பதற்கும் யாராவது இருக்க மாட்டார்களா என்று ஏங்கினார்கள். வங்கிக்கு வருவதும், வங்கி ஊழியர்களோடு பேசுவதும் அவர்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

“வங்கிக்கு வருவதும், வங்கி ஊழியர்களோடு பேசுவதும் பெரும் ஆறுதல்...”

ஓய்வூதியப் பிரிவிலிருந்து நான் வேறு பிரிவுக்கு மாற்றலானேன். அது தெரிந்த பிறகும், எழுபது வயதைத் தாண்டிய ஒரு முதியவர் தமது ‘லைஃப் சான்றிதழ்’ (அதாவது தாம் இன்னமும் உயிரோடு இருப்பதை வங்கிக்கு அறிவிக்கும் ஆவணம் இது. இதை வருடந்தோறும் அளித்தால்தான் ஓய்வூதியம் தொடர்ந்து கிடைக்கும். என்னிடமே கொண்டு வந்து கொடுத்தார். "கடந்த இரண்டு வருடங்களாக உன்னிடம்தான் இந்தச் சான்றிதழைக் கொடுத்திருக்கிறேன். இன்னமும் உயிரோடு இருக்கிறேன். இந்த முறையும் உன் கையிலேயே இதைக் கொடுத்தால் அடுத்த வருடமும் இதேபோல் வங்கிக்கு உயிரோடு வருவேன் என்று ஒரு நம்பிக்கை!" என்றார்! இந்த செண்டிமெண்ட்டில் திகைத்துப் போனேன்.

வாடிக்கையாளர்கள் சில சமயங்களில் தங்கள் குடும்ப விழாக்களுக்கு வங்கி ஊழியர்களை அழைப்பார்கள். தமது பேத்தியின் திருமணத்துக்கு என்னை ஒரு முதியவர் அழைத்தார். அந்த விழாவுக்கு நான் சென்றிருந்தபோது

## கனிவு

அவருக்குத் தாங்க முடியாத சந்தோஷம். தன்னுடைய எல்லா உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என்னை அறிமுகப் படுத்தினார். 'என் மீது அக்கறை கொண்டு எனக்காகச் சிறிது நேரம் செல வழிக்கவும் சிலர் இருக்கிறார்கள்' என்பதைப் பிறருக்கு அவர் உணர்த்துவதாகப் பட்டது. இந்தியன் வங்கி குறித்து மிகவும் உயர்வாக அவர் பேசுவார் என்று அவருடைய பேத்திகள் என்னிடம் தெரிவித்தனர்.

என்னதான் பணம், இலாபம் என்பதையே குறியாகக் கொண்ட காலத்தில் நாம் வாழ்ந்தாலும், மனித உறவுகளும் முக்கியமானவைதாம். நம் வங்கியின் இந்த நூற்றாண்டு விழா நேரத்தில் அதை நினைவில் கொள்வோமே! வங்கி ஊழியர்களான நாம், பரிவும் கருணையும் பெற ஏங்கும் உள்ளங்களுக்குக் கை கொடுக்க முன் வருவோம். அதற்கான வாய்ப்புகள் நம் பணியிலேயே நிறைய காத்துக் கிடக்கின்றன என்பது எவ்வளவு அழகான விஷயம்!

- சுசீலா பார்த்தசாரதி,
இந்தியன் வங்கி

# மனிதர்களும் முக்கியம்தான்!



# "மாற்றங்களை

**இளைய தலைமுறை, வங்கிகளிடம் என்ன எதிர்பார்க்கிறது? அறிந்து கொள்வதற்காக ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. பங்கேற்றவர்கள் - எம்.எஸ்.சரத் (இண்டீரியர் டெக்கரேஷன் துறை), விக்ரம் விஜயராகவன் (மென்பொருள் நிறுவன மேனேஜர்), அனீஷ் பிரகாஷ் (ஸ்ட்ரக்சுரல் என்ஜினியரிங் ஆலோசகர்)**

**சரத்:** முதலில் ஒன்றைச் சொல்லிவிட வேண்டும்... என் எதிர்பார்ப்பைச் சொல்வதால் இப்போதுள்ள வங்கிகளின் சேவைகளில் குறைபாடுகள் உள்ளன என்றோ அவர்களிடம் நமக்கு ஏதோ பெரும் ஏமாற்றம் என்பதோ இல்லை. ஓ.கே.வா...?

**விக்ரம்:** ஆமாம். எதிர்பார்ப்பது மனித இயல்பு - அதுவும் புதிய தேவைகள் ஏற்படும்போது அல்லது மாற்றங்கள் நிகழும்போது எல்லாம் வேகமாக நிகழ வேண்டும் என்று மனம் ஆசைப்படுகிறது.

**சரத்:** எனக்குக் கீழே பணியாற்றுபவர்களுக்கு ஊதியம் அளிக்க, வாரத்துக்கு ஒரு முறை வங்கியிலிருந்து பணம் எடுக்க வேண்டியிருக்கிறது. வங்கிகளின் பணி நேரம், முன்பைவிட அதிகம் ஆகி இருப்பது உண்மை. ஆனால் இது மேலும் அதிகமாக்கப்பட்டால் வசதியாக இருக்கும்.

**கல்கி:** வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை எடுக்க ஏ.டி.எம். வசதி இருக்கிறதே. 24 மணி நேரமும் இதிலிருந்து பணமெடுத்துக் கொள்ள முடியுமே!

**சரத்:** ஒரு நாளைக்கு அதிகபட்சம் இவ்வளவு தொகைதான் எடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு அதில் உண்டே! தவிர, சமீப காலத்தில் ஏ.டி.எம். சம்பந்தப்பட்ட ரிஸ்குகளைப் பற்றிப் படிக்கும்போது இன்னும் தயக்கம் ஏற்படுகிறது.

**அனீஷ்:** சில விஷயங்களிலாவது கருவிகளுக்குப் பதிலாக மனிதர்களோடு இயங்குவோமே...

**விக்ரம்:** ஆமாம்; வங்கி ஊழியர்களோடு நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது பல விதங்களில் சௌகரியம். சில நாடுகள் மாதிரி நம் நாட்டிலும் 24 மணி நேர வங்கிகள் திறந்தால் என்ன...? மேலும், கடன், கடன் அட்டை போன்ற விஷயங்களில் தனியார் வங்கிகள் வசூலிக்கும் சேவைக் கட்டணங்கள்



• சரத்



• விக்ரம்

## முன்னேற்றப் பாதை

# எதிர்பார்க்கிறோம்..."

அதிர்ச்சியூட்டும்படி இருக்கின்றன. கேட்டால் விண்ணப்பத்தில் மிகவும் பொடி எழுத்துக்களில் அச்சிடப்பட்ட வாக்கியத்தைக் காட்டுவார்கள். நல்ல வேளையாக, இந்தியன் வங்கி போன்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இப்படியெல்லாம் செய்வதில்லை.

**சரத்:** உண்மைதான். தனியார் வங்கிகளில் அடகுக்கடை போலதான் நடந்து கொள்கிறார்கள். குறித்த காலத்துக்கு முன்பாகவே கடனைக் கட்டிவிட்டால் அதிர்ச்சி அடைகிறார்கள்!

**விக்ரம்:** 'ஆன் லைன் டிரான்ஸாக்ஷன்ஸ்' எனப்படும் கம்ப்யூட்டரிலேயே நம் கணக்கைச் சரி பார்த்துக் கொள்ளும் நவீன தொழில்நுட்பத்தில், தனியார் வங்கிகள் மிகவும் முன்னேறி விட்டன. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நம் கணக்கின் விவரங்களைக் கம்ப்யூட்டரில் பார்க்கும்போது பல தகவல்களை உடனுக்குடன் உறுதி செய்துகொள்ள முடிகிறது.



• அனீஷ்

**சரத்:** கம்ப்யூட்டர்களை வங்கிகள் மிகவும் நம்புவது இலேசான பதற்றத்தைத் தருகிறது. நடுவே ஏதாவது தவறாகப் போனால்? எந்த நிமிடமும் சிஸ்டம் 'ஹாங்' ஆகிவிடுமோ என்றும் பயம் ஏற்படுகிறது. தவிர, சில சமயங்களில் வங்கிகளிடமிருந்து எதிர்பாராத சிக்கல்கள் ஏற்படக் கூடுமோ என்று தோன்றுகிறது. முன்பு ஒரு பிரபல தனியார் வங்கி இன்னொரு வங்கியோடு இணைந்த போது, வாடிக்கையாளர்களால் தங்கள் கணக்கிலுள்ள தொகையை நினைத்த அளவுக்கு எடுக்க முடியாதபடி கொஞ்ச காலத்துக்கு ஃப்ரீஸ் செய்து விட்டார்கள்.

ஒருமுறை வீட்டுக் கடனை இந்தியன் வங்கியிடம் வாங்க முடிவெடுத்தேன். இரவு எட்டரை மணிக்கு அந்தப் பக்கம் போனபோது வங்கியில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. உள்ளே சென்றேன். மேனேஜரிடம் கடன் தொடர்பாக விளக்கமாகப் பேச முடிந்தது. மேனேஜர் ஒரு பெண்மணி என்பதும்

> "பாதுகாப்பு லாக்கர்கள், ஷேர் ஆலோசனை போன்ற துணை சேவைகள் நிச்சயம் தேவை."

100 YEAR CHARTING THE FUTURE
Indian Bank
Since August 15, 1907

குறிப்பிடத்தக்கது. இந்த அளவு சுதந்திரமான போக்கைத் தனியார் வங்கிகளில் பார்க்க முடியுமா?

**விக்ரம்:** ஆனால், தனியார் வங்கிகளிடமிருந்து கடும் போட்டியை தேசிய வங்கிகள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்

> "மேனேஜரிடம் விளக்கமாக பேச முடிந்தது."



என்றே தோன்றுகிறது. ஆனால் சில தனியார் வங்கிகள் கண்ட நேரங்களில் கடன் வேண்டுமா என்று தொலைபேசியில் நச்சரிப்பது மிகவும் எரிச்சல் தருவதாக இருக்கிறது என்பதையும் சொல்ல வேண்டும்.

**அனீஷ்:** 'கோர் பேங்கிங்' என்பதை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். இதனால் வங்கியுடன் உள்ள 'பர்சனலைஸ்டு உறவு' மிகவும் மாறி வருகிறது. சில சமயங்களில் கணக்கில் பணம் இருப்பதாகக் கருதி காசோலையை ஒருவருக்கு அளிப்போம். கணக்கில் ஏதோ காரணத்தினால் போதிய பணமில்லையென்றால் முன்பெல்லாம் வங்கியிலிருந்து தகவல் கிடைக்கும். உடனடியாகப் பணத்தைக் கட்டி விடுவோம். கோர் பேங்கிங்கில் இதற்கெல்லாம் வழி இருப்பதாகத் தெரியவில்லை. போதிய பணமில்லையென்றால் உடனடியாக காசோலை திருப்பி அனுப்பப் படுகிறது. இதனால் மிகுந்த மன உளைச்சல் ஏற்படலாம்.

**சரத்:** கோர் பேங்கிங் அறிமுகமான கிளைகளில் அது தொடர்பான விவரங்களை விளக்குவதற்கென்று ஓர் ஊழியரை நியமித்தால் நன்றாக இருக்கும்.


**விக்ரம்:** டெபாசிட், கடன் என்ற இரண்டையும் தாண்டி பிற சேவைகளிலும் வங்கிகள் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டன.

**அனீஷ்:** பாதுகாப்பு லாக்கர்கள், ஷேர் ஆலோசனை போன்ற இந்தத் துணை சேவைகள் ("ஆன்ஸிலரி சர்வீ

> "நம் நாட்டிலும் 24 மணி நேர வங்கிகள் திறந்தால் என்ன?"



சஸ்') நிச்சயம் தேவை. இதுபோன்ற பிரிவுகளில் சிறந்த சேவைக்கு அதிகக் கட்டணம் தரவும் வாடிக்கையாளர்களாகிய நாங்கள் தயார்!



**விக்ரம்:** வாடிக்கையாளர்களுக்கு இந்தச் சேவையைக் குறைந்த கட்டணத்தில் தருவது தான் நியாயம்.

**அனீஷ்:** வேலைப் பளுவினாலோ என்னவோ சில சமயங்களில் ஊழியர்களும் கடுமையாகவே இருக்கிறார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கொஞ்சம் கடுமையாகக் காணப்பட்டாலும் நமக்கு வேண்டியதைச் செய்து கொடுக்கிறார்கள். தனியார் வங்கியில் புன்னகைத்தபடியே நமக்கு வேண்டியதைத் தள்ளிப் போடுவார்கள்! தேசிய வங்கிகளில் அனுபவசாலிகள் அதிகம் இருப்பதால் அவர்களால் வாடிக்கையாளர்களின் தேவையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

தனியார் வங்கி ஒன்றில் கடன் வாங்கச் சென்றிருந்தேன். ஆனால் அதற்காக அவர்கள் செய்த கெடுபிடிகள், கடைபிடித்த சடங்குகளைக் கண்டதும் உடனே வேண்டாம் என்று வந்துவிட்டேன்!

**விக்ரம்:** தனியார் வங்கிகளில் வேறொரு விசித்திரமும் உண்டு. ஒரு மாதம் அமைதியாக இருப்பார்கள். வெளிநாட்டிலிருந்து நம் கணக்கில் ஏதாவது வரவு வந்தால் போதும்; அரை மணி நேரத்துக்கு ஒருமுறை டெபாசிட்டுக்காக நச்சரிக்கத் தொடங்கிவிடுவார்கள்! தேசிய வங்கிகளில் இப்படி இருப்பதில்லை என்பது ஆறுதல்...!

**அனீஷ்:** இலண்டனில் உள்ள வங்கிகளில் நுழைந்தவுடன், "மே ஐ ஹெல்ப் யூ?" என்று யாராவது நிச்சயம் கேட்பார்கள்.

**விக்ரம்:** கலிபோர்னியாவில் உள்ள வங்கிகளுடன் எனக்குப் பரிச்சயம் உண்டு. பெரும்பாலும் ஆன்லைன் முறையில் கணினியில்தான் கணக்கில் வரவு செலவு நடைபெறுகிறது. எனவே ஏதாவது விசாரிக்கத்தான் வங்கியை அணுகுவார்கள் வாடிக்கையாளர்கள். விதிகளில் மிகவும் ஸ்ட்ரிக்டாக இருப்பார்கள். இது சில சமயங்களில் நமக்கு வசதியில்லாமல் போகும். ஆன்லைனில் நம் கணக்கை ஸ்கான் செய்து கொள்ள முடியும் என்பதால் பாஸ் புக், ஸ்டேட்மெண்ட் என்பதற்கெல்லாம் அவசியமே இல்லாமல் போகிறது. அங்கெல்லாம் விடுமுறை நாட்களில் வேலை செய்வது, வங்கி நேரத்தை அதிகரிப்பதென்பது இல்லை. அங்கே கடன் அட்டை கலாசாரம் மிகவும் பரவலாகிப் போனது இதற்கு ஒரு முக்கிய காரணம்.

> "இரவிலும் வங்கிக் கிளைகள் இயங்கலாமே!"

**அனீஷ்:** இங்கேயும் இப்போது இரவில் பணி செய்வது என்பது அதிகமாகிவிட்டது. கால்சென்டர்கள் இரவில்தானே துடிப்பாக இயங்குகின்றன. எனவே இரவுகளிலும் ஒவ்வொரு வங்கியின் சில கிளைகளாவது இயங்குவது அவசியம்.

**சரத்:** பிற நாட்டு வங்கிகளோடு நம் வங்கிகளை ஒப்பிடுவது சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. நம் நாடு குறைந்த கல்வியறிவு, அதிக மக்கள் தொகை, இன்னமும் வங்கிகளை அதிகம் பயன்படுத்தாத மக்கள் - இப்படிப் பல விதங்களில் மேலை நாடுகளிலிருந்து வேறுபடுகிறது. எனவே நமக்கே உரிய முறைகள் என்னென்ன என்று ஆராய்ந்து, முடிவுக்கு வந்து, அவற்றுக்கேற்ப வங்கிகள் செயல்படுவதுதான் சரியாக இருக்கும். ●

# கிராமத்து

தாமிரபரணிக் கரையில் தென்காசிச் சாரலில் ஒருநாள், கிராமத்துக்காரர் ஒருவர் சேமிப்புக் கணக்கு திறக்க வந்தார்.

"பேரு என்னங்க?"



"அறியாப்பிள்ளை!"

"ஊரு?"

"கூனியூரு!"

விவரங்கள் அனைத்தையும் நிரப்பி விட்டு கையெழுத்துப் போடச் சொன்னேன். "இவ்வளவையும் எழுதினீருல்லே... கையெழுத்தையும் நீரே போட்டுருமே!" என்றார்.

"ஒருத்தர் கைஎழுத்த அடுத்தவர் போடக் கூடாதுங்க"- இது நான்.

"அப்பிடியா? இத மொதல்லியே சொல்லியிருக்கக் கூடாதா?" என்றவரிடம் பேனாவை எடுத்துக் கொடுத்தேன்.

"கை நாட்டுதான் போடுவேன்" என்றார் கிராமத்தார்.

"அப்படியா? அப்ப மூணு போட்டோ எடுத்து வரணும்" என்றேன் நான்.

மூன்றாம் நாள் வந்தார். அவர் கொண்டு வந்த படங்களில் அவரது கைரேகை படம் பிடிக்கப்பட்டிருந்தது!

அதன் பிறகு தற்காலிக ஊழியர் ஒருவரை அவருடன் அனுப்பி நிழற் படம் எடுத்ததெல்லாம் நிழலல்ல நிஜம்!




"அம்மா கையெழுத்த புள்ள போடப்படாதுன்னு எந்தச் சட்டம்யா சொல்லுது?"

குட்டி குவைத் என்று பட்டப்பெயர் அழகப்பபுரத்துக்கு. அவ்வூரைச் சேர்ந்த

எண்பது சதவிகிதம் பேர் குவைத்தில் வாழ்கிறார்கள்!

"டிராக்டர் லோன் கேக்கிறீரே... எப்படி கட்டுவீர்?"- மேலாளர்.

"டிராக்டரை ஏஞ்சாமி கெட்டணும்... அது என்ன ஆடா... மாடா... ஓடிப் போறதுக்கு..! ஆஃப் பண்ணிவுட்டா அதுபாட்டுக்கு நிக்காதா?" - இது குடிகார விவசாயியின் பதில்.

"ஏஞ்சாமி ஆட்டுக்கு, மாட்டுக்கெல் லாம் கடன் குடுப்பியளா?" - மீண்டும் குடிகாரர்.

"இல்ல மனுஷங்களுக்கு மட்டுந்தான் லோன் குடுப்போம்''-இது மேலாளர்!

# அனுபவங்கள்!

**ம**களிர் சுய உதவிக் குழுவினர் கொண்டு வந்த தீர்மானத்தில் சில கையெழுத்துகள் வித்தியாசமாக இருந் தன. விளக்கம் கேட் டேன். அந்தப் பெண் களின் குழந்தைகள் போட்ட கையெழுத்து என்று தெரிந்தது. திருப்பி அனுப்பிவிட்டேன்.

''இது என்ன அநியாயமாப் போச்சு... அம்மா கையெழுத்த புள்ள போடப்பிடாதுன்னு எந்தச் சட்டம்யா சொல்லுது? நான் குடுத்த பாலக் குடிச்சு வளர்ந்த புள்ளைக்க என் கையெழுத்தப் போட உரிமையில் லையா...?'' கையில் வேப்பிலை இல்லாமல் காளியாய் மாறிய அந்த அம்மாவிடமிருந்து என்னைக் காப்பாற்றிய தட்சிணாமூர்த்திக்கு நன்றி!

- ஏ.சுந்தரம்,
இந்தியன் வங்கி



## முதன் முதலாக...



**ச**ர்வதேச கியோஸ்க் மையங்களை (EID பாரி நிறுவனத்துடன் இணைந்து) முதன்முதலாக இந்தியன் வங்கி நிறுவியது. கரும்பு விவசாயிகளுக்கு தினசரி விளைச்சல் குறித்த விவரங்களை அளிப்பது. விண்ணப்பங்களையும் ஆவணங்களையும் நிரப்ப உதவுவது போன்றவற்றில் இந்தியன் வங்கி உதவிக் கரம் நீட்டியது. இதன் காரணமாக அவர்களால் தங்களுக்குத் தேவைப்படும் கடனுதவி மற்றும் தொழில்நுட்பம், சந்தை, விவசாயப்பொருள்களின் மாறுதல்கள், தட்பவெப்பநிலை ஆகியவை குறித்த துல்லியமான விவரங்களையும் பெற முடிந்தது.

# உதவ ஓடிவரும்




**வ**யது 23. ஆனால் விஜயலட்சுமி பார்ப்பதற்கு பதினைந்து வயது பெண்போலவே தோற்றமளிக்கிறார். அவருடைய அம்மா பத்மா, "இவளுக்கு எட்டு மாதம் ஆனபோது காய்ச்சல் கடுமையாக இருந்தது. அப்போது கும்பகோணத்தில் உள்ள என் அம்மா வீட்டுக்குப் போயிருந்தேன். அங்குள்ள டாக்டரிடம் கேட்டபோது சோதனை செய்துவிட்டு "உங்க மக உடம்பிலே போதிய ரத்தமே இல்லே. உடனடியாக தஞ்சாவூர் மருத்துவமனைக்கு அழைச்சிட்டுப் போங்க" என்றார்.

சென்னைக்கு அழைச்சுட்டு வந்து டாக்டர்கள் கிட்டே காண்பித்தோம். அப்போதுதான் இவளுக்குத் தலசீமியா என்ற கொடிய நோய் இருப்பது தெரிய வந்தது. உடலில் போதுமான அளவு ஹீமோகுளோபின் இல்லை என்பதால், மாதத்துக்கு ஒரு முறையாவது உடம்பில் ரத்தம் ஏற்றிக்கொண்டே இருக்க வேண்டிய நிலைமை. முதலில் எழும்பூரிலுள்ள அரசு மருத்துவமனையிலும் பிறகு அடையாறில் உள்ள வி.எச்.எஸ்.ஸிலும் ரத்தம் ஏற்றி வந்தோம். தொடக்கத்தில் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ரத்தம் கொடுக்க வேண்டியிருந்தது. இப்போது மாதத்துக்கு ஒருமுறை."

"கொடுக்கலேன்னா?"

"உடனே சாப்பாடு குறையும்; சோர்ந்து போயிடுவா" என்றார்.

**வி**ஜயலட்சுமி தொடர்ந்தார்:

"அதாவது நான் கீ கொடுத்தால் ஓடும் பொம்மை மாதிரிதான். இந்த பொம்மைக்கு ரத்தம்தான் கீ. என்னுடைய ரத்தப்பிரிவு A1 பாஸிட்டிவ். இந்த வகை ரத்தம் கிடைப்பது ரொம்பக் கஷ்டம். அதுவும் கோடைக்காலம் என்றால் இன்னும் கஷ்டம். ரத்ததானம் செய்யறவங்க விடுமுறையிலே எங்காவது வெளியூருக்குப் போயிருப்பாங்க. காலேஜ், ஸ்கூல்

எல்லாம் மூடி இருப்பாங்க. 1988-ஆம் வருடம் எனக்கு ஐந்து வயது. இந்தியன் வங்கி என்னைத் தத்து எடுத்துக் கொண்டது. மாதம் ஒருமுறை தவறாமல் யாரேனும் இந்தியன் வங்கி ஊழியர் ரத்ததானம் செய்ய வந்துடுவார். இல்லேன்னாலும் ஏதேனும் ரத்ததான முகாமிலிருந்து நான் உதவி பெற ஏற்பாடு செய்திடுவாங்க'' எனும் விஜயலட்சுமி, தமது வாழ்க்கையைப் பிரச்னையாக எடுத்துக் கொள்ளவேயில்லை; சவாலாகத்தான் எதிர்கொள்கிறார்.

எம்.எஃப்.எம்., எம்.பி.ஏ. போன்றவற்றைத் தபால் மூலமாகவே முடித்திருக்கிறார். இப்போது ஒரு நிறுவனத்தில் பணிபுரிகிறார். "நிறுவனத்தின் பெயர் வேண்டாம். சக ஊழியர்கள் என்னை அடையாளம் காணுவதை நான் விரும்பவில்லை'' என்கிறார். இந்தியன் வங்கி என்ற பெயரை உச்சரிக்கும்போது இவர் குரலில் நன்றி உணர்ச்சி பொங்குகிறது.

விஜயலட்சுமிக்கு இதுவரை 208 யூனிட் ரத்தம் அளித்து உதவியிருக்கிறது இந்தியன் வங்கி. விஜயலட்சுமி மட்டுமல்ல, தலசீமியாவால் பாதிக்கப்பட்ட மேலும் ஏழு குழந்தைகளை இந்தியன் வங்கி தத்தெடுத்திருக்கிறது.

# உயிர்காப்பு ஊழியர்கள்!

1980-ல் முப்பத்தாறு பேரைக் கொண்டு தொடங்கப்பட்டது இந்த ரத்ததான அமைப்பு. ஒரு விதத்தில் இதுவும் ஓர் அறக்கொடைதான். இது தொடர்பாக பெருமைப்பட இந்தியன் வங்கிக்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

இதுவரை 342 ரத்ததான முகாம்களை நடத்தி இருக்கிறார்கள். தமிழகத்தில் இந்த எண்ணிக்கையைத் தொட்டிருப்பது இந்தியன் வங்கி மட்டும்தான். கடந்த 18 வருடங்களாக ரத்ததானம் அளிப்பதில் முதல் இடத்தைப் பெற்று வருகிறது இந்தியன் வங்கி.

> "...தலசீமியாவால் பாதிக்கப்பட்ட மேலும் ஏழு குழந்தைகளை தத்தெடுத்திருக்கிறது வங்கி"



முகாம்கள் ஒரு பக்கம் இருக்க, "அவசரம்'' என்று தகவல் வந்தால் உடனடியாக குறிப்பிட்ட ரத்தப்பிரிவைச் சேர்ந்த ஊழியர் அங்கு ரத்த தானம் அளிக்க விரைகிறார்.

ஊழியர்களோடு நிறுத்திக் கொள்ளாமல் சுமார் பத்தாயிரம் வாடிக்கையாளர்களையும் இந்த நற்பணியில் ஈடுபடுத்துவதில் வெற்றி அடைந்துள்ளனர்.

இதுவரை பதின்மூன்றாயிரம் பேர் ரத்த தான சேவை செய்திருக்கிறார்கள்!

ரத்த தானம் குறித்து கிராமங்களில் ஒரு விழிப்புணர்ச்சி உருவாக்கும் முயற்சிக்காக இந்தியன் வங்கிக்கு ஏழு முறை விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இலவச கண்மருத்துவ முகாம், பல் சிகிச்சை முகாம், நீரிழிவு முகாம் எல்லாம் கிராம மக்களுக்கு இலவசமாகவே நடத்தப்பட்டு வருகின்றன.

# அட... ஆகஸ்ட், 15!



"இந்த வங்கி பிழைக்குமா?" என்று எல்லோரும் கவலைப்பட்ட காலம் ஒன்று உண்டு! 1996- அப்போது தொண்ணூறாவது ஆண்டில் காலெடுத்து வைத்திருந்தது இந்தியன் வங்கி. நிதியமைச்சர் பொறுப்பில் இருந்த நான், டிசம்பர் 28-ஆம் தேதியன்று ஊழியர்கள், அதிகாரிகள் முன்னிலையில் உரையாற்றினேன். இன்று, நூற்றாண்டு விழா கொண்டாடும் சமயத்தில், மிகப் பெரிய சோதனையிலிருந்து மீண்டு, இந்தியாவின் வலிமைமிக்க வங்கிகளுள் ஒன்றாக இந்தியன் வங்கி உயர்ந்திருப்பதைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இந்த வங்கியின் தலைவர் முதல், கடைநிலை ஊழியர் வரையிலான 21,490 குடும்பங்களையும் அந்தக் குடும்பங்களின் தலைவர்களையும் தனித்தனியே பாராட்ட விரும்புகிறேன்.

"இந்தியன் வங்கி சிறப்பாகச் செயல்படுகிறது" என்று தலை நிமிர்ந்து இந்தியா முழுவதும் பேசுவதற்குக் காரணமாக அமைந்த அத்தனை பேருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



எனது தாய்வழிப் பாட்டனாரும் வேறு சில நெருங்கிய உறவினர்களும் நூறு ஆண்டுகளுக்கு முன் இவ் வங்கியைத் தொடங்கியது பலருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் 1907-ஆம் ஆண்டிலேயே ஆகஸ்ட் 15-ஆம் தேதியை அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுத்தார்கள் என்பதுதான் யாருக்கும் தெரியாது! நாற்பதாண்டுகள் கழித்து அதே தேதியில்தானே உலகம் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் இந்தியா விழித்துக் கொண்டது!

'இந்தியப் பொருளாதாரத்தை இயங்கச் செய்யும் ஜீவன் நிதித்துறை; அந்த நிதித்துறையின் இதயமாக விளங்குவது பொதுத்துறை வங்கிகள்; அவ் வங்கிகளுள் இரத்தினமாக ஜொலிப்பது இந்தியன் வங்கி' என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வங்கி நெருக்கடியான காலகட்டத்தைச் சந்தித்தபோது அதன் தலைவர்களாக விளங்கி முன்னடத்தியவர்களை எண்ணிப் பார்க்கிறேன். குறிப்பாக - திருமதி ரஞ்சனா குமார் அவர்களையும், திரு. எம்.பி.என். ராவ் அவர்களையும் பாராட்ட விரும்புகிறேன்.

# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

25-03-07 இதழுடன்
இணைப்பு... 32 பக்கங்கள்

+32




சதம் காணும்

# செல்வக் களஞ்சியம்

- இந்தியன் வங்கி நூற்றாண்டு



நூற்றாண்டு விழா தொடக்கத்தில்
குடியரசுத் தலைவரின் உரை...
100th YEAR
CHARTING THE FUTURE
இந்தியன் பேங்க்
Indian Bank
Since August 15.1907
“ மகாத்மாவின் சிந்தனைக்கு முழு நிரூபணம் ”
இந்தியன் வங்கி


நூற்றாண்டு விழா தொடக்கத்தில்
மத்திய நிதியமைச்சரின் உரை...
“ பொதுத்துறை வங்கிகளுள் ரத்தினமாக ஜொலிப்பது இந்தியன் வங்கி ”
100th YEAR
CHARTING THE FUTURE
इंडियन बैंक
Indian Bank
Since August 15,1907
இந்தியன் வங்கி

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under
PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 25.3.2007




## உங்கள் இந்தியன் வங்கிக் கணக்கை எப்போது வேண்டுமானாலும், எங்கிருந்தும் தொடர்பு கொள்ளலாம்.

இன்டெர்நெட், மொபைல், தொலைபேசி மற்றும் ATMகள் மூலம் உங்கள் வங்கிக் கணக்கை எந்நேரமும் தொடர்பு கொள்ளுங்கள்.

• கிளைகளில் துரிதசேவை கவுண்டர்கள் • இன்டெர்நெட்/மொபைல்/தொலைபேசி வங்கிச் சேவை • குளோபல் விசா/கிரெடிட் கார்டு • மல்ட்டி சிட்டி/இன்ட்ரா-சிட்டி காசோலைகள் • RTGS - இந்தியன் வங்கியின் கிளைகளுக்கிடையேயும்/ நாட்டிலுள்ள அனைத்து முக்கிய வங்கிகளுக்கிடையேயும் அதிவிரைவு நிதி மாற்றல் சேவை • நிதி மேலாண்மை சேவை

மேலும் விவரங்களுக்கு, அருகிலுள்ள இந்தியன் வங்கிக் கிளையை அணுகவும்.

- 1 கோடியே 36 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள்
- 1435 கிளைகள்
- 1000 CBS கிளைகள்

इंडियन बैंक
Indian Bank
*Taking Banking Technology to the Common Man*

EuroRSCG

தலைமை அலுவலகம்: 66, இராஜாஜி சாலை, சென்னை - 600 001 வாடிக்கையாளர் சேவை மைய எண் : 1800 425 1400
இமெயில் : indbank@vsnl.com இணையதளம் : www.indianbank.in

எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச்

## கோடைக்கால சிறப்புத் தள்ளுபடி ஆரம்பம்!

திருமண பட்டுச் சேலைகளின் கைராசியான ஸ்தாபனம்



மைலாப்பூர் **ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ்** -ல்

**18.03.2007** முதல்

பழைய காஞ்சிபுரம்
பட்டு ஜரிகை சேலைகள்
குறைபாடு நிலையிலும்
எக்ஸ்சேஞ்ச் செய்யப்படும்.

மேலும் எங்களிடம்

சில்க் காட்டன் சேலைகள்,
சுங்கடி காட்டன் சேலைகள்,
எம்ப்ராய்டரிங் சேலைகள்,
பேன்ஸி சுடிதார்கள் உள்ளன

காஞ்சிபுரம் திருமண
பட்டுச் சேலைகளுக்கும்
வரவேற்புச் சேலைகளுக்கும்

# 50% தள்ளுபடி விற்பனை

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கு
முகூர்த்தம் மற்றும் திருமண கால சலுகை

SILK MARK

# ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ்™

இந்த
விளம்பரத்தை
எடுத்து வருபவர்களுக்கு
மேலும் 5%
கூடுதல் தள்ளுபடி
உண்டு!

எண்.13/7, வடக்கு மாட வீதி, (அடி தளம்),
கபாலீஸ்வரர் கோயில் அருகில்,
மயிலாப்பூர், போன் : **044-24933097, 24610444**

MASTER & VISA CARDS ACCEPTED

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57 Registered No.TN/CC(S)DN/144/06-08 Licensed to post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08 Registered as a Newspaper in Srilanka.

You can **Win 75% Scholarship**
on total course fee

SCHOLARSHIP APTITUDE TEST 14 SAT 2007

**PROVE YOUR INTELLIGENCE & WIN SCHOLARSHIP**

SAT 2007 | SCHOLARSHIP APTITUDE TEST | FOR DESERVING STUDENTS

இத்தேர்வுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது!

அறிவுத்திறனை நிரூபித்து வெல்லுங்கள்!



**ABOUT THE SCHOLARSHIP APTITUDE TEST**

- No Entry fee for SAT.
- SAT question paper comprises of 25 objective type questions from General Knowledge, Science, Geography & Mathematics.
- SAT question paper will be in English / Tamil.
- No age bar to participate in this test.
- Basic Qualification must be 9th Std.

SAT is conducted only once in a year - Don't miss it.

பயிற்சிக் கட்டணத்தை தவணைமுறையிலும் செலுத்தலாம்

Test Date: APRIL 1 SUNDAY

CSC®
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

Collect FREE admit card from your nearest CSC centres